Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஐப்பசி 13 வெள்ளிக்கிழமை (29-10-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:339

# 2006 டிசெம்பரிலேயேதான் ஜனாதிபதியின் பதவி முடிவு

## ஐ.தே.க. கூறுவதுபோல 2005 டிசெம்பரில் அல்ல; எதிரணிக்குப் பதிலடி தருகின்றார் மங்கள சமரவீர

கொழும்பு, ஒக்ரோபர்29

**"ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தற்போதைய பதவிக்காலம் ஐக்கிய தேசியக் கட்சி கூறுவதுபோல 2005 டிசெம்பரில் முடிவடையாது. அது 2006 டிசெம்பரில்தான் முடிவடையும். "ஆனால், மூன்றாவது முறையாகவும் ஜனாதிபதியாகும் நோக்கம் எதுவும் அவருக்கு இல்லை" - இப்படிக் கூறியிருக்கிறார் அமைச்சரவைப் பேச்சாளரும் சிரேஷ்ட அமைச்சருமான மங்கள சமரவீர.**

அமைச்சரவைக் கூட்ட முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாடு நேற்று கொழும்பில் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. அங்கு செய்தியாளர்களுக்குத் தகவல் வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

1994 இறுதியில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா குமாரதுங்க முதல் தடவையாக வெற்றிபெற்றார். அதன்படி, 2000 டிசெம்பர் வரை ஆறு ஆண்டுகளுக்கு அவரது முதலாவது பதவிக்காலம் இருந்தது.

எனினும், 1999 டிசெம்பரில் - தமது முதலாவது ஆட்சிக் காலத்தின் ஐந்தாவது ஆண்டின் முடிவில் - அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு அவர் அழைப்பு விடுத்தார்.

அத்தேர்தலில் வென்ற அவர், அதையொட்டி 2000ஆம் ஆண்டு முற்பகுதியில் பகிரங்கமாக

(16ஆம் பக்கம் பார்க்க)

## பாலாவின் புத்தகம்: கருத்துக்கூற மங்கள மறுப்பு

கொழும்பு,ஒக்.29

'ஒஸ்லோ' பிரகடனம் என்று கூறப்படுவது தம்மைக் கட்டுப்படுத்தாது என்று விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் அறிக்கை எதனையும் விடுக்கவில்லை. அவர் தமது புத்தகத்தில் இதுபற்றி ஏதேனும் குறிப்பிட்டிருந்தால் அதனை வாசிக்காமல் நான் கருத்து ஏதும் கூறமுடியாது என்கிறார் அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமரவீர.

நேற்றுக் கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் 'ஒஸ்லோ பிரகடனம்' தொடர்பாகப் புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கம் வெளியிட்

(16ஆம் பக்கம் பார்க்க)

### இரகசிய சத்தியப்பிரமாணம் என்பது அபத்தம் என்கிறது ஐ.தே.க.

## பதவி ஆசையாலும் அதிகார வெறியினாலும் 2006 டிசெம்பர் வரை ஆட்சி எனப் பித்தலாட்டம்

கொழும்பு,ஒக்.29

ஜனாதிபதியின் ஆட்சிக் காலம் 2006 ஆம் ஆண்டில்தான் பூர்த்தியடையும் என்பது அபத்தம்.

இரகசியமாகப் பதவிப் பிரமாணம் செய்தேன் என்று அவர் கூறுவது ஒரு பம்மாத்து நாடகம்.

2005ஆம் ஆண்டின் இறுதிக்குள் ஜனாதிபதித் தேர்தலை நடத்தியே தீரவேண்டும்.

இப்படி அடித்துக் கூறுகின்றார் ஐ.தே.கட்சியின் பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தனாயக்க எம்.பி.

தற்போதைய அரசமைப்பின்படி நிறைவேற்று அதிகாரம் கொண்ட முதலாவது ஜனாதி

(16ஆம் பக்கம் பார்க்க)

### நோர்வே அமைச்சரின் வருகையோடு

## பேச்சு முயற்சியில் அடுத்த மாதத்தில் திருப்பம் வரும் என அரசு நம்பிக்கை

கொழும்பு,ஒக்.29

இலங்கை அமைதிப் பேச்சுக்களின் அனுசரணையாளர்களின் தரப்பில் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன் அடுத்த மாதம் இலங்கை வருகின்றார். அவரின் வருகையை அடுத்து, இதுவரை தேங்கிக் கிடந்த அமைதிப் பேச்சை மீள ஆரம்பிப்பதற்கான புதிய திருப்பம் ஏற்படும் என்று இலங்கை அரசு நம்புகின்றது.

இலங்கை அரசின் அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமரவீர இந்த நம்பிக்கையை நேற்றுக் கொழும்பில், தாம் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

நோர்வே வெளிவிவகார அமைச்சர் இங்கு வரும்போது புதிய திருப்பம் பற்றி நாம் அறிவிக்கக்கூடியதாக இருக்கும் என நான் நம்புகின்றேன்.

ஆனால், எல்லாம் புலிகளின் கையில்தான் தங்கியுள்ளன. அவர்களைப் பேச்சு மேசைக்கு அழைத்து வருவதற்கு தன்னால் இயன்ற அனைத்து நடவடிக்கைகளையும் அரசு செய்துவிட்டது. இனி விடயம் புலிகளைப் பொறுத்தது.

பேச்சுத் தொடங்கிய பின்னர் அரசின் மாற்று யோசனைகளைப் பேச்சு மேசையில் புலிகளுக்குத் தெரிவிப்போம்.

புலிகளின் வரைவும் உள்ளது. முன்னைய

(16ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் தலைவர்கள் பலரையும் சந்தித்து அகாஷி நேற்றுப் பேச்சு!

கொழும்பு,ஒக்.29

சமாதான முயற்சிகளுக்கு உத்வேகம் கொடுக்கும் நோக்கில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி அரச மற்றும் எதிர்த்தரப்புத் தலைவர்கள் பலரையும் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

நேற்றுமுன்தினம் கொழும்புக்கு வந்து சேர்ந்த அகாஷி, சமாதானப் பணிகளுக்கான தனது சூறாவளிச் சுற்றுப் பயணத்தை நேற்று ஆரம்பித்தார்.

காலை 8.30 மணிக்குப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசினார் அகாஷி. அலரிமாளிகையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது உட்படப் பல்வேறு விடயங்கள் இந்தச் சந்திப்பின்போது ஆராயப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு அரசு தயாராக உள்ளது என்று பிரதமர், அகாஷியிடம் தெரிவித்தார். சமாதான முயற்சி விடயத்தில் தென்பகுதி மக்கள் அனைவரையும் ஒரே நிலைப்பாட்டுக்குக் கொண்டு வருவதற்கு ஜனாதிபதி மேற்கொண்டுவரும்

(16ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கியை அபகரிக்க முயன்ற 4 பேர் கைது!

திருகோணமலை கோமரங்கடவலப் பகுதியில் கடமையிலிருந்த ஊர்காவற் படைவீரர் ஒருவர் வைத்திருந்த ரி-56 ரக தன்னியக்கத் துப்பாக்கியை நான்கு பேர் கொண்ட குழுவொன்று பறித்துச்செல்ல முயன்றுள்ளது. இவ்வாறு துப்பாக்கியைப் பறித்துச்செல்ல முயன்றவர்கள் எனக் கூறப்படும் நான்கு பேரும் அநுராதபுரம் பொலீஸாரால் நேற்றிரவு கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட நால்வரில் பிரபல வர்த்தகர் ஒருவரின் மகனும் அடங்குவார் என அநுராதபுர பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜயலத் பலகல்ல தெரிவித்தார்.

சந்தேகநபர்களை கோமரங்கடவல பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்க இருக்கின்றார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-க)

## பேச்சு மீண்டும் ஆரம்பிக்கப்படாமல் டோக்கியோ நிதி வழங்கப்படமாட்டாது

### தமிழ்க் கூட்டமைப்பினரிடம் அகாஷி உறுதி

கொழும்பு,ஒக்.29

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படாமல், டோக்கியோ உதவி நிதி இலங்கைக்கு வழங்கப்படமாட்டாது என்று ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி உறுதியளித்தார்.

ஜப்பானியத் தூதரகத்தில் நேற்றுக் காலை தன்னைச் சந்தித்துப் பேசிய தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடமே அவர் இந்த உறுதி மொழியை வழங்கினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்களான இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன், ஜோசப் பரராஜசிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் அகாஷியுடன் சுமார் ஒன்றரை மணிநேரம் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இந்தச் சந்திப்பின்போது தமிழர்களின் நியாயபூர்வமான கோரிக்கையைப் புறக்கணித்த நிலையில், அரசு செயற்படுவது குறித்துக் கூட்டமைப்பு எம்.பிக்கள் விசனம் தெரிவித்தனர். இது குறித்து அவர்கள் அகாஷியிடம் மேலும் தெரிவித்ததாவது:-

★ விடுதலைப் புலிகள் பேச்சுக்குத் தயார் என அறிவித்துள்ளனர். பேச்சை ஆரம்பிப்பதை

(16ஆம் பக்கம் பார்க்க)

NSB
சேமிப்பு மாதம்

சேமிப்பு பெறும் காலத்தில்

ஒக்டோபர் 1 - 31 வரையான NSB சேமிப்பு மாதத்தில்,ஸ்திரி கணக்கில் பணம் வைப்புச் செய்ய ஆரம்பியுங்கள்.

ஸ்திரி கணக்கு வைப்பாளர்கள் பெறும் சலுகைகள்.
• "ரன்சஹன" நகை அடகு பிடித்தல் சேவையில் சாதாரண வட்டி வீதத்திலும் 1% குறைவான வட்டி.
• சுயதேவை கடன்களுக்கு சாதாரண வட்டி வீதத்திலும் 1% குறைவான வட்டி.
• வைப்புகளுக்கெதிரான கடன்களுக்கு சாதாரண வட்டி வீதத்திலும் 0.5% குறைவான வட்டி.

தேசிய சேமிப்பு வங்கி-உங்கள் குடும்ப வங்கி



# போருக்கு அரசு [illegible]ராவதால்தான் யுத்தகால பட்ஜெ[illegible] தயாரித்துள்ளது

## விரைவில் அவசரகாலச் ச[illegible]ம் என எச்சரிக்கின்றது ஐ.தே.கட்சி

ஜனாதிபதியின் மக்கள் ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பு அரசு யுத்தகால வரவு-செலவுத் திட்டம் (பட்ஜெட்) ஒன்றையே தயாரித்துள்ளது.

சமாதானப் பேச்சின்மூலம் இனப்பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கம் ஜனாதிபதிக்கோ இந்த அரசுக்கோ இல்லை. யுத்தத்தின் மூலம் தான் தீர்க்கமுடியும் என்பதே அவர்களுடைய உள்நோக்கம். இதனை ஊர்ஜிதப்படுத்துவது போலவே இவர்களுடைய வரவு-செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு செலவீனங்களுக்குக் கூடுதலான நிதியை ஒதுக்கியுள்ளனர் என ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டுகின்றது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கட்சியின் பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் கூட்டாளிகளான ஜே.வி.பியினர், கடந்த ஆறு மாதமாக இந்த அரசு நாட்டு மக்களுக்கு எதையுமே செய்யவில்லை எனக் குற்றஞ்சாட்டுகின்றனர்.

தமது ஆலோசனையின்றி அமைச்சர்களின் எண்ணிக்கையை அரசு அதிகரித்துள்ளது என்றும் -

படிப்படியாகத் தங்களை ஜனாதிபதி ஓரம் கட்டுகின்றார் என்றும் -

இதனால், மாகாண சபைகளில் அரசுக்கு வழங்கும் ஆதரவைத் தாங்கள் விலக்கிக்கொள்ளப் போகிறார்கள் என்றும் - ஜே.வி.பியினர் கூறுகின்றனர். வாழ்க்கைச் செலவு அதிகரிப்பைக் கண்டித்தும் உணவுப்பொருள்களின் விலைகளைக் குறைக்கும்படி கோரியும் கட்சி பேதமின்றி ஐ.தே.கவுடன் இணை[illegible] மக்கள் ஆர்ப்பாட்டப் பேரணிகளை நட[illegible]துகின்றனர்.

ஜே.வி.பியினரின் எதிர்ப்பைச் [illegible]ளிக்கவும் ஐ.தே.கவின் ஜனநாயகப் போரா[illegible]த்தை முறியடிக்கவும் அரசு மீண்டும் [illegible]ரகாலச்சட்டத்தைப் பிரகடன[illegible]படுத்தவு[illegible] திட்டமிட்டுள்ளது.

இவ்விடயம் [illegible] முப்படைத் தளபதிகளுடனும் பாது[illegible]வுன்ஸில் உறுப்பினர்களுடனும் இர[illegible] ஜனாதிபதி ஆலோசனைகளை நட[illegible]ன்றார் எனத் தகவல் கிடைத்துள்ள[illegible] திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி மீண்டும் நாட்டை ஓர் இருண்ட யுகத்திற்கே இட்டுச்செல்ல முனை[illegible]ன்றார்.

நாட்டு மக்களுக்குக் கொடுத்த வா[illegible]குறுதிகளை நிறைவேற்றமுடியாமல் தடுமா[illegible]ன்றார்.

ஆனால், அமைச்சர் மங்கள சம[illegible]வீரவோ, கொடுத்த வாக்குறுதிகளில் எண்பது வீதமானவற்றை நிறைவேற்றிவிட்டோம் என்று தம்பட்டம் அடிக்கின்றார்.

நாட்டுமக்களுக்காக ஏதாவது ஒன்றைச் செய்துள்ளோம் என்று பகிரங்கமாக இவர்களால் அறிவிக்கமுடியுமா? என்றும் ஐ.தே.க. பிரதிச் செயலாளர் சவால் விடுகின்றார்.

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கப் போகிறார் என ஜனாதிபதி சர்வதேச சமூகத்திற்கும் நாட்டு மக்களுக்கும் பூச்சாண்டி காட்டுகின்றார்.

இப்பொழுது போர்நிறுத்த உடன்படிக்கை நடைமுறையில் இருக்கின்றது. யுத்தம் ஓய்ந்துவிட்டது. இந்தநிலையில், பாதுகாப்புச் செலவீனங்களுக்கு ஏழாயிரத்து ஐந்நூறு கோடி ரூபாவை அரசு ஒதுக்கியுள்ளது. இது அவசியம்தானா?

இதிலிருந்து ஓர் உண்மை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அரசுக்கு சமாதான வழியில் நம்பிக்கை இல்லை. மீண்டும் ஒரு யுத்தத்தை ஆரம்பிக்கவே அது திட்டமிடுகின்றது என்றும் ஐ.தே.க.பிரதிச் செயலாளர் எச்சரிக்கை விடுத்தார்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் முன்னாள் அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனவும் கலந்துகொண்டு விளக்கம் அளித்தார். (எ-க)



கலாநிதி ம.இரகுநாதனின் 'ஈழத்துத் தமிழ் நாவல்களில் சமுதாயச் சிக்கல்கள்', கலாநிதி சி.செல்வரஞ்சிதத்தின் 'பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை நூல்களும் மதிப்பீடும்' ஆகிய இரு நூல்களின் அறிமுகவிழா யாழ். பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் உரையாற்றுவதையும், பேராசிரியர் அ.சண்முகதாஸ், துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி தி.கமலநாதன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். *(படங்கள் : அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

## தீபாவளியை முன்னிட்டு வர்த்தக நிலையங்களை திறக்குமாறு அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.29

எதிர்வரும் தீபாவளிப் பண்டிகை தினத்தை முன்னிட்டு சகல வர்த்தக நிறுவனங்களும் 30-10-2004 தொடக்கம் 11-11-2004 வரை உள்ள சனி, ஞாயிறு மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களில் திறந்து வியாபாரம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன என யாழ்ப்பாணம் வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

விடுமுறை தினங்களில் வேலை செய்யும் ஊழியர்களின் நலன்பேணப்படவேண்டும் எனவும் -

11.11.2004இற்குப் பின் சகல ஞாயிறு, போயா மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களிலும் வர்த்தக ஸ்தாபனங்களை மூடி, வர்த்தக ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கி, சகல வர்த்தகர்களும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும்-

யாழ்.வணிகர் கழகம் விடுத்திருக்கும் செய்தக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## வயல் பார்க்கச் சென்றவர் வரம்பில் வீழ்ந்து மரணம்!

சாவகச்சேரி,ஒக்.29

வயலைப் பார்க்கச் சென்ற குடும்பஸ்தர் வரம்பில் வீழ்ந்து மரணமடைந்த நிலையில் காணப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை சரசாலை வயல்வெளியில் இடம்பெற்றுள்ளது.

சாவகச்சேரி கென்ஸ்மன் வீதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் செல்வராசா (வயது-57) என்ற புடைவை வியாபார நிலைய உரிமையாளரே இவ்வாறு மரணமடைந்தார்.

வீட்டிலிருந்து சரசாலை வெளியில் உ[illegible] தமது நெல்வயலைப் பார்க்கச் சென்[illegible] நீண்டநேரம் கடந்தும் வீட்டுக்குத் திரும்பாததை அடுத்து குடும்பத்தினர் அங்கு சென்று பார்த்தபோது அவர் வரம்பில் வீழ்ந்து மரணமடைந்திருந்ததை அவதானித்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-31-117)

## ஊடகவியலாளர்கள் கண்டியில் ஆர்ப்பாட்டம்

கண்டி,ஒக்.29

கண்டியைச் சேர்ந்த ஊடகவியலாளர் சஞ்சே சுசேல மத்துரட்ட கண்டியில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் தாக்கப்பட்டதை ஆட்சேபித்து கண்டிநகரில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று இடம்பெற்றது.

ஊடகவியலாளர்கள் சுமார் 200 பேர் திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தி மேற்படி தாக்குதல் சம்பவத்துக்குத் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

கண்டி மணிக்கூண்டுக்கோபுரத்திற்கு முன்பாக ஒன்றுதிரண்ட இவர்கள், தமது கண்டனத்தைத் தெரிவிக்கும் பொருட்டு கறுப்புக் கொடியிகளைக் கையில் ஏந்தி நின்றனர்.

## மின்சாரம் வழங்க நடுகை செய்த கம்பம் வீதியில் திடீரென முறிந்து வீழ்ந்தது!

சாவகச்சேரி,ஒக்.29

மட்டுவில் பிரதேசத்திற்கு மின்சாரம் வழங்குவதற்காக நடுகை செய்யப்பட்டிருந்த - உயர் அழுத்த மின் கம்பிகள் பொருத்த ஆயத்த நிலையில் இருந்த - மின்கம்பம் வீதியில் திடீரென முறிந்து வீழ்ந்தது.

இதனால் கம்பத்தில் பொருத்தப்பட்டிருந்த மின் கடத்திலிகளான மாபிள் கோப்பைகள் உடைந்து நொறுங்கின.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை 5மணியளவில் மட்டுவில் வடக்கு, கன்புளியடியில் இடம்பெற்றது.

தெய்வாதீனமாக எவரும் இவ்விபத்தில் சிக்கவில்லை. மின்கம்பம் நில மட்டத்துடன் உடைந்துள்ளது.

சுமார் 35 அடியுள்ள இந்தக் கம்பம் சிறிய அளவிலான $\frac{1}{4}$ அங்குல கனமுள்ள கம்பி வைக்கப்பட்டு தயாரிக்கப்பட்டிருந்தது.

தென் இலங்கையில் இருந்து தருவிக்கப்பட்ட இந்தக் கம்பத்தைக் கட்டட ஒப்பந்தகாரர்களும மேசன்மார்களும் நேற்றுப் பார்வையிட்டதைக் காணமுடிந்தது. (எ-31)

## வவுனியாவில் இருவரைக் காணோம்!

வவுனியா,ஒக்.29

புளொட் இயக்க முன்னாள் உறுப்பினர்கள் இருவர் வவுனியாவில் இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டுள்ளனர் என்று வவுனியா பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 10 மணியளவில் மேற்படி இரண்டு நபர்களும் சைக்கிளில் பண்டாரிக்குளம் பகுதியில் சென்றுகொண்டிருந்தபோது இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டனர் என்றும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடியன் செல்வம் என்றழைக்கப்படும் செல்வராசா செல்லையா(வயது 37) என்பவரும் மனோ என்று அழைக்கப்படும் ஜெயமனோகரன் நவரட்ணம்(வயது 25) என்பவருமே கடத்தப்பட்டுள்ளனர். இது தொடர்பாக அவர்களது உறவினர்களால் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் முறையிடப்பட்டுள்ளது. (எ-க)

## வசதியீனங்களை நிவர்த்தி செய்யக்கோரி

## மானிப்பாய் சந்தை வியாபாரிகள் இன்று அடையாள-பகிஷ்கரிப்பில்

மானிப்பாய் மத்திய சந்தை வியாபாரிகள், வர்த்தகர்கள் இன்று வெள்ளிக்கிழமை ஒரு நாள் அடையாள பகிஷ்கரிப்பில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளனர்.

சந்தையில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்துதருமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் பல தடவைகள் கோரிக்கைவிடுததோம்.

எனினும், இதுவரை எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இதனை அடுத்தே நாம் பகிஷகரிப்பில் ஈடுபடவுள்ளோம் என்று சம்பந்தப்பட்ட வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

மழை பெய்தவுடன் சந்தையில் வெள்ளம் ஓடமுடியாமல் நின்று சேறு உருவாகுதல், மலசல கூட வசதி இல்லாமை, குடிதண்ணீர் வசதி இன்மை, மீன் கழிவுகள் அகற்றாமையினால் துர்நாற்றம் வீசுதல், மின்சார வசதி செய்து கொடுக்காமை, கூரைகள் திருத்தியமைக்கப்படாமையினால் பொதுமக்கள் மழையில் நனைதல் போன்றவையே தாம் முன்வைத்துள்ள கோரிக்கைகள் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (எ-100)

## 70 நாள்களுக்குள் இலங்கையை சூறாவளி தாக்கும் என அபாய அறிவிப்பு

### வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் அதிகரிக்கிறது

கொழும்பு,ஒக்.29

இன்னும் 70 நா[illegible]களுக்குள் இலங்கையை சூறாவளி தாக்கவுள்ளது. இதனால், வடக்கு - கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்கள் பேரழிவை எதிர்கொள்ளவேண்டிவரும். தற்போது ஏற்பட்டிருக்கும் காலநிலை இதனைக் கோடிட்டுக்காட்டுகிறது என இலங்கை வானிலை அவதான நிலையம் அபாய அறிவிப்பு விடுத்துள்ளது.

கடந்த சில வாரங்களாக நாட்டில் பரவலாகப் பெய்துவரும் மழையும், பலமாக வீசிவரும் காற்றும் இலங்கையைத் தாக்குவதற்கான அறிகுறிகளாக இருக்கலாம் என இலங்கை காலநிலை அவதான நிலையத்தின் அவதானி அஜித் வீரவர்த்தன தெரிவித்தார். அவர் இது பற்றி விளக்கமளிக்கையில் தெரிவித்துள்ளதாவது:-

பெரும்பாலும் ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்கள் முடிவுறும் தறுவாயில் உலகின் பலபாகங்கள் சூறாவளியின் தாக்குதலுக்குள்ளாவதுண்டு. கடந்த பல வருடங்களாக சூறாவளித் தாக்கம் காரணமாகப் பல நாடுகள் பேரழிவுகளை எதிர்கொண்டுள்ளன. குறிப்பாக, நவம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களில அதிகளவான சூறாவளிகள் ஏற்பட்டுள்ளன.

தற்போது ஏற்பட்டுள்ள கா[illegible]லநிலை அறிகுறிகளும் கடந்த சில வாரங்கள[illegible]கப் பெய்துவரும் கடும் மழையும் காற்றும் [illegible]லங்கையை சூறாவளி தாக்கும் என்பதற்கா[illegible]ன ஏதுநிலையைக் காட்டுகின்றன.

வங்காள விரிகுடாவுக்கு மேல் தாழமுக்கம் அதிகரித்துவரும் சாத்தியம் தோன்றியுள்ளது. இதனால் இன்னும் 70 நாள்களுக்குள் கடும் சூறாவளி இலங்கையின் வடக்கு - கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களைத் தாக்கும் சாத்தியம் உண்டு. எனவே, இப்பிரதேசங்களில் பாரிய அழிவு ஏற்படக்கூடும் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-ஜ)

## கச்சதீவில் கடந்த புதனன்று ஆயிரம் பனம் விதைகள் நடுகை

மரநடுகைத் திட்டத்தின் கீழ் கடந்த புதன்கிழமை கச்சதீவுப் பிரதேசத்தில ஆயிரம் பனம் விதைகளும் மற்றும் மரக்கன்றுகளும் நடுகை செய்யப்பட்டன.

நெடுந்தீவிலிருந்து கச்சதீவிற்குச் சென்ற நெடுந்தீவு உதவி அரச அதிபர் எம்.பற்றிக் நிறஞ்சன் தலைமையிலான குழுவினரே இவ்வாறு பனம் விதைகளை நடுகைசெய்யும் திட்டத்தினை மேற்கொண்டனர்.

கச்சதீவுப் பிரதேசத்தின் சகல பகுதிகளிலும் இவ்வாறு பனம் விதைகள் பரவலாக நடப்பட்டன.

கச்சதீவு சென்ற குழுவில் நெடுந்தீவுப் பங்குத் தந்தை அருட்திரு. எஸ்.செபநேசரட்ணம் அடிகளார், நெடுந்தீவு உதவி அரச அதிபர் பணிமனை அலுவலர்கள், பிரதேச சபை அலுவலர்க[illegible], தபாலக அலுவலர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், புனித டொன் பொஸ்கோ இளைஞர் மன்றத்தினர் ஆகியோர் அடங்கியிருந்தனர். (எ-112)

## சாரணர் பாசறை

சாவகச்சேரி,ஒக்.29

தென்மராட்சிப் பிரதேச கிளிநொச்சி மாவட்ட சாரணர்களுக்கான வருடாந்த சாரணர் பாசறையும் சாரணர் விழாவும் இன்று வெள்ளிக்கிழமை முதல் மூன்று தினங்களுக்கு கைதடி நவீல்ட் பாடசாலையில் காலை தொடக்கம் நடைபெறவுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை குருளைச் சாரணர் விழா நடைபெறும்.

மூன்று நாள் பயிற்சிப் பாசறையில் சாரணர்களுக்கான அணிநடை, பதிவேடுகள் பேணல், தீப்பாசறை, பாசறை அமைப்பு போன்ற போட்டிகள் இடம்பெறும்.

இப்போட்டிகளில் பங்குபற்றுபவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன. சகல பாடசாலைகளிலுமுள்ள சாரணர்கள் இதில் பங்குபற்றலாம் என மாவட்ட சாரணர் ஆணையாளர் அறிவித்துள்ளார். (எ-31)

## யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானக் கண்காட்சியில்

# நவீன தொடர்புசாதனங்களின் பயன்பாட்டை அறிந்துகொள்வதில் மாணவர்கள் அதீத அக்கறை

முழு உலகத்தையும் தனது கைகளுக்குள் அடக்கி ஆழ்வதற்கு மனிதன் அல்லும் பகலும் அயராது உழைக்கின்றான். விஞ்ஞானம் என்றொரு விந்தையின் மூலம் அதனைச் சாதித்துவிட மனிதன் மேற்கொள்ளும் முயற்சிகள் எண்ணிலடங்காதவை.

கைக்குள் ஒரு கையடக்கத் தொலைபேசியை மட்டும் வைத்துக்கொண்டு விண்ணிலும் மண்ணிலும் அவன் நிகழ்த்தும சாதனைகளும் சோதனைகளும் எத்தனையோ.

அந்தளவிற்கு விஞ்ஞானத்தை எவ்வளவு மதிநுட்பத்துடன் பயன்படுத்தமுடியுமோ அந்தளவு பயன்படுத்தி, தான் நினைத்தவற்றைச் சாதித்துவிட மனிதன் துடியாய்த் துடிக்கின்றான்.

உலகின் எந்த மூலையில் இருந்தாலும் அந்த நபருடன் முகம்பார்த்துப் பேசி, தேவைகளை ஒரு நொடிப் பொழுதில் நிறைவேற்றிவிட பல்வேறு நவீன தொடர்பாடல் வசதிகளை மனிதன் ஏற்படுத்திவிட்டான். அதுதான் இன்று மூலை முடுக்கெல்லாம் 'நெற்கபே' என்று சொல்லப்படுகின்ற இன்ரநெற் இணைப்பைப் பெறும் நிலையங்கள் முளைத்திருக்கின்றன. இதனால் இன்றைய மாணவ சமூகத்தின் மத்தியில் இது ஒரு பிரபலம் வாய்ந்ததாக உள்ளது. சாதாரணமாக யாழ். குடாநாட்டுப் பாடசாலை மாணவர்களில் குறிப்பிட்ட ஒருவீதத்தினர் தமக்கென மின் அஞ்சல் முகவரிகளையே வைத்திருக்கின்றார்கள். இந்த 'இன்ரநெற்' எவ்வாறு எமது பாடசாலை மாணவர்களை ஆட்கொண்டுள்ளது என்பதை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானக் கண்காட்சியிலும் காணக் கூடியதாக இருந்தது.

அங்குள்ள கணனி விஞ்ஞானப்பிரிவில் உள்ள அம்சங்களை மாணவர்கள் மிகவும் உன்னிப்பாக அவதானித்தமையைக் காணக்கூடியதாக இருந்தது. குறிப்பாக மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பாடசாலைகளைச்சேர்ந்த மாணவர்கள் இந்த நவீன தொடர்பு சாதன வசதிகளைப் பற்றி அறிந்துகொள்வதில் ஆர்வமாக இருந்தமை அனைவரையும் கவர்ந்தது.



கணனி வலையமைப்பைப் பார்வையிடும் கிழக்கு மாகாண மாணவர்கள்

மிக நீண்ட தூரத்திலிருந்து இங்கு வந்துள்ளமையால் இந்தக் கண்காட்சியின் மூலம் எந்தளவு உச்ச பயனைப் பெறமுடியுமோ அந்தளவு பெற்றிட வேண்டும் என்பதில் மாணவர்கள் அதீத அக்கறை கொண்டிருந்தனர். மாணவர்களின் அறிவுப் பசியைத் தீர்த்துவைப்பதற்கு அவர்களுடன் வந்த ஆசிரியர்களும் துணையாய் இருந்தனர்.

கண்காட்சி இன்றும் நாளையும் தொடர்கின்றது.

நேற்றைய கண்காட்சியைப் பாாவையிட வந்தோர் வழங்கிய கருத்துக்கள் இங்கே பிரசுரமாகின்றன.

**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**
**உள்ளக ஆசிரிய மாணவன் நவராஜா பிரசாந்தன்**



கண்டறிதல் முறை கற்பித்தலுக்கு இப்பொருள்காட்சி வழிகாட்டி நிற்கின்றது. ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு மாணவர்களின் செயன்முறையான கற்றலுக்கு இது வழி கோலுகின்றது. அனைத்துப் பாடசாலைகளும் ஆய்வு கூட வசதிகளைத் கொண்டிருக்கவில்லை.

ஆய்வுகூடங்களைக் கொண்டுள்ள பாடசாலைகளும் கூட முழுமையானவைகள் என்று கூறமுடியாது. அங்கும் ஏதோ பற்றாக்குறை இருந்து கொண்டே இருக்கின்றது.

இக்கண்காட்சியில் முழுமையான செயன்முறைகள் நுட்பமான முறையில் செய்துகாட்டப்படுகின்றன.

இதன்மூலம், ஆய்வுகூடப் பயன்பாடு குறைந்த பிள்ளைகளும் ஆய்வுகூடம் இல்லாத பிள்ளைகளும் கூடிய பயன்பாட்டைப் பெற்றுக்கொள்ளச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

கணனிக் கூடத்தைப் பொறுத்தவரையில், நவீன உலகியல் பிரதேசங்களை வெளிக்கொண்டு வந்துள்ளன. குறிப்பாக, கையடக்கத் தொலைபேசி ஊடாகக் கணனி வலை அமைப்புக்களைக் கையாளும் முறைகள், செயல்முறைகளால் காட்டப்படுகின்றது.

தகவல் தொழில்நுட்பம் ஒரு பாடமாகப் பாடசாலை மட்டத்தில புகட்டப்பட்டு வருகின்றது. இந்நிலைமையில் இவைகள் மாணவர்களிடையே கணனி தொடர்பான ஒரு தூண்டலை ஏற்படுத்தும்.

தாவரவியல் பிரிவில் மரநடுகை, மரங்களைப் பாதுகாத்தல் போன்ற விடயங்கள் சம்பந்தமான பல நல்ல விடயங்கள் காணபபட்டன. இவைகள் எமது மக்களுக்கும் மாணவர்களுக்கும் விழிப்புணர்வாகவும் அமைகின்றது. இது சூழலை சமநிலைப் படுத்துவதற்கும் கூடிய வழிவகைகளை ஏற்படுத்தியுள்ளது.

கடல் வளத்தின் பயன்பாடு மற்றும் எமது மண்ணின் பொருளாதர வளம் போன்றவற்றையும் கடற்றொழில் வளத்தையும் கூட இத்துறையும் வெளிப்படுத்துகின்றது.



**அமெரிக்கப் பிரஜையான**
**வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில்**
**ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியை**
**செல்வி டயன் பெரிஸ்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் கண்காட்சியில் நின்று அளிக்கின்ற விளக்கங்கள் எளிமையானதாகவும் விளங்கக்கூடியதாகவும் மாணவர்களுக்கும் எமக்கும் இருக்கின்றது.

எமது நாட்டு மாணவர்களுடன் ஒப்பிடுகையில் இங்குள்ள மாணவர்கள் கண்காட்சிகள் மூலம் கற்பதிலும் அவற்றைத் தேடுவதிலும் செயற்படுத்துவதிலும் கூடிய ஆர்வமுடையவர்களாக இருக்கின்றார்கள்.

வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள்கூட நீண்ட தூரம் இருந்து வந்து இங்குள்ள கண்காட்சி மூலம் பயன்பாடுகளை பெற்றுக்கொள்கின்றதைப் பார்க்கும் போது சந்தோஷமாக இருக்கின்றது.

உயர்தர வகுப்பு மாணவர்கள் கூடிய பயன்பாட்டை இக் கண்காட்சி மூலம் பெற்றுக்கொள்வார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. பார்வை மூலமான கல்வியூட்டல் மாணவர்களுக்குக் கூடிய பயன்பாட்டை வழங்குகின்றது. இத்தகைய கண்காட்சிகள் கற்றலுக்குப் பெரிதும் உதவிசெய்ய முடியும்.

**மன்னார் தேசியப் பாடசாலையான செண்.சேவியர் பெண்கள் மகளிர் கல்லூரி ஆய்வுகூட உதவியாளர் திருமதி பொன்ராஜா றொபினா**



பாடசாலை ஆய்வுகூடங்களில் மாணவர்களுக்கு வேண்டிய கற்றலுக்கான அனைத்து வசதிகளும் கிடையாது. இக்கண்காட்சியில் பல பரிசோதனைகள் யாவும் ஒழுங்குபடுத்தப்பட்டநிலையில் இருந்தபடியால் மாணவர்கள் நேரடியான விளக்கங்களைப் பெறக்கூடியதாகவும் இருந்தது.

மின்னியல் பகுதியில் அதிக நவீன உபகரணங்களையும் செயற்பாடுகளையும் கூட அறியக்கூடியதாக இருந்தது. இவற்றைப் பற்றிப் போதியளவு அறிவை மாணவர்கள் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்துள்ளது.

2005 ஆம் ஆண்டு விஞ்ஞான, கணிதப் பிரிவுப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு முழுமையான வெற்றிக்கு வழிகாட்டக் கூடிய ஒரு கண்காட்சியாக இருக்கின்றது.

இரசாயனம், பௌதிகம், விலங்கியல், தாவரவியல் ஆகிய துறைகளில் உள்ள விடயங்களைப் பரீட்சையுடன் உள்ளடக்கி உருவாக்கப்பட்டுள்ளது.

தாவரவியல் பெயர்கள் மற்றும் அவற்றினுடைய பயன்பாடுகள் போன்றவற்றையும் கூடத் தெரிந்துகொள்ளக்கூடியதாய் இருந்ததுடன் புதிய தாவரங்களையும்கூடப் பார்வையிடக் கூடிய வாய்ப்புக்களும் ஏற்பட்டுள்ளது.

வரும்போது பிரயாணச்சுமை, பொருளாதாரச் சுமைகளையிட்டு கவலைப்பட்டோம். இங்கு வந்து பார்த்தபின்னர் இவைகள் எல்லாம் மறைந்து மனதில் புதுத்தெம்பும் ஆர்வமும் ஏற்பட்டுள்ளது.

**மன்னார் தேசிய பாடசாலையான செண். சேவியர் மகளிர் கல்லூரி 2006 ஆம் ஆண்டு உயிரியல் மற்றும் கணிதப்பிரிவு மாணவிகளான செல்வி இராஜசிங்கம் கார்மேரி பற்றிமா, அமலதாசன் இவோன்**





கண்காட்சியில் ஜி.ச.ஈ. உயர்தர கணித, விஞ்ஞானப் பாடங்களுக்கான பாடவிதானங்கள் முழுமையாக வைக்கப்பட்டுள்ளன. இம்முறை பரீட்சைக்குத் தோற்றும் மாணவ சமுதாயம் அதிக நன்மையை அடைய வாய்ப்புக் கிடைத்துள்ளது.

கணிதத்துறை, கணித வரலாறு சம்பந்தமான புதிய விடயங்களை இங்கு வந்துதான் அறிந்துள்ளோம். இதேபோன்று பெண் விஞ்ஞானிகள் இருந்துள்ளார்கள் என்பதையும் இக் கண்காட்சி மூலமே அறியக்கிடைத்துள்ளது.

கணணியில் புதிய தொழில் நுட்பங்கள், கணிதக் கணக்கீடுகளை விரைவாகத் தீர்வுசெய்வதற்கான முறையும்கூட அறியக கூடியதாக இருந்துள்ளது.

அதிகமாக கணிதப்பிரிவு மாணவர்களும் இதன்மூலம் பயனடைய முடியும்.

**பலாலி ஆசிரிய கலாசாலை விஞ்ஞான பாட ஆசிரிய மாணவர் ஏகாம்பரம் காந்தயுபன்**



ஜி.சீ.ஈ சாதாரண, உயர்தர வகுப்பு மாணவர்களின் பாட விதானங்களை உள்ளடக்கி இக்கண்காட்சி காணப்படுகின்றது. மாணவர்களின் பார்த்தல் செயற்பாட்டிற்கு முழுமையான ஏற்பாடுகளை இக்கண்காட்சி கொண்டுள்ளது.

அநேகமான பாடசாலைகள், ஆய்வு கூடங்களையும் மற்றும் இரசாயனப் பொருள்களையும் கொண்டிருக்கவில்லை. இக்குறைபாடுகள் காணப்பட்ட பாடசாலை மாணவர்கள் இக்கண்காட்சி மூலம் ஓரளவுக்கு அதனை நிவர்த்திக்கவும் அறிந்துகொள்ளவும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

ஆசிரியர்களுக்கும் கூட கற்றல, கற்பித்தலுக்கு வேண்டிய பல வழிகாட்டல்களை இங்கு பெறக் கூடிய சந்தர்ப்பமும் கிடைத்துள்ளன. மேலதிகமாக அறிவைப் பெறக்கூடியதுடன் கற்பித்தலுக்கான துணைச் சாதனங்கள் உருவாக்கம் பற்றிய அறிவையும் பெற முடிந்துள்ளது. குறிப்பாக, கனிய நெய் பிரித்தெடுப்பு முறை, இழைய வளர்ப்பு போன்ற பரிசோதனைகளை பாடசாலை ஆய்வு கூடங்களில் மேற்கொள்வதில்லை.

இங்கு இவைகள் எல்லாம் பரிசோதனைகளுடன் நேரடியாகச் செய்தும் காட்டப்பட்டுள்ளன. இலத்திரனியலிலும் கூட செயல்முறைப் பயிற்சிகள் காட்டப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கதாகும்.

**வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி பௌதிகவியல் ஆசிரியை திருமதி குகன் மாதினி**



பௌதிகவியல் துறையில் மட்டும் நான்கு மணித்தியாலங்களைச் செலவு செய்துள்ளேன். ஜி.சீ.ஈ. உயர்தர பௌதிகவியல் பாடத்திற்கான முழு விடயங்களும் இங்கு செயல்முறைகளுடன் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இங்கு சிந்தனையைத் தூண்டக்கூடிய புதிர்கள் இலத்திரனியல் உபகரணங்களும் கூடக் காணப்படுகின்றன. இலத்திரனியல் கருவிகள் பலவற்றையும் மாணவர்கள் அறிந்துகொள்ள வாய்ப்புக்கள் கிடைத்துள்ளன. பாடசாலையில் இத்தகைய முழுமையான வசதிகளும் இல்லை.

## கொட்டும் மழைக்கு மத்தியிலும் கிழக்கிலிருந்தும் மாணவர்கள் வந்தனர்

தொகுப்பு: தேவா,நவம்
படங்கள்: தீபன்

**வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி 2006ஆம் ஆண்டு உயிரியல் மாணவி செல்வி ரவீந்திரன் சந்தியா**



இரசாயனவியல் துறையில் செயல்முறைகள் செய்யப்பட்டு பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இவற்றை விளக்குவதற்கு வேண்டியவர்கள் குறைவாக இருந்தமையால் கூடிய விளக்கத்தினைப் பெறமுடியவில்லை. ஆனாலும், பௌதிகவியல் துறையில் கூடிய விளக்கத்தினைத் தந்துள்ளார்கள்.

விஞ்ஞான அறிவைப் பெறுவதற்கு கூடிய உந்து சக்தியாக இக்கண்காட்சி இருக்கின்றது. இங்கு எமது பாடசாலை ஆய்வுகூடங்களில் இல்லாத பல புதிய ஆய்வுகூட உபகரணங்களையும், பல பரிசோதனைகளையும் கூட பார்க்கவும் கற்றுக் கொள்வதற்கும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

**திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்துமகளிர் கல்லூரி விஞ்ஞானப்பிரிவு மாணவி செல்வி பிறேமகாந்தன் திவ்வியா**



கண்காட்சியில் எமது பாடங்களுடன் தொடர்புடைய பல புதிய விடயங்களை நாங்கள் இங்கு பார்த்துள்

(15ஆம் பக்கம் பார்க்க)

# இதய அஞ்சலி

ஹாட்லிக் கல்லூரிப் பழைய மாணவர் மன்றக் கொழும்புக் கிளையினர் 27-10-2004 இல் திடீரென அமரரான

## பொ.வேணுகோபால வாணிதாசன்

அவர்களுக்கு தமது இறுதி அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றனர். பழைய மாணவனும் கல்லூரியின் அதிபருமாக அவர் சிறப்புறத் திகழ்ந்ததையும் நினைவுறுத்தி, குடும்பத்தினர் அமைதியுற ஆறுதலும் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்தனையும் செய்கின்றனர்.

- செயற்குழு.

(சி-38535)(34-11-44)


# மானிப்பாய் பகுதியில் முதிர்ந்த வாகை மரம் முறிந்து வீழ்ந்தது

மானிப்பாய்,ஒக்.29

மானிப்பாய் பிரதான வீதியில் நீண்ட காலமாக நின்ற முதிர்ந்து பருத்த வாகைமரம் கடந்த இரண்டு நாள்களுக்கு முன்னர் முறிந்து வீழ்ந்துள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேச சபை முன்பாக நின்ற இந்த வாகை மரம் முறிந்து வீழ்ந்ததால் மின்சார வயர்கள் துண்டிக்கப்பட்டதுடன் பிரதேசசபையின் நூலகக் கட்டடமும் சேதமடைந்துள்ளது.

இதன் காரணமாக இப்பகுதிக்கான மின்சாரம் தடைப்பட்டுள்ளது.

இம்மரம் சுமார் 60 வருடங்களுக்கு மேற்பட்ட மரம் என இப்பகுதியில் உள்ள வயது முதிர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

(10-90-86)


# புலமைப் பரிசில்-2005

ஏழாலை, விழிசிட்டி அமரர் ம.கந்தையா குடும்பத்தினர் ஞாபகார்த்தமாகப் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவானோரில் முதலிடம்பெற்ற ஏழாலையைச் சொந்த இடமாகக் கொண்ட இரு மாணவருக்கு அவர்களின் மகன் திரு. க. வைரவநாதன் அவர்களால் புலமைப்பரிசில் வழங்கப்படும். பொறியியல், மருத்துவத்துக்கு முன்னுரிமை அளிக்கப்படும். விவரங்களுடன் நேரில் சந்திக்கவும்.

த.சிவஞானசுந்தரம்
அறங்காவலர், அத்தியடி முருகமூர்த்தி ஆலயம், ஏழாலை.

(38075)(34-11-46)



# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 2942611 இலிருந்து 2955665 வரை

சீட்டிழுப்பு இல. 1551
திகதி 27.10.2004

வெற்றி எண்கள்
08 20 23 43 53

போனஸ் எண்
34

ஜக்பொட் பரிசு ரூபா.49,39,000/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத்தொகை |
|---|---|---|---|
| 5 | - | 49,39,000/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 01 | 1,00,000/- | 1,00,000/- |
| 4 | 66 | 10,000/- | 6,60,000/- |
| 3 | 4,056 | 500/- | 20,28,000/- |
| 2 | 66,678 | 20/- | 13,33,560/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 08ம் எண் (போனஸ் எண் தவிர்ந்து) | 81,569 | 10/- | 8,15,690/- |

இந்த சனிக்கிழமை ஜக்பொட் வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ. 54,37,250/-

Rs. 55,71,800/-

தொடர் இல. 3889674 க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுக்கள் 2004 ஒக்டோபர் 30 ஆம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகை, தையல் இயந்திரம் மற்றும் சைக்கிள்கள் வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

3880595-5-13
3887698-1-18
3884954-2-61
3888468-7-65
3875373-6-10

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.



## THE ROYAL COLLEGE OF JAFFNA

1 இலிருந்து - O/L வரை தமிழ், ஆங்கிலம், Spoken English, கணிதம், விஞ்ஞானம். கட்டணம் 150/=. தனித்தனிக் கவனம் கொடுக்கப்படும்.

(38076) 426(302), K.K.S. Rd., Jaffna.


# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்

முதலாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள்
கல்வியாண்டு - 2003/2004

முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தின் முதலாம் வருட மாணவர்களுக்கான BAd./B.Com. இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் 26.11.2004 திகதிவரை பீடாதிபதி அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்படும்.

மீள்பரீட்சைக்குத் தோற்றுவோர் ஒரு பாடத்துக்கு (பழைய பாடத்திட்டம்) ரூபா 50 வீதம் பல்கலைக்கழக காசாளரிடமோ அல்லது பல்கலைக்கழக மக்கள்வங்கி கிளையிலோ செலுத்திய பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்தல்வேண்டும். விண்ணப்பப்படிவங்களை 01.11.2004 முதல் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(சி-38536) - பதிவாளர்.


# கண்ணீர் அஞ்சலி

தீவகக் கல்விப் பணிப்பாளர்
அமரர்

## பொ.வேணுகோபால வாணிதாசன்



அவர்களது அகால மரணச்செய்தி கேட்டு அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் அடைகின்றோம். அன்னாரின் இழப்பால் பரிதவித்து நிற்கும் அன்புத் துணைவியாருக்கும் பிள்ளைகள் மற்றும் உற்றார், உறவினர்களுக்கும் எமது வித்தியாலய சமூகம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

யாழ். நயினாதீவு மகா வித்தியாலய சமூகம்.

(38072)(34-11-46)



# தேசிய ஆங்கில டிப்ளோமா பரீட்சை மையங்களும், திகதியும்

SAAMSTECH இனால் நடத்தப்படும் தேசிய ஆங்கில டிப்ளோமா பரீட்சை October 30 (நாளை) கீழ்வரும் மையங்களில் நடத்தப்படும்.

கொழும்பு: இந்துக் கல்லூரி - இரத்மலானை
வவுனியா:- விபுலானந்தாக் கல்லூரி
திருகோணமலை:- விக்னேஸ்வரா மகாவித்தியாலயம்
மட்டக்களப்பு:- இந்துக் கல்லூரி
கிளிநொச்சி :- மத்திய கல்லூரி
யாழ்ப்பாணம் :- J/T மற்றும் J/C தொடர் இலக்கங்கள்
யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி
J/W தொடர் இலக்கங்கள்
யாழ்.மத்திய கல்லூரி

குறிப்பு: தபால் தாமதம் காரணமாக பரீட்சைக்கு விண்ணப்பித்து அனுமதி அட்டை கிடைக்காதவர்கள் பரீட்சை மண்டபங்களுக்கு நேரில்சென்று அடையாளத்தினை உறுதிப்படுத்திப் பரீட்சையில் கலந்துகொள்ளலாம்.

பரீட்சை நிர்வாகம்
SAAMSTECH.

(சி-38530)(34-11-44)


# கேள்வி அறிவித்தல்

## அரசாங்க அதிபர் அலுவலகம், கச்சேரி, யாழ்ப்பாணம்

1. மாவட்ட செயலாளர், யாழ்ப்பாணம் அவர்களினால் வைத்திய அதிகாரி விடுதி (இல.1) திருத்த வேலை, புற்றுநோய் வைத்தியசாலை, தெல்லிப்பழை. வேலைக்குரிய கேள்விகள் யாழ்ப்பாண அரசாங்க அதிபரினால் நியமிக்கப்பட்ட கேள்விச்சபைத் தலைவரினால் 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் அரசாங்க அதிபர் செயலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.
2. நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) கட்டடம் நிர்மாணிப்பதற்கு தரம் எம்.8 இலும், அல்லது அதற்கு மேல் பதிவுசெய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர் மாத்திரம் கேள்விப் பத்திரம் கோருவதற்கு தகுதியுடையோர் ஆவார்.
3. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தினைச் சமர்ப்பித்தல்வேண்டும்.
4. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தை நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் சமர்ப்பித்து, தகுதியுடையோர் மட்டும் உரிய கேள்வி வைப்புப் பணத்தைச் செலுத்த அனுமதிக்கப்படுவர். கேள்வி வைப்புப் பணத்தை யாழ்ப்பாணம் பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்று கேள்விப் பத்திரங்களை 2004 ஆம் ஆண்டு நவம்பர்மாதம் 09 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை நிறைவேற்றுப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப்பணம் |
|---|---|---|
| வைத்திய அதிகாரி விடுதி (இல.1) திருத்த வேலை புற்றுநோய் வைத்தியசாலை தெல்லிப்பழை | 65,000/= | 750/= |

கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம். அத்துடன், ஏதும் மேலதிக விவரங்களை யாழ்ப்பாணம், மாகாணக் கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்று எந்திரியிடம் இருந்து வேலை நாள்களில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

மாவட்டச் செயலாளர்,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.
29-10-2004.

செ.பத்மநாதன்
அரச அதிபர்,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

(சி-38531)(34-11-44)


# துயர் பகிர்கின்றோம்



எமது சக நண்பன்
செ.ஜெயராஜனின் அன்புத் தந்தையார்

## சுப்பிரமணியம் செல்வராசா

அவர்களின் திடீர் மறைவையிட்டு மனவேதனை அடைகின்றோம். அன்னாரின் இழப்பால் பரிதவிக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பொறியியற் பீட மாணவர்கள்,
மொறட்டுவை பல்கலைக்கழகம்.

(38066) (26-34-11-44)



# துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலை ஆசிரியர் திரு.செ.நடேசகாந்தனின் அன்பு மாமனார்

## அமரர் செல்லையா பரம்சோதி

அவர்கள் (26.10.2004) இறைபதம் அடைந்த செய்திகேட்டு கவலையடையும் இவ்வேளையில், அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

யாழ்/கோட்டடி நமசிவாய வித்தியாலயம்.
யாழ்ப்பாணம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

(38064)(42-11-44)



# இதய அஞ்சலி

தீவக வலயக் கல்விப் பணிப்பாளரும், முன்னாள் முல்லைத்தீவு மாவட்ட விஞ்ஞான உதவிக்கல்விப் பணிப்பாளரும், மாந்தை கிழக்கு கோட்டக் கல்விப் பணிப்பாளரும் ஆகிய

அமரர்

## பொன்னுத்துரை வேணுகோபால வாணிதாசன்

அவர்களின் அகாலமரணச் செய்திகேட்டு அதிர்வடைந்தோம். முல்லைத்தீவு மாவட்டத்தில் அமரர் அவர்கள் கடமை ஆற்றிய காலத்தில் எமது மாணவச் செல்வங்களின் கல்வி மேம்பாட்டுக்காக ஆற்றிய சேவைகள் அளப்பரியன. பரீட்சைச்சபையில் செயலாளராக இருந்து ஆற்றிய தொண்டுகள் சொல்லமுடியாதவை. அமரரின் திடீர் இழப்பால் துயருறும் அன்புத் துணைவியார், அருமைக் குழந்தைகள், சுற்றத்தார் அனைவருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்திடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வலயக் கல்விப் பணிமனை,
முல்லைத்தீவு.

வலயக் கல்விப்பணிப்பாளரும்,
ஊழியர் நலன்புரிச்சங்கமும்.

(C/38534)(42-11-44)

உதயன்

## துணிச்சல் உண்டா?

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைவின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை மீளத் தொடங்குவதற்கு துணிகரமான நகர்வுகளை உறுதியுடன் முன்னெடுக்கும் படி சந்திரிகா அரசுக்கு புலிகள் இயக்கம் அழைப்பு விடுத்திருக்கின்றது.

"தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான அரசியல் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைதான் அடிப்படையாக அமையமுடியும். இது புலிகள் இயக்கத்தின் உறுதியான நிலைப்பாடாகும்." - என்று சுட்டிக் காட்டியுள்ள புலிகள், அந்த அடிப்படையில் பேச்சுக்களைத் தொடங்க துணிகர நகர்வுகளை உறுதியுடன் முன்னெடுக்க அரசு முன்வரவேண்டும் என்று கோரியிருக்கின்றனர்.

அத்தகைய நகர்வுகளை முன்னெடுக்க அரசுத் தலைவியான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தயாரா என்பதுதான் இப்போதைய கேள்வியாகும்.

அவ்வாறான துணிகர நடவடிக்கைகளை முன்னெடுக்கும் தீர்மானத்தை மேற்கொள்ளக் கூடிய எண்ணமும், விருப்பமும், சிந்தனையும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு உள்ளனவா என்பதற்கு முன்னர், அத்தகைய முடிவை முன்னெடுப்பதற்கான துணிச்சல் ஜனாதிபதிக்கு உண்டா என்ற கேள்வி எழுகின்றது.

இந்தக் கேள்விக்கு விடை காண்பதற்கு, ஜனாதிபதியின் துணிச்சல் தொடர்பாக ஒரு சில தினங்களுக்கு முன்னர் வெளியான செய்திகளை நாம் நோக்குவது நல்லது.

ஜனாதிபதியின் 'துணிச்சல்' குறித்து அவ்வாறு பிரஸ்தாபித்தவர் வேறுயாருமல்லர், ஜனாதிபதி குமாரதுங்க ஆட்சி அதிகாரத்தைப் பிடிப்பதற்காக அமைத்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக்கட்சியான ஜே.வி.பியைச் சேர்ந்த விமல் வீரவன்ஸ எம்.பி.தான்.

'நிறைவேற்று அதிகாரத்தைக் கூட நிறைவேற்ற முடியாமல் பெட்டிப் பாம்பாக - நடைப்பிணமாக - ஓய்வு பெற்ற பொலீஸ்காரன் அதிகாரமின்றி சீருடை தரித்திருப்பதுபோல - இருந்த ஜனாதிபதிக்கு நிறைவேற்று அதிகாரத்தை உறுதிப்படுத்தியவர்கள் ஜே.வி.பியினரான நாங்களே; ஜனாதிபதிக்கு அவரது அதிகார விடயத்தில் உயிரூட்டி, உத்வேகமளித்து வலுப்படுத்தியவர்கள் நாங்களே" - என்று தம்பட்டம் அடிக்கின்றார் விமல் வீரவன்ஸ.

அவரது ஜம்பத்தைப் பார்க்கும்போது, ஜனாதிபதி குமாரதுங்கவின் இன்றைய வலுவான நிலைக்கும் எதிர்காலத்தில் அவர் துணிச்சலாக நடப்பதற்கும் தேவையான பலமும், வலுவும், திடமும் ஜே.வி.பியின் கையில் தான் உள்ளன.

தற்போதைய ஐ.ம.சு. கூட்டமைப்பு அரசுக்கு அதன் பரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. வழங்க வரும் ஆதரவை விலக்கிக் கொள்ளுமானால் அந்த அரசு அடுத்த நிமிடமே கவிழும் என்பது பெரும்பாலும் தெரிந்த விடயம்தான். அப்படி நிகழ்ந்து ஆட்சி அதிகாரம் கைமாறுமானால் விமல் வீரவன்ஸ கூறுவது போன்று நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பழையபடி நிறைவேற்ற முடியாத ஜனாதிபதியாகி விடுவது தவிர்க்க இயலாததாகும்.

எனவே, ஆட்சி ஜே.வி.பியினரின் கைகளில் என்பது மறுக்கப்படமுடியாத உண்மையாகும்.

இந்தப் பேரினவாதிகள் தாமாக விரும்பி நாட்டின் நல்ல எதிர்காலத்துக்கேற்ற ஆக்கபூர்வமான முடிவை எடுத்துச் செயற்பட ஜனாதிபதி குமாரதுங்கவுக்கு ஆதரவும் துணிச்சலும் கொடுத்தாலன்றி ஜனாதிபதி தாமாக இது விடயத்தில் துணிச்சலான முடிவை எடுபபார் என்று எதிர்பார்ப்பது துர்லபமே.

அதேசமயம், புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைவின் அடிப்படையில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவதை ஜே.வி.பி உள்ளிட்ட பேரினவாதக் கட்சிகள் அடியோடு எதிர்க்கின்றன. எனவே, இந்த விடயத்தில் அவை ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கப் போவதில்லை என்பதும் உறுதி.

ஆகவே, விடுதலைப் புலிகள் சுட்டிக் காட்டியிருப்பது போன்று பேச்சைத் தொடங்குவதற்கான துணிகரமான நகர்வுகளை உறுதியுடன் அரசு முன்னெடுப்பதற்கு வாய்ப்புகள் மிகமிகக் குறைவே.

அவ்வாறு பேச்சைத் தொடங்காமல் இழுத்தடிப்பதன் விளைவு என்ன? அதனையும் புலிகளே சுட்டிக் காட்டியிருக்கின்றனர்.

"சமாதானப் பேச்சுக்கள் ஆக்கபூர்வமானதாக அமைய வேண்டும் என்று சிங்கள அரசு விரும்பினால் புலிகள் சமர்ப்பித்துள்ள வரைவின் அடிப்படையில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவேண்டும் என்ற அரசியல் யதார்த்தத்தை ஏற்றுக் கொள்ளவேண்டும். அரசு அது ஏற்றுக்கொள்ள மறுப்பது என்பது சமாதான வழி மூலமான அரசியல் தீர்வுக்கு சிங்கள அரசு தயாரில்லை என்பதையே காட்டுவதாக இருக்கும்" - என்று புலிகள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

### காரைநகர் கடற்கரையில்

# கால்கள் கட்டப்பட்ட நிலையில் 3மாடுகள் இறந்து கரைஒதுங்கின

காரைநகர், ஒக்.29

காரைநகர், தோப்புக்காடு கடற்கரையில் மூன்று மாடுகள் கால்கள் கட்டப்பட்டு இறந்த நிலையில் கரை ஒதுங்கி உள்ளன.

கடந்த சனிக்கிழமை தோப்புக்காடு கடற்கரையில் கால்கள் பிணைக்கப்பட்ட நிலையில் இறந்து காணப்பட்ட மூன்று மாடுகளையும் காரைநகர் தெற்கு விவசாய சம்மேளனத்தின் உதவியுடன் அப்பகுதி பொதுமக்கள் கடற்கரையில் புதைத்தனர்.

காரைநகர் பகுதியின் கடற்கரையில் இருந்து ஊர்காவற்றுறைப் பகுதிக்கு இரவு வேளைகளில் சட்ட விரோதமாகப் படகுகள் மூலம் மாடுகள் கடத் தப்படுவதாகவும் -

இவ்வாறு படகுகள் மூலம் மாடுகள் கடத்திச் செல்லப்பட்டபோது கடற்படையினர் படகினை வழிமறித்து விசாரணை செய்ய முயன்ற வேளையில் மாடுகளை கடலில் தள்ளிவிட்டு படகுடன் கடத்தல்காரர்கள் தப்பிச் சென்றிருக்கலாம் எனவும் கூறப்படுகின்றது.

இவ்வாறு கடலில் தள்ளப்பட்ட மாடுகளே கால்கள் பிணைக்கப்பட்ட நிலையில் இறந்து கரையொதுங்கி இருக்கலாம் எனவும் அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

(10-73)

# கரவெட்டியில் நாளையும் மறுதினமும் கலாசார விழாவுக்கு பெரியளவில் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஒக்.29

கரவெட்டி பிரதேச சபை நடத்தும் பிரதேச கலாசார விழா நாளையும், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலைஞானகேசரி மன்னவன் கந்தப்பு அரங்கில் நடைபெறவுள்ள முதலாம் நாள் நிகழ்வுகள் பிற்பகல் 2 மணிகசு ஆரம்பமாகவுள்ளன.

வடமராட்சி தெற்கு, மேற்கு கலாசாரப் பேரவை உப தலைவர் க.நடேசு தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் செம்மணன, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் மற்றும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரெட்ணம் ஆகியோரும், கௌரவ விருந்தினராக வடமராட்சி அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் அன்பும் கலந்துகொள்வர்.

நிகழ்வுகள் பிரதேச கலாசாரக் கொடியேற்றலுடன் ஆரம்பமாகும். தொடர்ந்து கரவெட்டி, பிரதேச மறைந்த கலைஞர்களது உருவப்படங்கள், ஆக்கங்கள், வாழ்க்கைக் குறிப்புகள் என்பவற்றுடன் - தற்கால கலைஞர்களது ஆக்கங்கள், கலை வெளிப்பாடுகள் அடங்கிய கண்காட்சித் திறப்புவிழா இடம்பெறும்

பேராசிரியர் அ.துரைராஜா அரங்கில் இடம்பெறும் இரண்டாம் நாள் நிகழ்வுகளில் ஆய்வரங்கு காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த் துறைப் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த ஆய்வரங்கில் 'கம்பனுடைய காவியம்' என்னும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் க.அருந்தாகரனும், 'இலங்கைத் தமிழ் நாவல்கள்' என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் ஈ.குமரனும், 'ஈழத்து நவீன கவிதைகள்' என்னும் தலைப்பில் க.குணேஸ்வரனும் ஆய்வுரைகளை நிகழ்த்துவார்கள்.

தொடர்ந்து 'புலம்பெயர் தமிழிலக்கியம்' என்னும் தலைப்பில் கருத்தாடலும் தொகுப்புரையும் இடம்பெறும்.

பண்டிதர் இ.வீரகத்தி அரங்கில் இடம்பெறும் மாலை நிகழ்வுகள் பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகும்.

கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கி.சிவநேசன், செ.கஜேந்திரன் ஆகியோரும், கௌரவிருந்தினர்களாக வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபைச் செயலர் ஏ.எம.யோசப் மற்றும் வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.தயா ஆகியோரும் கலந்து கொள்வார்கள்.

(10-202-203)

# மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் நாளை யாழ்.வருகின்றனர்.

யாழ்ப்பாணம்,ஒக்.29

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பாக ஆராயும் பொருட்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர்கள் இருநாள் விஜயம் மேற்கொண்டு நாளை சனிக்கிழமை யாழ்.குடாநாட்டிற்கு வருகை தரவுள்ளனர்.

ஆணையாளர்களான கலாநிதி என். செல்வக்குமரன், கலாநிதி செயினுதீன் ஆகியோரே குடாநாட்டிற்கு வருகை தரவுள்ளனர்.

நாளை வருகை தரும் இவர்கள் யாழ். குடாநாட்டில் மனித உரிமைகள் தொடர்பான செயற்பாடுகள் மற்றும் அதனை முன்னேற்ற வேண்டிய நடவடிக்கைகள் பற்றிச் சகல தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடுவர்.

நாளை பிற்பகல் 3 மணிக்கு யாழ். செயலகத்தில் குடாநாட்டிலுள்ள சகல திணைக்களங்களின் தலைவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடுவதுடன் -

மறுநாள் விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறையினர், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்டப் பிரதிநிதிகள் மற்றும் பல்கலைக்கழக சமூகத்தினரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(10-5-202-203)

# செய்தியாளர் தாக்கப்பட்டார்

கொழும்பு,ஒக்.29

'லேக்கவுஸ்' பத்திரிகையின் கண்டி மாவட்டச் செய்தியாளர் ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதேச சபை உறுப்பினரால் தாக்கப்பட்டார்.

விலைவாசி உயர்வைக் கண்டித்து ஐக்கிய தேசியக் கட்சி ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்டம் ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை மாலை கண்டி ஜோர்ஜ் டி.சில்வா பூங்காவில் நடைபெற்றது.

இந்தஆர்ப்பாட்டம் தொடர்பான செய்திகளைச் சேகரிக்கச் சென்ற லேக்கவுஸ் நிறுவனத்தின் 'தினமின'பத்திரிகையின் கண்டி அலுவலக செய்தியாளரான சஞ்சே அசல மத்துரட்ட என்பவர் உடுநுவர பிரதேச சபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரான எல்.ஜயசிங்கவினால் தாக்கப்பட்டார்.

இத்தாக்குதலுக்கு அரசியல் பின்னணியே காரணம் என்று கூறப்படுகிறது. தாககப்பட்ட செய்தியாளர் பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பில் உடுநுவர பிரதேச சபை தேர்தலில் போட்டியிட்டவர். என்பது குறிப்பிடத்தக்கது.

ஹெலஉறுமயவின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான உடவத்தே நந்தா தேரர் இச்சம்பவத்தை வன்மையாகக் கண்டித்துள்ளார்.

(10-5)

# புதுயுகத் தமிழர்கள் பற்றிய உலகத்தமிழ் கவிதைப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஒக்.29

லண்டன் சுடரொளி வெளியீட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் 2ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி நடத்தப்படவுள்ளன.

இப் போட்டியில் அனைத்து நாடுகளிலும் வாழும் தமிழர்கள் பங்குபற்றலாம். "புதுயுகத் தமிழர்" எனும் தலைப்பில் 60 வரிகளுக்கு மேற்படாமல் கவிதை எழுதப்படல் வேண்டும்.

போட்டியில் பங்குபற்றி முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே 35 ஆயிரம் ரூபாவும், 25 ஆயிரம் ரூபாவும், 15 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படுவதுடன் 25 ஆறுதல் பரிசில்கள் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளன.

போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் கவிதை ஆக்கங்களை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைத்தல்வேண்டும்.

இலங்கையிலிருந்து ஆக்கங்களை எழுதியனுப்புவோர் "பொறுப்பாளர்" 2 ஆவது உலகத்தமிழ் கவிதைப் போட்டி - 2004, சுடரொளி வெளியீட்டாளர், 30 சென்ற பெனடிக் மாவத்தை, கொட்டாஞ்சேனை, கொழும்பு - 13 என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(10-13)

### நாளை

ஐப்பசி 14
சனிக்கிழமை
(30.10.2004)
திதி: துதியை
முற்பகல் 10.47 வரை
நட்சத்திரம் : கார்த்திகை
பிற்பகல் 4.47 வரை
சுபநேரம்: 3.03 - 4.33
ராகுகாலம்: 9.03 - 10.33
(பழைய நேரப்படி)

### கியூடெக் நிறுவனத்தினால்

# புனரமைக்கப்பட்ட 120 வீடுகள் இன்று கையளிக்கப்படும்

யாழ்ப்பாணம்,ஒக்.29

'நிகொட்' நிதியுதவியுடன் கியூடெக் நிறுவனத்தினால் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட 120 வீடுகள் [illegible] மாக இன்று வெள்ளிக்கிழமை கையளிக்கப்படவுள்ளன.

குருநகர் கடற்கரை வீதி, அண்ணா சிலைக்கு அருகில் இடம்பெறும் இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். செயலக 'நிகொட்' பிரதித் திட்டப்பணிப்பாளர் எந்திரி கே.நவரத்தினராசா, யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், குருநகர் புனிதயாகப்பர் ஆலயம் பங்குத்தந்தை ஆர்.எச். சகாயநாயகம், யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைப்பத்தலைவர் வி.ரீசக்திவேல் மற்றும் தமிழர் புனர்வாழ்வுக் கழக யாழ். மாவட்ட இணைப்பாளர் சு.ஜெயராஜ் ஆகியோரும் கலந்துகொள்வர்.

(10-5-202-203)

### உதயவாக்கு

சாதனை அதிகரித்தால் உள்ளம் வளர்ச்சியடையும்.

# ஈழத்தமிழரின் கருத்தைப் புறக்கணித்துவிட்டு டில்லியில் கூட்டப்படும் மாநாடு கேலிக்கூத்து

## ஈழவேந்தன் எம்.பி. சாடல்

யாழ்ப்பாணம்,ஒக்.29

ஈழத்தமிழ் மக்களையும், சர்வதேசக் கருத்தையும் புறக்கணித்துவிட்டு புதுடில்லியில் கூட்டப்படவிருக்கும் மாநாடு எதனைச் சாதிக்கப் போகின்றது?

இவ்வாறு நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார் தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன்.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுக்களில் இந்தியா எந்த வகையில் தலையீடு செய்யலாம் என்பது பற்றி தீர்மானிக்க புதுடில்லியில் நாளை சனிக்கிழமை மாநாடு ஒன்று கூட்டப்பட்டிருப்பது தெரிந்ததே.

பேராசிரியர் சுப்பிரமணிய சுவாமி கூட்டியிருக்கும் இந்த மாநாடு தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகிய விடுதலைப் புலிகளையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் புறக்கணித்துவிட்டு கூட்டப்பட்டிருப்பதாக ஈழவேந்தன் எம்.பி. குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

இது தொடர்பாக அவர் விடுத்த அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

இலங்கை இனப்பிரச்சினை தீர்வில் இந்தியத் தலையீடு குறித்து ஆராய சனியன்று புதுடில்லியில் மாநாடு என்னும் தலைப்பில் பத்திரிகைகளில் வெளிவந்துள்ள செய்தி எம்மை வியப்பில் ஆழ்த்துகின்றது. இந்த மாநாட்டின் ஏற்பாட்டாளர்களில் முக்கியமானவரான டாக்டர் சுப்பிரமணிய சுவாமி இதனைத் தெரிவித்துள்ளதாக செய்திவந்துள்ளது. தமிழ்மக்களின் சிக்கலை ஒட்டி அனைத்துலகின் கவனத்தை ஈர்க்கும் வகையில் இம்மாநாடு கூட்டப்படுகிறது என்று மேலும் குறிக்கப்பட்டுள்ளது.

இங்கு கவனத்தில் எடுக்கவேண்டியது யாதெனில் மதுரையை அடுத்துள்ள சோழவந்தானில் பிறந்த சுப்பிரமணியசுவாமி அவர்கள் அரசியலில் ஓர் செல்லாக்காசு. அண்மையில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தன் கட்டுப் பணத்தை இழக்கின்ற அளவிற்கு மக்களால் தூக்கியெறியப்பட்டவர்.

இவர் டில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகவும் அமெரிக்க காபட் பல்கலைக்கழத்தில் வருகைதரும் பேராசிரியராகவும் விளங்கியவர் என்பது நினைவு கூரத்தக்கது.

இவரின் அறிவைப் பற்றி, ஆற்றலைப்பற்றி யாரும் கேள்வி எழுப்பவில்லை. ஆனால், வள்ளுவரின் குறளில் 'அரம் போன்ற கூர்மை உடையவரேனும் மரம் போல்வர் மக்கள் பண்பில்லாதவர்' என்று கூறியதற்கமைய சுப்பிரமணிய சுவாமி கூர்த்தமதி படைத்த நிலையிலும் அரசியலில் அவர் அடித்த குத்துக்கரணங்களுக்கு எல்லை இல்லை. இவரை அரசியல் உலகம் Intellectual Accrobats (அறிவு நிலையில் குத்துக்கரணம் அடிப்பவர்) என்று எள்ளி நகையாடுவதுண்டு. 1986இல் ஐ.நா. மன்றத்தின 40 ஆண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்ட பேராளர்களுக்கு விளக்கம் அளிக்க அமெரிக்காவில் வாழும் தமிழ் அறிஞர்களால் நான் அழைக்கப்பட்டபோது, காபெட் பல்கலைக்கழகத்திலும் மேரி லாண்ட் பல்கலைக்கழகத்திலும் நடைபெற்ற கருத்தரங்குகளில் எம் சார்பில் கலந்துகொண்டு எம்மோடு சேர்ந்து வரும் அவரும் கருத்துத் தெரிவித்ததை நாம் மறக்கவில்லை. அப்பொழுதே நாம் இவரைப்பற்றி எச்சரிக்கப்பட்டோம்.

ஆனால், .அரசியலில் தீமைகளில் குறைந்த தீமையாக இவரை நாம் பயன்படுத்தினோம். எனினும், இவர் எம்மைப் பயன்படுத்த முனைந்தபோது தூர விலகினோம். ஆனால், நாம் மதித்துப் போற்றுகின்ற மறைந்த எம் தந்தை செல்வாவின் மகன் சட்டத்தரணி சந்திரகாசன், இவர் விரித்த மாய வலையில் சிக்கி மறைந்த அவர் தந்தைக்கும், எமது இனத்திற்கும், எமக்கும் மாறாத வடுவை ஏற்படுத்தி வரலாறு வசைபாட இடம் அளித்துள்ளார். சந்திரகாசன் அவர்கள் சனியன்று நடைபெறும் மாநாட்டில் கலந்துகொள்கிறார் என்பதை நாம் நினைவு கொள்ளவேண்டியது அவசியம்.

இம் மாநாட்டில் 35 பேர் கலந்துகொள்ள இருக்கின்றனர் என்றும் இவர்களில் பெரும்பாலானோர் இந்தியர் என்றும் செய்தி வெளிவந்துள்ளது. ஆனால், இம்மாநாட்டிற்கு, அன்று நாம் வாழ்த்திய 'குறளை' உணர்ந்த இந்தியக் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம், வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளது எமக்குப் பெரும் கவலையைத் தருகின்றது. இவரோடு பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி அவர்களும், உள துறை அமைச்சர் சிவராஜ் பட்டீலும் வாழ்த்துரை வழங்கியிருப்பது மேலும் வேதனையைத் தருகின்றது.

இம்மாநாட்டில் சிங்களவரின் சிந்தை கவர்ந்த, சீனாவின் இரண்டு அறிஞர்களும், ஒரு காலத்தில் ஆசியாக் கண்டத்தின் 'அழுகுதொழு நோயாளி' (Lepers of Asia) என்று இந்தியாவினால் வர்ணிக்கப்பட்ட இஸ்ரேலும் கலந்துகொள்கின்றது. இந்தியாவின் 'பெரியண்ணா' (Big Brotherly Attitude) போக்கை நாம் விரும்பவில்லை என்று கூறிய நேபாளமும் பங்களாதேஷும் இம்மாநாட்டில் கலந்துகொள்வது எமக்கு புரியமுடியாத புதிராக உள்ளது. இலங்கையில் இந்தியா கால்கொள்வதை உள்ளூரவிரும்பாது இங்கு தம் வல்லாண்மையை செலுத்துகின்ற அமெரிக்க வல்லரசின் தூதுவர் இருவரும் இம் மாநாட்டில் கலந்துகொள்கிறார்கள்.

இவை அனைத்திற்கும் மேலாக சிகரம் வைத்தாற்போல் நடைபெற்ற தேர்தலில் அளிக்கப்பட்ட செல்லாத வாக்குகளுக்கு குறைவாகப் பெற்று தப்பித்தவறி தெரிவுசெய்யப்பட்ட மாண்புமிகு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் இம்மாநாட்டிற்கு அழைக்கப்பட்டுள்ளது எம்மை எள்ளிநகையாடவைக்கின்றது. ஈழத் தமிழ் மக்களின் அரசியல் வேட்கைகளுக்கு முழு வடிவம் கொடுத்து இயங்குகின்ற தமிழீழ விடுதலைப் புலிகள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்ட நிலையில், அவர்கள் சார்பில் நாடாளுமன்றத்தில் இயங்குகின்ற தமிழர் தேசிய கூட்டமைப்பும் புறக்கணிக்கப்பட்ட நிலையில் இம்மாநாடு கூட்டப்படுவது ஏன் என்பது எமக்குத் தெரியவில்லை?

ஈழத்தமிழ் மக்களையும் அனைத்துலகின் கருத்தினையும் முற்றாகப் புறக்கணித்து இந்த மாநாடு எதனை நிலைநாட்டப் போகிறது என்பது தான் நாம் எழுப்பும் கேள்வி. எப்படியும் இலங்கையை, இந்தியாவின் பிரிக்க முடியாத ஓர் அங்கமாகச் சுப்பிரமணிய சுவாமி உட்பட இந்தியத் தலைவர்கள் பலர் சதிச் செயலில் ஈடுபட்டிருப்பதை நாம் அறிவோம்; நாடும் அறியும்; நாநிலமும் அறியும். ஆனால், நமது சிங்கள நண்பர்கள் இதனை அறிவார்களோ நாம் அறியோம்.

ஈழத்தமிழ் மக்களுடைய அரசியல் வேட்கைகளை முற்றாகப் புறக்கணித்து, எம்மை பூண்டோடு அழிக்கும் சதிமுயற்சி தான் விரைவில் கைச்சாத்திடப்படவிருக்கும் இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தமாகும் இதனை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெளிவுறத் தெரிவித்துள்ளார்.

20 ஆண்டுகள் இந்தியாவிலிருந்து ஈழத்தமிழரின் சிக்கலை ஒட்டி நான் பரப்புரை ஆற்றிய வேளையில், பல அறிஞர்களோடு என் கருத்துக்களை பரிமாறிக்கொண்டேன். அப்பொழுது தன் பெயரை குறிப்பிட வேண்டாம் ஆனால், நான் சொல்லப்போவது முழுதும் உண்மை என்று அறிவியற் துறையில் அனைத்துலக புகழ்பெற்ற ஓர் அறிஞர் பின்வருமாறு என்னிடம் கூறினார்,



"In your anxicty to get our of Sinhala imperialism do not fall a prey to Indian imperialism. If you become part of India you will be swallowed by Indian imperialism and you will never be able to save your self. But there is every chance of you being able to get out of the clutches of the Sinhala regime and redeem your self."

சிங்கள வல்லாண்மையிலிருந்து உங்களை விடுவிக்க வேண்டும் என்ற அங்கலாய்ப்பில் இந்திய வல்லாண்மைக்கு நீங்கள் பலியாகக் கூடாது. இந்தியாவின் ஓர் அங்கமாக நீங்கள் மாறுவீர்களாயின் இந்திய வல்லாண்மை உங்களை விழுங்கி ஏப்பமிடும். நீங்கள் என்றுமே உங்களை மீட்க முடியாத நிலைக்கு ஆளாவீர்கள். ஆனால், நீங்கள் ஏற்ற முறையில் போராடினால் சிங்கள வல்லாண்மையிலிருந்து உங்களை விடுவித்து நீங்கள் விடுதலை காண முடியும். எனவே, எச்சரிக்கையோடு செயற்படுங்கள். 'ஆவது அறியும்' என்ற அந்த அறிஞன் கூறிய கூற்று எம் நெஞ்சில் ஆழப்பதிந்துள்ளது.

"அறிவுடையார் ஆவது அறிவர்" என்ற வள்ளுவர் வாய்மொழி எமக்கு வழிகாட்டட்டும். என்றுமே விழிப்புடன் இருப்பது தான் நாம் விடுதலைக்கு கொடுக்கின்ற விலை. (Etcrnal vigilance is the price, we pay for liberty) ஆக்கம் தரும் இவ்வறிவுரைகள் தான் எம்மினத்திற்கு விடுதலையையும் விடிவையும் தரும் என்று உய்த்துணர்ந்து செயற்படுவோமாக.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஈழவேந்தன்.(ஐ)





மானிப்பாய் றோட்டரக்ட் கழகத்தினரும் யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் ஒருவரும் இணைந்து ஆனைக்கோட்டை சாவற்கட்டுப் பகுதியில் இலவச திருமணப் பதிவு சேவையை நடத்தினர்.
பதிவாளர் ஜே.கணேசதாசன் இவ்வைபவத்தில் கலந்துகொண்டு பல தம்பதிகளுக்கு திருமணப்பதிவை மேற்கொண்டார்.
மேலதிக மாவட்டப் பதிவாளர் பி.ஈஸ்வரதாசன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.
திருமணப்பதிவாளர் கே.கணேசதாஸனுக்கு கழக அங்கத்தவர் எஸ்.நிமலன் மாலை அணிவிப்பதையும் அந்நிகழ்வில் கலந்துகொண்ட ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (ஐ)

### வீதிகள் திருத்தம்

யாழ்ப்பாணம்,ஒக்.29

'காப்' நிறுவனத்தின் உதவித்திட்டத்தின் கீழ் கோப்பாய்ப் பகுதியில் வீதிகள் பல செப்பனிடப்படுகின்றன.

அச்செழு நாச்சிமார் கோவில் வீதி, புத்தூர் குடியேற்ற திட்டவீதி, விளையாட்டு அரங்க வீதி கல்வியங்காடு, கருத்தோலை வீதி இருபாலை சந்தைவீதி ஆகியவையே திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வீதிகள் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஷ்பிரேமச்சந்திரனின் சிபார்சுக்கமையவே செப்பனிடப்படுவது குறிப்பிடத்தக்கது. (8 - 202)

### தீட்சை வழங்கும் வைபவம்

யாழ். சைவ பரிபாலன சபையின் ஆதரவில் சைவசமய தீட்சை வழங்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 8மணி தொடக்கம் நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கை. திருஞானசம்பந்தக் குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் 7வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் கலந்துகொண்டு தீட்சை பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-202)

### ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

கோப்பாய்,ஒக்.29

கோப்பாய்ப் பிரதேச செயலகத்தின் மாதாந்த ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டமும் விவசாயக் குழுக் கூட்டமும் இன்று வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளன என்று உதவிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் அறிவித்துள்ளார். (ஐ-72-202)

# யாழ். பல்கலைக்கழகத்தில் சீன ஒபேரா வடிவ நாடகம்

யாழ். பல்கலைக்கழக Five Theatre Students Group இன் தயாரிப்பில் சீன பீஜிங் ஒபேரா வடிவமான 'செவ்விளக்கு' எனும் நாடகம் நாளை முதல் மூன்று தினங்கள் மாலை 6மணியளவில் யாழ். பல்கலைக்கழக கலைப் பீட வளாகத்தில் நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை கலைப் பீட நுண்கலைத்துறை நாடகமும் அரங்கியலும் மாணவர்கள் மேற்கொண்டுள்ளனர்.

"புரட்சியின் பேரொளியில்
இருளார்ந்த இரவு
முடிவுறும் ஓர் நாள்..."

படைப்புக்கள் பலவிதமாக இருக்கலாம். ஆனால், இக்காலத்தின் பதிவுகள் கலைப் படைப்பாகும் போதே அக்காலத்தில் வாழ்கிறது. அந்த வகையில் காலத்தின் பதிவாக காலத்தோடு வாழ்ந்து வருகின்ற ஒரு படைப்பே சீன பீஜிங் ஒபேரா வடிவமான 'செவ்விளக்கு' ஆற்றுகை.

ஜப்பானிய ஏகாதிபத்தியம் சீனமக்களை அடக்கியாண்ட போது ஜப்பானியருக்கு எதிராக கிளர்ந்தெழும் சீன மக்களின் உணர்வை சீன அரங்கிற்கே தனித்துவமான இசையும் நடனமும் கலந்து வெளிப்படுத்தி நிற்கின்றது. "ஒடுக்கப்படும் ஓர் இனம் கிளர்ந்தெழும்போதே புரட்சிவெடிக்கும். புதுநாடு பிறக்கும் அதற்காக சந்ததி சந்ததியாகப் போராடிப் போராடி முன் செல்வோம்" என்பதையே சொல்லி விடுகின்றது.

பாரம்பரிய பீஜிங் ஒபேராவிலிருந்து நவீனமயப்படுத்தப்பட்டு யதார்த்த மோடியான நவீன பீஜிங் ஒபேராவாக அது வருகின்றபோதும் அதிலிருந்து அதனை உள்வாங்கியும், அதேவேளை அதிலிருந்து மாறுபட்டு எமது யதார்த்தத்துடன் இணைந்த வடிவமாக 'செவ்விளக்கு' வருகின்றது.

- தர்மினி.

# திருமணப்பேறு, புத்திரபாக்கியம் கௌரிவிரதம் மூலம் கிடைக்கும்

ஒன்றேயாகிய பரம் பொருளை மனம் பொறி வழி அலையாவண்ணம் அடக்கி உணவினை சுருக்கி, தீயன விலக்கி அப்பரம் பொருள்மீது மனம் நிலைத்திருக்கச் செய்வது விரதமாகும்.



விரதம் மனதினை ஒருநிலைப்படுத்த அதன வழி இறை சமீபமடையச் செய்கின்றது உபவாசம். எம்மனம் இறை உணர்வினால் உந்தப் பட்ட எண்ணங்களும், செயல்களும நல்லனவாக அமைகின்றன. அது பாரணையின் நற்பலனாகின்றது.

ஒருவர் பொய்சொல்லாமை, ஊன, கள்ளுணணாமை, ஐம்பொறியடக்கம், தானம், தர்மம், விருநதோம்பல் முதலாய பல நல்லன காரியங்களை விரதகாலத்தில் செயது கொள்வதனால் அவர் இறையருளுக்கு மாத்திரமன்றி எல்லோருடைய வாழ்த்துக்களையும் ஆசிர்வாதங்களையும் பெற்றுக்கொள்வதனால் அவர் உயர்ந்த நற்பலனைப் பெற்றுவிடுகின்றார்.

விரதகாலத்தில் ஒருவர் ஆலய வழிபாடு, விரத அனுஷ்டான வழிபாட்டு முறைகளினால் உடல் நலத்தினையும், திருமுறைப்பாடல்கள், பஜனை முதலியன பாடுவதனால் வாக்கு நலத்தினையும், பஞ்சாட்சர ஜபம், தியானம் முதலியவற்றினால் மனத்தூய்மையையும் பெறுகின்றான். ஒருவனுடைய தூய்மையான ஆன்மீகத்தோடு கூடிய வாழ்விற்கு விரதம் நன்கு துணைபுரிகின்றது. அவ்வாறான விரதங்கள் பல எமது சமயத்தில் உள்ளன. அவற்றில் சிவ விரதத்தில் ஒப்பற்ற சிறந்த விரதமாக திகழ்வது கேதாரகௌளரி விரதமாகும். இது பெயரளவில் அம்பிகையின் நாமத்தோடு உள்ளதனால் எல்லோரும் இதனை சக்தி விரதம் என எண்ணுகின்றார்கள். இவ்விரதம் கேதார நாதப்பெருமானை லிங்க ரூபமாக கேதார கௌளரியம்பாள் பூஜித்து இடப் பாகம் பெற்ற சிவ விரதமாகும்.

ஐப்பசி மாதத்து தீபாவளி அமாவாசையில் முடிவுறும் இருபத்தொரு நாள்கள் கொண்ட விரதம் இதுவாகும். முன்பொரு சமயம் திருக்கைலாயத்தில் பார்வதி பரமேஸ்வரராக காட்சியளிக்கும் போது, அவ்வேளை அங்கு வந்த சிவபக்தரான பிருங்கி முனிவர் ஆனந்த மயமான விகடக் கூத்தொன்றாடி மகிழ்வித்தார். பின்னர் உமையைத் தவிர்த்து சிவனை மாத்திரம் தனியாக வலம் வந்து வணங்கினார். இதனால், வியப்புற்ற பார்வதி அதன் காரணத்தினை சிவனாரிடம் வினாவினார். அதற்கு சிவத்திற்கும் சக்திக்கும் உள்ள உறவு உயிருக்கும் உடலுக்கும் உள்ள உறவு போன்றது. அதனால் உடல் பற்றில்லாதவரான பிருங்கியும் உயிர் பற்றினால் உயிராகிய என்னை மட்டும் வணங்கினார் என்று கூறினார் சிவன்.

இதற்கு அம்பிகையானவள் இந்த பிருங்கி முனிவருக்கு தேக வலுவாகிய சக்தி எதற்கு? என்றெண்ணி முனிவரது ஊன் உடல் சக்தியை விலக்கிவிட்டார். இதனால், முனிவரும் வலு விழந்து ஆற்றல் இன்றி எலும்பும் தோலுமாகித் தடுமாறினார். அவர் மீது இரங்கிய சிவன் தணடொன்று கொடுத்தருளினார். அதனைப் பெற்ற பிருங்கிமுனிவரும் ஒருவாறு இயங்கலானார்.

அக்கணமே அவ்விடம் விட்டு அகன்ற அம்பிகை கௌதம முனிவரின் ஆச்சிரமம் சென்றடைந்தார். கௌதமமுனிவரும் அம்பிகையை வரவேற்று உபசரித்தார். அம்பிகை அவரை

ஞானக்கதிர்

நோக்கி யாம் பரமேஸ்வரனோடு ஒரே உருவில் சரிபாதியாக பொருந்தவேண்டும், அதற்கு சிறநத விரதத்தினை அனுஷ்டிக்க வேண்டும் அவ்வாறு சிறப்பான விரதம் எதுவென வினாவினார். முனிவரும் கேதார கௌளரி விரதத்தினை பார்வதி தேவிக்கு எடுத்துரைத்தார். அம்பிகையும் முறைப்படி அவ்விரதத்தினை முறையாகக் கடைப்பிடிதது சிவனின் இடப்பாகம் பெற்று மகிழ்ந்தாள்.

கேதார கௌளரி விரதம் அனுஷ்டிக்கின்றவர்கள் வழமைபோன்று ஸ்நானம் முதலியவற்றினைச் செய்து கொள்ளல் வேண்டும். ஐந்து மாதத்திற்கு மேற்படாத கர்ப்பிணிப் பெண்களும், மாதவிலக்கு நின்று விட்ட பெண்களும் 21 தினங்களும் விரதம் அனுஷ்டிக்கலாம். இயலாதவர்களும் மற்றும் விரதகாலத்தில் மாதவிலக்கு ஏற்படக் கூடியவர்களும் இறுதி 9,7, 4,3 ஆகிய விரத நாள்களில் விரதம் அனுஷ்டித்துக் கொள்ளலாம். 21 வருடம் அனுஷ்டிக்கப்பட வேண்டிய இவ்விரதத்தினை இயலாதவர்கள் ஏழு வருடம் அனுஷ்டித்தல் வேண்டும்.

விரதத்தினை இத்தனை வருடங்கள் கைக்கொள்ளப்போகின்றேன் என சங்கல்பித்துக் கொளளல் வேண்டும். ஒவ்வொரு வருடமும் உணவினைச் சுருக்குதல் முதலிய விரத அனுஷ்டானத்தினை ஒரே மாதிரியாகக் கைக்கொள்ளல் சிறப்பினைத்தரும். விரதத்திற்குரிய நிவேதனங்களாக எள்ளுருண்டை, மஞ்சள் உருண்டை, அதிரசம், வாழைப்பழம், வெற்றிலை, பாக்கு என்பனவற்றினை தினமும் ஒன்றாக இயலாதவர்கள் இறுதி நாள் இருபத்தொன்றாக நிவேதித்தல் வேண்டும். தினமும் மாலையில் சிவபூசை செய்து அதன் நிவேதனம், தீர்த்தம் ஆகியவற்றினை அருந்துதல் சிறப்பாகும். இறுதிநாள் உபவாசம். மறுநாள் பாரணை என விரதத்தினை அனுஷ்டித்தல் வேண்டும். இருபத்தொரு இளை கொண்ட பட்டுநூல் எடுத்துமுறுக்கி அதில்தினமும் ஒவ்வொரு முடிச்சாக இட்டு இறுதிநாள் கையில் அல்லது புயத்தில் அல்லது கழுத்தில் அணிந்து கொள்ளல் வேண்டும். பாரணை காலை 8.30 மணிக்கு முன்னதாகச் செய்து கொள்ளல் வேண்டும். கேதாரநாதருக்கு உகந்த பத்திரபுஷ்பங்களான வில்வம், மருக்கொழுந்து, மாவிலை, ஊமத்தை, மாதுளையிலை, நொச்சியிலை, இலந

**பிரம்மஸ்ரீ சபா. உமாபதி சர்மா**

தையிலை, திருநீற்றுப் பச்சை, வன்னியிலை, கத்தரிப்பூ, நெல்லிப்பூ, சண்பகப்பூ, மல்லிகைப்பூ, தும்பைப்பூ, மருதம்பூ, மந்தாரைப்பூ, அலரிப்பூ, விஷ்ணுகாந்திப்பூ, தேவதாருப்பூ, எருக்கம்பூ, அறுகம்புல் முதலியவற்றினால் விரத காலத்தில் அர்ச்சித்து கேதாரநாதரின் அருளுக்குப் பாத்திரமாகலாம். தம்பதிகளுக்கு மகிழ்ச்சியான இல்லற நல்வாழ்வு, மணநிறைவான திருமணப்பேறு, புத்திரபாக்கியம் முதலாய பற்பல நற்பலன்களைப் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ பெண்ணில் நல்லாளொடும் வீற்றிருக்கும் பெருந்தகையான சிவனின் கேதார கௌளரிவிரதத்தினை அனுஷ்டித்து பேரானந்தமாக வாழ்வோமாக. ☆

## மண்டைதீவு திருவெண்காடு விநாயகர் ஆலயம்

மண்டைதீவுக் கிராமத்தின் மத்தியில் திருவெண்காடு என்று அழைக்கப்படுகின்ற பழம் பெரும்பதி, விநாயகன் ஆலயங்களில் தொன்மை வாய்ந்ததாகும் அங்கு அருள் பொழியும் பேர் ஒளி ஒன்று உள்ளது. இந்த ஆன்மீகத் தலத்தில் விக்கினேஸ்வரப் பெருமான் கோயில் கொண்டு அருளாட்சி நடத்தி அற்புதங்கள் நிகழ்த்தி வருகிறார்.

தம்மை அணைந்தவர்களை அணைத்து அருள்புரிந்துவரும் கணநாதனை அடியவர்கள்

**ஆலயச்சிறப்பு 3**

"திருவெண்காட்டு சித்தி விநாயகர்" என்றே அழைப்பர். பெரியவர்களின் ஞாபகத்திற்கு எட்டாத காலத்திருநதே இந்தத் தெய்வீகத் தலம் நிலைபெற்று அருள் சுரந்து விளங்குகிறது. அவர் ஒரு கோடி அற்புதர். இந்தக் கிராமத்தில் உள்ள அனைத்து மக்களினதும் வணக்கத்திற்குரியவராக மட்டுமின்றி அயற்கிராம மக்களதும் பாவவினையறுக்கும் கருணாநிதியாக விளங்குபவர் அவர். விக்கினம தீர்க்கும் பேரருளால் விநாயகர் அனைவரையும் கவர்ந்திழுப்பவர். வேண்டியவர்க்கு வேண்டியாங்கு வினைதீர்த்து அருள்பாலித்து வாழ்வு அளித்து வருவதால் சகலரது மனங்களிலும் இடம் கொண்டவர்.

1990 இல் நிகழ்ந்த படைஎடுப்பின் பொழுது மண்டைதீவும் அயல் கிராமங்களும் வேட்டைக் காடாக மாறி இருந்தன. அந்த நேரத்தில் கிராமத்தவர்களும் அயல்கிராமங்களில் இருந்து ஓடி வந்தவர்களும் இந்த ஆலயத்திலேயே தஞ்சம் அடைந்திருந்தனர். அவர்கள் அனைவருமே தாக்குதலுக்கு ஆளாகாது காப்பாற்றப்பட்டனர். தற்பொழுது ஆலயம் புனருத்தாரணம் செயயப்பட்டுள்ளது; சுற்றுமதில்கள் கட்டப்பட்டுள்ளன. தேர் முட்டி

**கை. பேரின்பநாயகம்**

அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 15 வருடங்களின் பின்னர் கடந்த ஆவணிமாதம் விநாயகப்பெருமான் வீதி உலாவந்தார்.

# மனித மேம்பாடும் அதற்கான கல்வியும் மாணவருக்கு மட்டுமன்றி சகலருக்கும் தேவை



## சாயி பாடசாலை பரிசளிப்பு விழாவில் பேராசிரியர் ஹரிஷா டீ சில்வா

**கடந்த 23ஆம் திகதி (சனிக்கிழமை) இடம் பெற்ற மானிப்பாய் சத்தியசாயி பாடசாலையின் முதலாவது பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய களனிப் பல்கலைக்கழக புள்ளி விபரவியல் கணனி விஞ்ஞானத்துறைத் தலைவர் பேராசிரியர் ஸ்ரீ சண்டிமா ஹரிஷா டீ சில்வா நிகழ்த்திய உரையின் சாராம்சம் இது.**

மனித மேம்பாட்டுக் கல்வி வசதியை ஏற்படுததும் நோக்கில் சத்தியசாயிபாபா அமைப்பின் இலங்கைக் கிளையினால் முதன்முதலாக யாழ்பபாணம், மானிப்பாயில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. கடந்த ஓகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி இம்மனித மேம்பாட்டுத் திட்டம் கல்வியமைச்சின் செயலாளர் தாரா டி. மெல்லினால் உத்தியோகபூர்வமாக ஏற்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக இவ்வித மனித மேம்பாட்டுக் கல்வியை வளப்படுத்தும் நோக்கில் ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்கான நிலையமொன்றை உருவாக்கும் முயற்சியில் தற்போது நாம் ஈடுபட்டுள்ளோம். அந்தவகையில் எதிர்காலத்தில் சத்தியசாயி பாபா அமைப்பின் இலங்கைக் கிளையினால் ஆரம்பிக்கப்பட்ட இம்மனித மேம்பாட்டுத்திட்டம் அரச அனுமதி பெற்ற திட்டமாக வளர்ச்சியடைய வாய்ப்புண்டு.

அந்தவகையில் இத்திட்டம் மூன்று முக்கிய குறிக்கோள்களைக் கொண்டிருக்கும்.

1. கல்வித்தரத்தை அபிவிருத்தி செய்தல்
2. வேலைப்பட்டறை, பயிற்சி வகுப்புக்கள், மாநாடுகள் என்பவற்றின் மூலமும், சஞ்சிகை மற்றும் பிரசுரங்களின் வெளியீடுகள் மூலமும் பொதுமக்கள் மத்தியில் கவனத்தை ஏற்படுத்தல்
3. மனித மேம்பாட்டுக் கல்வியை உரிய வகையில் வழங்கும் பொருட்டான ஆசிரியர்களுக்குப பயிற்சியளித்துத் தயார்ப்படுத்தல்

இத்தகைய நோக்கில் மானிப்பாயில் உள்ள இந்துக்கல்லூரி மேற்குறிப்பிட்ட நோக்கங்களை இலகுவாக நிறைவேற்றத்தக்க சகல வசதிகளையும் உள்ளடக்கியதாக அமையவுள்ளது. இப்போது இங்கு இடம்பெற்றுவரும் கட்டட விரிவாக்க வேலைகள் எதிர்வரும் சில மாதங்களுக்குள் முடிவடையும் என நம்புகிறேன்.

மனித மேம்பாடும் அதற்கான கல்வியும் சகலருக்கும் அவசியமானதொன்று. இது மாணவ சமுதாயத்திற்கு மட்டுமே அவசியமானதொன்றென மட்டுப்படுத்தப்படலாகாது. நாம் சகல மட்டங்களிலும் மனித மேம்பாட்டைக் கட்டிக்காக்கும் வகையில் செயற்படப் பழகிக்கொள்ள வேண்டுமென்கிறார் பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா.

நாம் வெறுமனே பேச்சிலேயே காலம் கழிக்கும் பழக்கத்தை மாற்றிக் கொள்ளப் பழக வேண்டும். மீண்டும் மீண்டும் பேசிப்பேசியே காலம் கடத்துவது தலைமைத்துவப் பண்பாகாது. தலைமைத்துவத்துக்கு செயலூக்கம் அவசியம். அதிலும் காலம், நேரம் உணர்ந்து அதற்கேற்ற வகையில் விரைந்து செயற்படும் தன்மை மிகமிக அவசியம் என்பது பகவான் பாபாவின் கருத்து. எதையும் நேரத்துக்கு நேர்த்தியாகச் செய்தல் வேண்டும் என்பதற்கு இன்றைய இந்நிகழ்ச்சி ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள விதம் உதாரணமாகத் திகழ்கின்றது. உலகில் சூரிய சந்திர இயக்கங்களை எங்களால் உணரமுடிகிறது. வேகமாகச் செல்லும் ரயில் ஒன்றில் பயணிக்கும்போது வெளியில் உள்ள கட்டடங்கள், மரம் செடிகொடிகள் யாவும் எம்முடன் வேகமாக நகர்ந்து வருவதாக உணர்கின்றோம். ஆனால், மணிக்கு 66 ஆயிரம் மைல்கள் வேகத்தில் நகர்ந்து கொண்டிருககும் பூமியின் மேற்பரப்பில் நாம் வாழ்வதை எம்மால் உணர முடிகின்றதா? இல்லையே! அதே போன்று மனிதனுக்கும் மேற்பட்டதொரு சக்தி எம்மையெல்லாம் இயக்கிக் கொண்டிருககிறது என்பதை நாம் உணரத் தவறக்கூடாது.

## நவீன கருவிகளைப் பயன்படுத்துவதால் மாணவரின் சுயமாகச் சிந்திக்கும் ஆற்றல் மழுங்கடிக்கப்படுகிறது

மனிதனது துன்பங்களுக்கெல்லாம் காரணம் ஆணவமே. நான் என்ற ஆணவம் நம்மில சகலருக்கும் உண்டு. நானே மேலானவன்; என்னால் முடியாததொன்றில்லை என்ற ஆணவமே நமக்கெல்லாம் துன்பங்களையும் துயரங்களையும் அடையக் காரணமாகிறது. எம்மில் எவரும் முதன்மையை இழக்க விரும்புவதில்லை.

முதலில் மனிதன் தான் சகலதையும் அறிந்துள்ள பண்டிதன் எனறே எண்ணிக்கொள்கிறான். பின்னர், அனுபவங்களையடுத்து, தன்னை விட வேறு சிலரும் சகலமும் அறிந்த பண்டிதர்கள் போன்றிருப்பதை உணர்கிறான்.

அதற்கும் சிறிது காலம் கழித்து மனிதர்களான நாமெல்லோரும் சமானவர்களே என்ற தத்துவம் அவனுக்குப் புரிகிறது. அந்தவேளையில, அவன் உலகில் பணக்காரன், ஏழை, நோயாளி, மன அமைதியற்றவன் என பல்வேறு தரத்தினரைக் கண்டு பழக நேர்வதன் மூலமே தன்னை விட தனக்கும் மேலானதொரு சக்தி இருப்பதை அவன் உணர நேர்கிறது. இத்தத்துவ விளக்கத்தின் பலனாக அவன் மனிதப் பிறவியில் தான் எதையும் அறியாதவன், எதுவுமே தன்னுடையதல்ல என்ற விளக்கத்தைப் பெறுகிறான்.

அந்த வகையில், நாமெல்லோரும் எம்மிடமிருக்கும் ஆணவத்தைக் களைதல் அவசியம். இந்த ஆணவத்தைக் கைவிட்டு அதனினின்றும் வெளியேறுவதென்பது மிகக் கடினமான செயல. அதற்காகவே பகவான் சாயிபாபா மனிதர்கள் ஆணவத்தைக் கைவிட்டு நன்னிலைபெற உபாய மார்க்கத்தை உபதேசித்துள்ளார்.

பகவான் சத்தியசாயிபாபா எமக்கெல்லாம் சொல்லி வைத்துள்ள நடைமுறைகளுக்கமைய நாம் சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை மற்றும அகிம்சை ஆகிய நற்பண்புகளைக் கடைப்பிடித்து ஒழுக முயற்சிக்க வேண்டுமென பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா நமக்கெல்லாம் உபதேசித்துள்ளார். இன்று நம்மில் பெரும்பாலானோர் கூறிக் கொள்ளும் வார்த்தை எனக்கு அமைதி வேண்டும் என்பதாகவே உள்ளது. உங்களுக்கு அமைதி வேண்டுமானால் முதலில் நான், எனது, எனக்கு என்பவற்றையெல்லாம் களைய முன் வரவேண்டும். நான் என்ற ஆணவத்தைக் களைந்து விட்டால் மட்டும்போதாது. எனக்கு அமைதி வேண்டும் என பதில் 'வேண்டும்' என்பதன் மூலம் மனிதனின் ஆசை வெளிப்படுகிறது. ஆசையை அறுத்தாலன்றி அமைதிக்கு வழியேற்படாது. 'நான்' என்ற ஆணவத்தையும் 'தேவை' என்ற ஆசையையும் கைவிடுவது இலேசான விடயமல்ல. பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா போதித்த போதனைகளின படி ஒழுக முயன்றால் நாம் மனித வாழ்க்கையின் தத்துவத்தைப் படிப்படியாக உணர்ந்து கடைசியில் அமைதியைத் தேடிக்கொள்ள இயலும். இன்றைய நவீன உலகில் கணனி மற்றும் கணக்கிடும் இயந்திரங்களின் பாவனை பெருமளவில் அதிகரித்து வருவது கண்கூடு. இது மாணவ சமுதாயத்திற்கு ஆரோக்கியமானதல்ல. இதனால், மாணவர்களின் சுயமாகச் சிந்திக்கும் ஆற்றல் மழுங்கடிக்கப்படுகின்றது. இன்றைய வேகமான இயக்கத்தில் மனிதனுக்கு இக்கருவிகள் அவனது வேலைகளை இலகுவாக்குவதென்னமோ உண்மைதான். ஆனால், நல்லது, கெட்டதை சுயமாகச் சிந்தித்தறிந்து ஆரோக்கியமான சிநதனையை வளர்த்துக்கொள்வதற்கு அவை தடையாக உள்ளன.

யாழ்ப்பாணத்தில் புகழ்பெற்ற யோகர் சுவாமிகளின் போதனைகளை நாம் கவனத்தில் எடுக்க வேண்டும். அவர் கூறி வைத்த கர்மயோகத்தை

**தொகுப்பு: தங்கன்**

மனதில் கொண்டு மனிதன் தான் செய்யவிரும்புவதை எவ்வித பலனையும் எதிர்பாராது செய்தல் சிறப்பாய் அமையும். தான் தனக்கு சிறப்பென மனதில் தோன்றுவதை அதன் பலன் எவ்விதம அமையுமெனச் சிந்திக்காது ஆற்ற வேண்டியது அவனது கடமையெனவே அம்மகான் கூறிவைத்துள்ளார். எனவே, இம்மனித மேம்பாட்டுப் பாணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ள நீங்கள் உங்கள் பணியை எதுவித பிரதிபலனையும் எதிபாராது தியாக சிந்தையுடன் ஆற்றி வருவீர்களானால் பகவானின் அருளாசி உங்களுக்கு கிட்டும் என்பதில் எவ்வித சந்தேகமும் கிடையாது. ☆

# Study In Malaysia

சகல விதமான பாடநெறிகளுக்குமான அனுமதிகள் யாழ்நகரில் இப்பொழுது வழங்கப்படுகின்றன.

I. DIPLOMA (2 Years)

II. HIGHER NATIONAL DIPLOMA (HND One Year)

UK இல் Degree

மலேசியாவில் பிரபல கல்லூரிகளில் ஒன்றான COLLEGE WIT இல் இருந்து வருகைதந்துள்ள விரிவுரையாளர்

Mr.HOMABALAN RATNAM,
*HEAD OF MARKETING*
*AND ADMISSION DEPARTMENT,*
*COLLEGE WIT.*

அவர்களால் அனுமதிகளுக்கான நேர்முகத்தேர்வு இப்பொழுது யாழ்நகரில் நடைபெறுகிறது.

அனுமதிக்கு முந்துங்கள்.

அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

திகதி : இன்றும் நாளையும்
நாளைமறுதினமும

நேரம் : 10a.m. – 4 p.m.

முகவரி:

வே.அம்பிகைபாகன்,
காங்கேயன் கலைக்கோட்டம்,
போக்காலை வீதி,
உடுப்பிட்டி,

தொலைபேசி எண்: 0776724350.

(38031)(42-11-34-45)



## G.C.E.O/L முன்னோடிப் பரீட்சை

2004 டிசெம்பரில் O/L பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் எவரும் நவம்பர்மாதம் நடைபெறும் பயிற்சிப் பரீட்சையில் தோற்றமுடியும்.

பரீட்சைமுடிவில் விடைக்குறிப்புகள் வழங்கப்படும். பதிவுகளை இம்மாதம் 30 ஆம், 31 ஆம் திகதிகளில் மேற்கொள்ளவும். (38007)

WIN கல்வி நிலையம,
34, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.


## ஆறுமுக நாவலர் நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம், ஒக்,29

வண்ணை நாவலர் மகா வித்தியாலத்தின் நிறுவுநர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நினைவுப் பேருரை நிகழ்வும் பரிசுத்தினமும் இன்று வெள்ளிக்கிழமை காலை 10மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியாலயப் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

அதிபர் ந.சிவராஜா தலைமையில் நடைபெறும் இந்தவைபவங்களில் முதன்மை விருந்தினராகச் சைவ பரிபாலன சபைத் தலைவர் சைவப்புலவர் வல்லிபுரம் கந்தசாமி கலந்து கொள்வார்.

நாவலர் நினைவுப் பேருரையை யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறையைச் சோந்த கலாநிதி மா.வேதநாதன் நிகழ்த்துவார்.

தொடர்ந்து பாலபாடம் மறுபதிப்பை யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் வெளியிட்டுவைப்பார்.

முதற்பிரதியை ஓய்வுபெற்ற ஆசிரியை முத்தமிழரசி புஷ்பா செல்வநாயகம் பெற்றுக் கொள்வார்.

(ஐ-202)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஒக்.29

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் பெண்கள் அபிவிருத்தித் திட்டப் பிரிவினரின் ஏற்பாட்டில் 'அரசியலில் பெண்கள்' என்னும் தலைப்பில் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக அரசறிவியல் சமூகவியல்துறைப் பேராசிரியர் எ.வி.மணிவாசகர் இதில கருத்துரை வழங்குவார். இக்கருததரங்கில் பெண்கள் அமைப்புக்களைச் சேர்ந்தோரும் அரசறிவியல்துறை மாணவர்கள் மற்றும் ஆர்வலர்கள் அனைவரும் கலந்து பயன்பெறலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-202)

## கரவெட்டியில் கலாசார விழா

கரவெட்டி,ஒக்.29

கரவெட்டிப் பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் கலாசாரவிழாவும் கண்காட்சியும் நாளையும் நாளைமறுதினமும் கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளன.

இவ்விழாவில் பிரதேச செயலகப் பிரிவினைச் சேர்ந்த மறைந்த கலைஞர்களின் புகைப்படங்கள், வெளிப்பாடுகள், ஆக்கங்கள் என்பன காட்சிப்படுத்தப்படவுள்ளன.

அவற்றை வைத்திருப்போர் கரவெட்டிப் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளுமாறு கரவெடடிப் பிரதேசசெயலர் கேட்டுள்ளார்.

(ஐ-204)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.29

வெண்புறா செயற்கை உறுப்பு தொழில் நுட்ப நிறுவனம் 'யுனிசெவ்' நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்திய கண்ணிவெடி இடர் அபாயக் கல்வி கட்டுரை, சித்திரப் போட்டிகளின் பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு இலக்கம் 63, பலாலிவீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள வெண்புறா நிறுவனத்தில் இடம் பெறவுள்ளது.

(ஐ-204)


முருகன் துணை

## விவாஹ சுபமுகூர்த்த அழைப்பு

நிகழும் மங்களகரமான தாரண வருஷம் ஐப்பசி மாதம் 15 ஆம் நாள் (31.10.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 11.58 முதல் 1.00 மணிக்குள் வரும் மகர லக்கினமும் ரோகிணி நட்சத்திரமும் அமர பட்ச திருதியை சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்தத்தில்

சங்கத்தானை
பிரம்மஸ்ரீ குமாரசுவாமி ஐயரின் பௌத்திரியும்
சிவஸ்ரீ ஸ்ரீ காந்தக்குருக்கள் மனோன்மணி அம்மா
தம்பதிகளின் ஜேஷ்ட புத்திரியுமாகிய
சௌபாக்கியவதி
ஜெயலஷ்மி (ஜெயா)

வண்ணார்பண்ணை
பிரம்ம ஸ்ரீ கனகசபாபதி ஐயரின் பௌத்திரனும்
சிவஸ்ரீ மகாகணபதீஸ்வரக்குருக்கள்
தங்கமீனாட்சியம்மை தம்பதிகளின் ஜேஷ்ட புத்திரன்
சிரஞ்சீவி [illegible] (பிரபா)
(செருத்தனைப்பதி மகா மாரியம்மன் தேவஸ்தானம், புளியங்கூடல்)

கன்னிகாதாரண பாணிக்கிரண திருமாங்கல்யதாரணம் செய்ய முருகனின் திருவருள் துணைகொண்டு பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட மேற்படி சுபமுகூர்த்தம் மணமகள் இல்லத்தில் நடைபெற இருப்பதால் தங்கள் பந்துமித்ர சகிதம் வந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை விரும்பும்

சிவஸ்ரீ குமார ஸ்ரீகாந்தக்குருக்கள்
மனோன்மணி அம்மா தம்பதிகள்
மீனாட்சி அம்மன் கோயிலடி
சங்கத்தானை, சாவகச்சேரி.
தொலைபேசி: 077 3068853

சமாவர்த்தனம் காலை 7.00 மணிக்கு மணமகனின் இல்லத்தில் நடைபெறும்
(இருவீட்டார் அழைப்பு)

சிவஸ்ரீ மகாகணபதீஸ்வரக்குருக்கள்
தங்கமீனாட்சியம்மா தம்பதிகள்
18, துரைராஜா வீதி
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-222 5851.

மாலை 4.00 மணிக்கு மணமகன் இல்லத்தில் வரவேற்பு உபசாரம் நடைபெறும்.

(38038)(43-34-11-45)



பிள்ளையார் துணை

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




திரு. திருமதி
கோவிந்தராசா - சிறீலதா
தம்பதிகளின்
அருந்தவப் புதல்வி
செல்வி யகீர்த்தா

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (29-10-2004) வெள்ளிக்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறாா்.

யகிக்குட்டியை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பா குடும்பம், வன்னியில் உள்ள பெரியப்பா குடும்பம், பெரியத்தை, சின்னத்தை, ஆசை அத்தை குடும்பத்தினரும், பெரியமாமா குடும்பம், ஆசை மாமா (லண்டன்), சித்தப்பா – சித்தி (சுவிஸ்), சின்னமாமா, சின்னச்சித்தி மற்றும் அப்பப்பாமார், அம்மம்மாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், அத்தைமார், அன்ராமார், சித்தப்பாமார், அக்காமார், அண்ணாமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர் குடும்ப நண்பர்கள் அனைவரும் ஸ்ரீ நயினை நாகபூஷணி அம்மன் அருள்பெற்று சீரும் சிறப்புமாக பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென உளமார வாழ்த்துகின்றனர்.

நிரந்தர முகவரி:
எழுதுமட்டுவாழ் தெற்கு,
எழுதுமட்டுவாழ்.

தற்காலிக முகவரி:
உசன், மிருசுவில்.

(38035) (26-44-46)

அன்புடன் வாழ்த்தும்:
சிறிசுதாஸ்கரன்
(சின்னமாமா).



## கண்ணீர் அஞ்சலி



தீவகக் கல்வி வளர்ச்சியில் தோன்றாத்துணை நின்ற தீவக வலயக் கல்விப் பணிப்பாளர்

அமரர்

**பொ.வேணுகோபால வாணிதாசன்**

அவர்களின் அகால மரணச் செய்திகேட்டு பெருந்துயர் அடைகின்றோம்.

அன்னாரின் திடீர் மறைவினால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் ஆறுதல்களையும் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/மண்டைதீவு மகா
வித்தியாலயம், மண்டைதீவு.

(38056)(34-11-45)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு
01
-
08
-
1948



உதிர்வு
29
-
09
-
2004

"காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
யாலத்தின் மானப் பெரிது"

திருமதி **குணரத்தினம் சத்தியலட்சுமி**

ஆறாத்துயர் தந்த எமது குடும்பத் தலைவி அன்பு அன்னை சத்தியலட்சுமி குணரத்தினம 29.09.2004 அன்று இறைபதமடைந்த செய்திகேட்டு எம் துயரத்தைத் தம்துயரமாகக் கொண்டு செயலாற்றிய அயலவர்கள், அன்பர்கள், நண்பர்கள், உற்றார், உறவினர்கள அத்துயரச் செய்தியை அறிந்து தூரததே இருந்து பாசத்தை தொலைபேசிகள், தந்திகள் மூலம் தெரிவிதத எம் பாசமுள்ளோர்க்கும்,

எல்லாவற்றிற்கும் மேலாக நோயுற்று இருந்தவேளையிலே ஊக்கத்துடன் தேவையான அனைத்து சிகிச்சைகளையும் அளித்த யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்களுக்கும் தாதிமார்களுக்கும் நன்றி கூறுகின்றோம்.

தக்க சமயத்தில் உதவிகள் செய்த அனைவருக்கும் நேரில் வந்து மரணச் சடங்கிலும், இன்று நடைபெறும் ஆத்ம சாந்திப் பூஜையிலும் கலந்துகொண்டவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலியை அச்சிட்டு வெளியிட்டோருக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை நவில்கின்றோம்.

மில் லேன்,
மல்லாகம்.

(38053)(34-11-45)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



THE HALO TRUST

## VACANCY
## Post Of Office Manager

*The Applicant should have the following Qualifications:*

- An Excellent command in English, Tamil & Sinhala
- Age should be between 24 to 40.
- Fair knowledge in Accounts & Previous Experience preferable.
- Applicant should have Management skills, Knowledge of stores & computer programmes as Ms Office & Corel Draw.
- Previous experience required preferably with International NGOs

The selected person should be prepared to visit the HALO Trust's other Locations Trincomalee & Colombo.

Salary Negotiable.

Please send your bio data with contact Telephone Numbers before 5th of November.

To:
The Program Manager
**The HALO Trust**
655, Navalar Road, Nallur, Jaffna. (38032) (34-11-45)


# G.C.E. O/L MODEL PAPER
## English Language

Time: **1.00 Hour** **Part I** Prepared By: **Mr.A.Umavaheesar**

**Test**

**01.** Study the picture and fill in the blanks. Use the prepositions given in the box. one has been done for you.

| **through, along, down, into, on, out** |
|---|




Ravi came ...out... of the hotel. Walked .........the footpath and mounted ........the mountain came ....and walked.....the bund of the tea bushes and went .......the tea factory.

(5 marks)

**Test**

**02.** Read the following text and complete the chart

There are five vacancies in our Institute for English News Readers. If you have a distinction in English at the G.C.E.O/ L. Passes a clear voice with a flour for announcing a good knowledge of current affairs and in the age group of 18-28 call over at the office of the personal manager on 20th oct. at 9.30 a.m. for further information contact personal manager on 021 222 2992.

Make use of this opportunity English News Readers.

1) No. of Vacancies:...................

2) Qualifications required
   a. Voice:.......
   b. Education:........
   c. Knowledge:.......

3) Special Ability:.....................

4) Age Group:..........................

5) Whom to meet:....................

6) When:................................

7) Time:..................................

Contact No. for more information:..........................

(05 marks)

**Test**

**03.** Complete the following telephone (conversation) by selecting. the most suitable word.

A: Hello, Dental Surgery
B: Hello, Is there any chance ......................(of, to, for) an appointment today? It's ...........(a, an, the) emergency.
A: Could you ............(told, telling, tell) me exactly. What the problem is?
B: Yes, I've a broken filling and ..........(it, its, it's) really uncomfortable. I want to get it..........(attend, attended, attending) to.
A: Well Let me see. Mr.Suren is very busy but he might .......(be, is, was) able to fit you in about 4 o'clock this evening is it all right?
B: can I come .............(early, earlier, earliest) than that?
A: If he .................(coming, comes, come) back for Lunch early, Yes 1.30 p.m. Is ............(than, that, then) all right?
B: Oh, that's be great . yes.
A: Could I take .........(Up, Down, over) your name please?
B: Yes It's Mrs.Mohanathas, Good Bye.
A: Right well thank you. Mrs.Mohanathas, Good Bye.

(05 marks)
(5 marks)

**Test**

04 Here is a notice published by a school, Read it cut Karefully then answer the questions.

**J/Manipay Hindu College**
Cordially Invites you to the
**ENGLISH DAY - 2004**

| | |
|---|---|
| Chief guest: | Mr.T.Appalingam (Retired Principal) |
| Venue: | Kumarasami open air stage |
| Time: | Friday 20th June 2004 10.30 a.m. |
| Special Guest: | Mr.B.Vamathevan (Education Director) |

Pricipal, Staff and Students (M.H.C.)

1. When is the programme?......................................
2. Who is the special guest of the day?......................
3. Where will the English Day be held?......................
4. Is Mr.T.Appalingam still in service?......................
5. Who invite to the English Day?............................

(5 marks)

**Test**

**05.** Read the following results schedule and answer the questions given below.

DEPARTMENT OF EXAMINATION
G.C.E.(O/L) 2003 December
Results Schedule

*Name:* V.Bavan *Index Number*: 162046 *Centre:* J/Union College, Tellippalai.

| Subiect No: | 01 | 03 | 04 | 35 | 51 | 41 | 18 | 23 |
|---|---|---|---|---|---|---|---|---|
| Grade: | C | S | D | C | D | D | C | D |

| D | C | S | F |
|---|---|---|---|
| 4 | 3 | 1 | - |

A.P.Kanagarathnam
*Commissioner of Exam.*

1. In which year Bavan sat for the exam?
..........................................................
2. Whose results schedule is this?
..........................................................
3. Howmany credit passes has this candidate got?
..........................................................
4. Who issued this results schedule?
..........................................................
5. What is the Index number of this candidate?

(5 marks)

**Test**

**06.** Read the following telegram. then write short answers to the questions that follow.

| | |
|---|---|
| Telegram | Address: Yapa bandara<br>Galle Road,<br>Baddegama. |
| Next Rugbytour nament at Galle public grounds on 15th December. Enter a team. | Gamini Abeywardena, National coach. |

1. Who received the telegram?
2. What is the receiver's address?
3. When is the tournament?
4. Where will the (Tournament) be played?
5. Who is the national coach?

(5 marks)

**Test**

**07.** Read the following, text and help him to complete his Bio-Data.

Mr.Shanmugam Seelan wants to apply for the post of English Stenographer. He was born on 5 th January 1980 at Chulipuram. He has passed his G.C.E.(A/L) with 2B and 2C. He has also completed a course in shorthand and typing at the Jaffna College Institute of Technology, Vaddukoddai. He has Distinction passes in (O/L) maths and English. His shorthand speed is 70W.P.M. and typing speed is 30 W.P.M.. He has been working as a clerk at the office of the Principal, Manipay Hindu College since January 2003. Now he stays at "Palamuthirsolai" Manipay Road, Anaikoddai.

**Application for the post of English Stenographer**

1. Post of:.......................................
2. Full Name:...................................
3. Permanent Address:..................
4. Date of Birth:.............................
5. Sex:............................................
6. Age:.............................................
7. Nationality:.................................
8. Educational qualification:..........
9. Other Qualification:...................
10. Present Job:...............................
11. Experience:..............................

.........
Signature

Date:................

(5 marks)

**Test**

**08.** Read the following paragraph about **Nayana** and write a similar paragraph about Raju or Fathima.

Nayana is eleven yeras old. she attends Holy Family. Convent, Kalutara. She studies in year six. Nayana is fond of Needle work and Sinhala. But dislikes art. Her ambition is to become a teacher.

| Name | NAYANA | RAJU | FATHIMA |
|---|---|---|---|
| Age | 11 Years | 10 Years | 12 Years |
| School | Holy Family Convent, Kalutara | Hindu Boys School, Ratmalana | Muslim Ladies College Colombo4 |
| Grade | Year six | Year five | Year Seven |
| Likes | Sinhala and Needlework | Maths and Science | Social Studies and Music |
| Dislikes | Art | Woodwork | Home Science |
| Ambition | Teacher | Doctor | Journalist |

(5 marks)

..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................

**Test**

**09.** Write an application for Job in a Local newspaper using about 100 Words.

**Post of Librarian**

Urban Council,
Anuradhapura.

| | |
|---|---|
| Qualifications: | G.C.E.( O/L) 3 Subjects with a good knowledge of English<br>2-3 years experience.<br>Should have passed National Certificate in Librarian ship. |
| Age: | 20-30 years. |

## அழகுக்கலையில் புதிய பயிற்சிநெறிகள் ஆரம்பம்!

MOON BEAUTY CARE இயக்குநரும்,
அழகுக்கலை பயிற்றுவிப்பாளரும், நடன ஆசிரியையுமான
திருமதி B.அகிலா அவர்களால் பயிற்சி வழங்கப்படும்.

1. ஒரு மாத கால பயிற்சிநெறி (சான்றிதழ் இல்லை)
2. Diploma பயிற்சி (3 மாதம், சான்றிதழ் உண்டு)
3. Advance பயிற்சி (3 மாதம், சான்றிதழ் உண்டு)

Course விவரம் சம்பந்தமான மேலதிக விவரங்கள் ஆசிரியையுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

☆ யாழ்ப்பாணத்தில் (இல. 94, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி)
ஆரம்பம்: 30.10.2004 பி.ப. 2.00 (பு.நே.)

☆ மானிப்பாயில் RTR பெண்கள் அழகுக்கலை பயிற்சி நிலையம் (பிரதான வீதி)
ஆரம்பம்: 30.10.2004 முற்பகல் 11.00 மணி (பு.நே.)

☆ வடமராட்சி, தென்மராட்சியிலும் பயிற்சிகள் இடம்பெறும்.

மேலதிக விவரங்களுக்கு: 0777-570138

★ ஏற்கனவே பதிவை மேற்கொண்டவர்களும்
புதிதாகச் சேரவிரும்புபவர்களும் அன்று சமுகந்தரவும்.
(38029)(42-14-26)


## 10 ஆவது ஆண்டு திருமண வாழ்த்து



சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டையைச் சேர்ந்த
சின்னத்துரை கருணாகரன் - செல்வி
தம்பதிகளை வாழ்த்துகின்றோம்.
தமது 10ஆவது ஆண்டு திருமண நாளை
இன்று (29-10-2004) வெள்ளிக்கிழமை
லெபனான் சென்னல் பில்லிலுள்ள
தமது இல்லத்தில் மிக அமைதியாகக்
கொண்டாடுகிறார்கள்.
இவர்களை அம்மா, அப்பா,
தங்கை மயூரதி, தம்பிமார் மற்றும்
லண்டன், ஜேர்மன், வகறேன்,
வவுனியா, ஆனைக்கோட்டையில் உள்ள
உற்றார், உறவினர், நண்பர்கள்
அனைவரும் ஸ்ரீ வரத விக்கினேஸ்வரர்
அருளால் பல்லாண்டு
காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

அன்புத் தாயார்
சி.பூரணம்.
"அன்னை இல்லம்",
சங்கரப்பிள்ளை வீதி.
ஆனைக்கோட்டை.

கருணாகரன் செல்வி

(37773) (26-14-44)


இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும்
விரைவாக பொதிகள், கடிதங்களை
அனுப்பிட நீங்கள் நாட வேண்டிய ஒரே வழி.

FedEx Express®

விரைவு
பாதுகாப்பு
நம்பகத்தன்மை

தீபாவளியை முன்னிட்டு
விசேட கழிவு 10%
மற்றும் விசேட சலுகைகளும் வழங்குகின்றார்கள்.

திருமுருகன் கொம்னிகேஷன்

259,கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
(Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
(பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 222 7310


# பலகோடி ரூபாவைக் கைமாற்றிக்கொண்டு தொழிலாளரைக் காட்டிக் கொடுத்துவிட்டனர்

## அரசைச் சாடுகின்றார் ஜே.வி.பியின் சந்திரசேகரன்

கொழும்பு,ஒக்.29

கூட்டு ஒப்பந்தம் என்ற பெயரில் தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளுக்கு ஆப்பு வைக்கப்பட்டுள்ளது. பலகோடி ரூபாவைக் கைமாற்றிக்கொண்டு தொழிலாளர்களைக் காட்டிக்கொடுத்துவிட்டனர்.

இ.தொ. காங்கிரஸையும் அரசையும் இப்படிச் சாடுகிறார். ஜே.வி.பி. தமிழ் நாடாளு மன்ற உறுப்பினரான இராமலிங்கம் சந்திர சேகரன்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பான கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டுவிட்டது. ஆக 14 ரூபாவே சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளது என்ற செய்தி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

காலம் காலமாகக் காட்டிக்கொடுத்தே சுக போகம் அனுபவித்த தொழிற்சங்கங்கள், இம் முறையும் வழமைபோல் தோட்டத் தொழிலாளர்களைக் காட்டிக்கொடுத்துவிட்டன.

பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்ட போதே தோட்டத் துரைமார் சம்மேளனம் 14 ரூபா சம்பள உயர்வு வழங்க முன்வந்தது. ஆனால், இந்தத் தொழிற்சங்கங்கள் தமக்குக் கிடைக்க வேண்டிய கமிஷன் தொடர்பாகவே இவ்வளவு காலமும் பேச்சு என்ற பெயரில் இழுத்தடித்துக்கொண்டிருந்தன. இதன் பின்னணியில் பல கோடி ரூபா கைமாறியுள்ளதாகவும் கூறப் படுகின்றது.

மாறி மாறி வந்த அரசுகளும் தமது பொறுப்பைத் தட்டிக்கழிக்கும் வகையில், கூட்டு ஒப்பந்தம் என்ற பெயரில் தோட்டத்தொழிலாளர்களைக் கம்பனிக்காரர்களிடம் தள்ளிவிட்டன.

வரவு - செல்வுத்திட்டத்தின் மூலமும், சம்பள நிர்ணய சபை மூலமும் சம்பள உயர்வுகள் வழங்கப்படும்போது கூட்டு ஒப்பந்தம் செய்தவர்கள் அவற்றைத் தாங்கள் தொழிலாளருக்கு வழங்கமுடியாது என்று கைவிரித்து விடுவார்கள்.

எனவே, இம்முறை வரவு - செலவுத்திட்டத்தின் மூலம் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஏதாவது கிடைக்கும் என்ற நம்பிக்கையும் இப்போது கூட்டு ஒப்பந்தத்தால் சிதறடிக்கப்பட்டுவிட்டது.

எனவே, கூட்டு ஒப்பந்தம் என்ற விலங்கு உடைக்கப்பட்டால்தான் தோட்டத் தொழிலாளர்களுக்கு விமோசனம் ஏற்படும் - என்று கூறுகின்றார் சந்திரசேகரன் எம்.பி. (எ)


Swan சுவான் டீசல் என்ஜின்ஸ்

மிக மேன்மையான நம்பிக்கை
ஹொரிசான்டல், 4 ஸ்ரோக்
கையிருப்பு 9.5 H/P வரை
உதிரிப்பாகங்கள் உண்டு



விற்பனைக்குப் பின் உயர்ந்த சேவை (After-sales service) வழங்கப்படும்.

ஏக முகவர்கள்
சென்ற் அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்
524, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 2324261-5, 2337283-5 நேரடி : 2337286
பெக்ஸ்: 2446554

நாடெங்குமுள்ள விநியோகஸ்தர்களிடம் கிடைக்கின்றன


# சித்த வைத்தியக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஒக்.29

சித்த வைத்தியம் தொடர்பான கருத்தரங்கு ஒன்று, இன்று வெள்ளிக்கிழமை காலை 10.30 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரையும் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

'வாத ரோகத்தில் சித்த வைத்திய சிகிச்சை சிறப்பு' எனும் தலைப்பில் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் வலி. மேற்குப் பிரதேச சபையின் வைத்தியப் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி செ.பரமசிவம்பிள்ளை கருத்துரை நிகழ்த்துவார். (எ-6)


## புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

அதிபர்களே! மாணவமணிகளே!
நூலக வாரத்தை முன்னிட்டு தென்மராட்சி
வலயக் கல்வி அலுவலகமும் ஆல் சிலோன்
டிஸ்ரிபியூட்டர்ஸ°ம் இணைந்து வழங்கும்
மாபெரும் புத்தகக் கண்காட்சியும்
மலிவு விற்பனையும்
இடம்: சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி
நேரம்: காலை 9மணிமுதல் 4மணிவரை
நாள்: 30 ஆம் திகதிமுதல் 31 வரை
அனைவரையும் கலந்து பயன்பெறும்
வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.
☆கடந்த 45 வருடங்களாகக் கல்விச்
செல்வத்தை ஊட்டி லட்சக்கணக்கான
வித்தகர்களை உருவாக்கிய ஸ்தாபனம்
ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்,
212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 021 222 5542
(சி38397) (32-14-44-26)


ஓம்
ஸ்ரீராம ஜயம்

## விவாஹ சுபமுகூர்த்த அழைப்பு

*அன்புடையீர்!*

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான தாரண வருஷம் ஐப்பசித் திங்கள் 15ஆம் நாள் (2004.10.31) ஞாயிற்றுக்கிழமை திருதியைத் திதியும், ரோஹிணி நட்ஷத்திரமும், சித்தயோகமும், குருஹோரையும் கூடிய சுபதினத்தில் காலை 11.05 மணி முதல் 12.05 மணிக்குள் வரும் மகர லக்ன சுபமுகூர்த்தத்தில்

மாவை ஆதீனகர்த்தா சிவஸ்ரீ க.துரைஸ்வாமிக் குருக்கள
திருமதி பச்சைநாயகி அம்பாள தம்பதிகளின்
ஜேஷ்ட புத்திரன்
**சிரஞ்ஜீவி ஸ்வாமிநாத சர்மா (சந்திரனு)க்கு**

நல்லூர் 'வித்தியா சாகர' நியாய சிரோமணி
ப்ரம்மஸ்ரீ கி.சுப்பிரமணிய சாஸ்திரிகள் கமலாதேவி
தம்பதிகளின் கனிஷ்ட புத்திரி
**சௌபாக்கியவதி நிர்மலாதேவியை**

கன்னிகாதான, திருமாங்கல்ய தாரண, பாணிக்ரஹணம் செய்வதாய் ஸ்ரீ கைலாச விநாயகப்பெருமான் திருவருட் துணையுடனும், மாவை வல்லீ தேவசேனா சமேத முருகப்பெருமான் துணையுடனும், நடேசப்பெருமான் திருவருள் துணையுடனும் ஸ்ரீ ஜகத்குரு சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் குருவருளுடனும் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு மேற்படி முகூர்த்தம்
சிவன் கோயில் கல்யாண மண்டபம், நல்லூரில்
நடைபெறவிருப்பதால் தாங்கள் தங்கள் இஷ்டமித்திர பந்துக்களுடன் வந்திருந்து மேற்படி சுபமுகூர்த்தத்தை நடத்தி வைத்து தம்பதியரை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

*சமாவர்த்தனம்: காலை 6.00-8.30 மணிக்குள் மணமகன் இல்லம், கரவெட்டி, தச்சந்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலயம்*

*வரவேற்பு உபசாரம்: மணமகள் இல்லத்தில் 31.10.2004 மாலை 6.30 முதல் 9.00 மணிவரை , மணமகன் இல்லத்தில் (கரவெட்டி) 1.11.2004 திங்கட்கிழமை மாலை 4.00மணி முதல் நடைபெறும்.* (யாவும் பழைய நேரப்படி நடைபெறும்)

தங்கள் நல்வரவை நாடும்:
(இருவீட்டார் அழைப்பு)

**ஸ்ரீமதி து.பச்சைநாயகி அம்மாள்**
ஸ்ரீமதி து.பச்சைநாயகி அம்மாளும்
மணமகனின் சகோதரர்களும்
98 / 20, வோல்ஸ் லேன்,
கொழும்பு-15
4-614110

**ஸ்ரீமதி கமலாதேவி சுப்பிரமணிய சாஸ்திரிகள்,**
**ஸ்ரீமான் ஸ்ரீமதி சு.ராதாகிருஷ்ண சர்மா,**
**அகிலாண்டேஸ்வரி தம்பதிகள்**

வரவேற்பாளர்கள்:
ஸ்ரீமான் ஸ்ரீமதி கே.கே.கோபாலன் சர்மா
லஷ்மிதேவி தம்பதிகள்
ஸ்ரீமான் ஸ்ரீமதி ப.ராஜகோபாலசர்மா
சரஸ்வதிதேவி தம்பதிகள், சு.பாலகிருஷ்ணசர்மா,
சு.நவநீதகிருஷ்ணசர்மா,
33, நடேசர் கோயில், கடைச்சாமி வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம். 0712 363873.

(38026)(39-14-44-26)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தவப்பேறு 27 - 09 - 1956

சிவப்பேறு 09 - 11 - 2003

### அமரர் சிவகுரு சிவரத்தினம்

(ஓய்வுபெற்ற கிளை முகாமையாளர்,
சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்)

அன்புக்கோர் அகல் விளக்காய்
ஊர் போற்ற அவனி தனில்
வாழ்ந்த உத்தமரே - நாம்
உங்களையே நினைந்திருக்க
நீங்கள் மட்டும் - எமை
மறந்து சென்றதேனோ?
எம் உயிர் உள்ள வரை
உம் நினைவு எம்மோடு
நிலைத்திருக்கும் எந்நாளும்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல ஈவினை கற்பக விநாயகனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஈவினை மத்தி,
ஈவினை.

*பிரிவால் வாடும்:*
குடும்பத்தினர்.

(37982) (26-14-44)

# விளங்கி அறிந்து எழுதும் புதிய முறைக்கு நூலகப் பயன்பாடு பெரிதும் உதவும்

**பாடசாலைகளில் தற்போது நூலக வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. அதனை முன்னிட்டு இக் கட்டுரை பிரசுரமாகிறது.**

ஒக்ரோபர் மாதத்தில்வரும் நான்காவது திங்கட்கிழமை அனைத்துலக பாடசாலை நூலக நாளாகும். 2003 ஆம் ஆண்டிலிருந்து ஒக்ரோபர் மாதம் நான்காவது திங்கட்கிழமையுடன் ஆரம்பமாகும் ஐந்து நாள்களையும் பாடசாலை நூலகவாரமாகப் பிரகடனப்படுத்தியுள்ளனர்.

1977 இல் 700 நூலகங்களே நம் நாட்டின் பாடசாலைகளில் காணப்பட்டன. 1982 ஆம் ஆண்டு இது 3 ஆயிரத்து 800 ஆக உயர்ந்துள்ளது. 2003 ஆம் ஆண்டில் 4 ஆயிரம் பாடசாலைகள் நூலக வசதியைப் பெற்றுள்ளன.

நூலக வசதி இல்லாத பாடசாலைகளிலும் கூட கிடைக்கின்ற புத்தகங்களை அலுமாரிகளில் அடுக்கி ஓர் இடத்தை முறையற்ற நூலகமாகப் பயன்படுத்தி வருகின்றனர். முறையான நூலகங்களைப் பேணிவரும் பாடசாலைகளுக்கும் முறையற்ற நூலகங்களைப் பேணிவரும் பாடசாலைகளுக்கும் இந்நூலக தினமும் நூலகவாரமும் உந்து சக்தியாக அமைவது கண்கூடு.

பாடசாலை நூலகங்களின் அடிப்படை நோக்கம், மாணவர்களுக்கு நூலகப்பயன்பாட்டை விளக்குவதும், வாசிப்புப்பழக்கத்தினைத் தூண்டுவதும், சுய கற்றலுக்கு ஊக்குவிப்பதுமாகும். இவை பாடவிதானத்தோடு தொடர்புடைய நூல்களையும் அடிப்படை வாசிப்பிற்குரிய நூல்களையும் வழங்கிவருகின்றன. மாணவர்களின் ஓய்வு நேரங்கள் பாடசாலை நூலகங்களால் பயனுள்ள முறையில் கழிகின்றன. வகுப்பில் அல்லது பாடசாலையில் உள்ள ஆசிரியர் பற்றாக்குறையை இவை ஈடுசெய்கின்றன.

நூல்களைப் படிக்கும்போது ஏற்படும் சுவையுணர்வை மாணவர்கள் நுகர பாடசாலை நூலகங்கள் வழிகாட்டுகின்றன. ஆசிரியர்களுக்கு கற்பிக்கும் பாடங்களுடன் தொடர்பான நூல்கள், வழிகாட்டிகள், கைநூல்கள், மேலதிக வாசிப்பு நூல்கள், வாண்மைவிருத்திக்கான நூல்கள் என்பவற்றையும் குறைவின்றி வழங்கிவருகின்றன. கட்புல, செவிப்புல சாதனங்களை அறிமுகப்படுத்தி அறிவு நயப்பு ரசனைகளை வளர்க்க உதவுவனவாகவும் இவை காணப்படுகின்றன; மாணவர்களுக்குத் தேவையான தரவுகளை வழங்குகின்றன; நூல்களின் முக்கிய சிறப்புக் கருத்துக்களை எடுத்துரைக்கின்றன; கலந்துரையாடல்களை ஒழுங்குசெய்கின்றன; விமர்சன அமர்வுகளை ஏற்பாடு செய்கின்றன.

பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்களின் குறிப்புக்களில் தங்கி திருப்தியடைகின்றனர். பாடசாலை முடிந்தால் ஓய்வாக இருப்பதற்குப் பதில் தனியார்கல்வி நிலையங்களுக்குள் முடங்கிக் கிடக்கும் துர்ப்பாக்கிய நிலை இன்றைய ஒவ்வொரு மாணவனுக்கும் உள்ளது. இதனால், தமது பாடத்தோடு தொடர்புடைய தகவல்கள், பொதுவிடயங்கள் பற்றி அறிதல், தேடிக்கற்கும் ஆர்வம் முழுமையாக நம் நாட்டில் குறைவாகக் காணப்படுகின்றது. தமிழ், சிங்கள மொழிகளில் போதியளவான நூல்கள் வெளிவருவதில்லை. இது ஒரு குறைபாடாகும்.

உலகளாவிய ரீதியில் ஆங்கில மொழியில் தரமான நூல்கள், சஞ்சிகைகள் ஏராளமாக வெளிவருகின்றன. இவற்றை வாசிக்கக் கூடிய ஆங்கில அறிவு எமது மாணவர்களுக்குப் போதியளவில்லை. எனவே, இவ்வாறான குறைபாடுகளை நீக்குவதற்கான ஒரே ஒருவழி பாடசாலையின் நூலகப் பாவனையைத் தூண்டுவதே என்ற முடிவுக்கு கல்விச் சமூகம் தூண்டப்பட்டது.

அபிவிருத்தி அடைந்த நாடுகளில் பெற்றோர் தம் பிள்ளைகளை சிறுவர் நூலகங்களுக்கும், நூலகங்களுக்கும் அழைத்துச் சென்று நூல்களை அறிமுகமாக்கிப் பயன்படுத்தவும், வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கவும் வழிப்படுத்துகின்றனர். இந்நிலையை எமது பெற்றோர் மத்தியில் நூலக வாரமானது வளர்க்கின்றது. பாடசாலை நூலகர் அறிவின்பால் மாணவர்களை ஆற்றுப்படுத்துபவராக நூலக வாரம் உயர்த்தியுள்ளது.

தேசியக் கல்விக்கொள்கையில் பாடசாலை நூலகங்கள் முதன்மை பெறும் நிலை உருவாகியுள்ளது. வாசிப்பாற்றலை தூண்டுவதன் மூலம் சிங்கள, தமிழ் மொழிகளில் ஏராளமான நூல்கள் வெளிவர பாடசாலை நூலக வாரம் பெருந்துணை செய்வதாக உள்ளது. சுயகற்றலின் மூலம் ஆங்கில அறிவை விருத்திசெய்ய மாணவர்களுக்கு நூலகவாரமானது அடித்தளம் இடுவதாக அமையும்.

ஆரம்பப் பிரிவுக்கான பாடசாலை நூலகங்கள், விளையாட்டு விநோதச் செயற்பாடுகளுடன், மொழிப்பயிற்சிக்கான வாசிப்புத்திறனை விருத்திசெய்யக் கூடியவாறு அமைக்கப்பட்டு வருகின்றன. கனிஷ்ட, இடைநிலைக் கல்வி முறையில் அனுபவங்களோடு தொடர்புடைய கல்வியை வழங்கக்கூடிய நூலகங்கள் அமைந்துள்ளன. சிரேஷ்ட உயர்தர வகுப்பு மாணவர்கள் தகவல்களைத் தேடிக் கண்டுபிடிப்பதுடன் தாம்பெற்ற கருத்துக்களை, அவர்களின் வகுப்புப்பாடங்களுடன் ஒப்பிட்டு சுயகருத்துக்களை உருவாக்க பாடசாலை நூலகங்கள் வழிசெய்கின்றன.

புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கு அமைய ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் மூன்று பாடங்களையும் ஓர் உளச்சார்புத் தேர்வையும் பல்கலைக்கழகத் தேர்விற்கு மாணவர்கள் சந்திக்கின்றனர். இது நூலகப் பயன்பாட்டை வேண்டி நிற்கும் ஒரு பரீட்சையாகும். புதிய கல்விச் சீர்திருத்தம் தேடலுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றது. இச்சீர்திருத்தத்தின்படி ஆசிரியர்கள் வழிகாட்டுபவர்கள். மாணவர்கள் அந்த வழியில் சென்று தேடிக்கற்பவர்கள். இதற்குத் தொடர்மதிப்பீடுகள், ஒப்படைகள் பயன்படுத்தப்படுகின்றன.

பாடமாக்கி எழுதும் முறை புதிய கல்விச்

**நா.சிவநேசன் அதிபர்**
**புதுமடம் றோ.க.த.க. பாடசாலை, மானிப்பாய்.**

சீர்திருத்தத்தினால் நீங்கி, விளங்கி அறிந்து எழுதும் முறை உருவாகியுள்ளது. மாணவர்களின் அடைவு மட்டங்கள் பரீட்சைகளில் இருந்து தீர்மானிக்கும் நிலைமாறி தொடர்மதிப்பீடுகளிலிருந்தே தெரிந்துகொள்ளும் நிலை படிப்படியாகக் கட்டி எழுப்பப்பட்டு வருகிறது. இதற்கு நூலகப் பயன்பாடு இன்றியமையாததாக உள்ளது.

புதிய கல்விச் சீர்திருத்தம் 1999இல் தேசிய மட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து நூலகப்பயன்பாடு பாடசாலைகளில் அதிகரித்துச் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது. அனைத்துலக பாடசாலை நூலகநாளும், பாடசாலை நூலக வாரமும், பாடசாலை நூலகங்களை விருத்தியுறவைத்து கற்றல், கற்பித்தல் என்ற இரண்டு உன்னதமான இலக்குகளையும் வெற்றிபெற உதவும் என்பதில் ஐயமில்லை. ★

# ஆன்மீகச் சொற்பொழிவின் நூறாவது வைபவம் இன்று

யாழ்ப்பாணம்,ஒக்.29

இந்துசமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் நடத்தும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரின் 100 ஆவது சொற்பொழிவு இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றிலில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்துசமய விவகார அலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் -

'சைவசமய வளர்ச்சியில் சிவாச்சாரியார்களின் பங்களிப்பு' என்னும் தலைப்பில் சிவஸ்ரீ ப.சிவாநந்தசர்மாவும் -

'சைவசமய வளர்ச்சியில் ஆலய நிர்வாகிகளின் பங்களிப்பு' என்னும் தலைப்பில் சைவப்புலவர் ஏ.அனுசாந்தனும் -

'சைவசமய வளர்ச்சியில் தொண்டர்களின் பங்களிப்பு' என்னும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக மாணவன் ச.பாலசண்முகனும் -

'சைவசமய வளர்ச்சியில் மகளிரின் பங்களிப்பு' என்னும் தலைப்பில் ஆசிரியை எஸ்.தாட்சாயினியும் -

'சைவசமய வளர்ச்சியில் சமய நிறுவனங்களின் பங்களிப்பு' என்னும் தலைப்பில் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி ஆசிரியர் ச.லலீசனும் -

'சைவ சமய வளர்ச்சியில் ஆசிரியர்களின் பங்களிப்பு' என்னும் தலைப்பில் வலிகாமம் வலய ஆசிரிய ஆலோசகர் கந்த சத்தியதாசனும் சிறப்புரைகளை நிகழ்த்துவர்.

(ஜ-202-204)

# நல்லின கோழிக்குஞ்சுகள் விநியோகம்

சாவகச்சேரி, ஒக்.29

தென்மராட்சி கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையால் பண்ணையாளர்களுக்கு நல்லினக் கோழிக்குஞ்சுகளை வழங்க கால்நடை வைத்திய அதிகாரி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

இதன் மூலம் நல்லின பேட்டுக்குஞ்சுகள் உட்பட சேவல் குஞ்சுகளும் வழங்கப்பட்டு வருகிறது. தற்பொழுது கோழிவளர்ப்பில் ஈடுபடுபவர்களுக்கு இருதடவைகள் கோழிக்குஞ்சுகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நல்லின பேட்டுக்குஞ்சுகள் அச்சுவேலி பண்ணையிலிருந்து எடுத்துவரப்பட்டு பண்ணையாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் ஒன்று 45 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது.

2000 ஆம் ஆண்டு இடப்பெயர்வின் பின் தென்மராட்சியில் கோழி வளர்ப்பு அருகி வந்தமை குறிப்பிடத்தக்கது.

(10-31)

# வடபுல முஸ்லிம்களின் துயரங்களை ஜும்ஆவில் எடுத்துக்கூறக் கோரிக்கை

கொழும்பு,ஒக்.29

வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்டு 14 வருடங்களாக சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்துவரும் முஸ்லிம் மக்களின் துயரச் செய்திகளை இந்தப் புனித ரமழான் மாதத்தில் வருகின்ற ஜும் ஆத் தொழுகைகளின் போது தமது பிரதேசவாசிகளுக்கு எடுத்துக் கூறுமாறு வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு (என்.எம்.ஆர்.ஓ.) அனைத்துப் பள்ளிவாசல் நிர்வாகிகளுக்கும், கதீப்மார்களுக்கும் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

வடபுல முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு இம்மாதத்தோடு 14 ஆண்டுகள் பூர்த்தியடைகின்றது.

அதனையொட்டி இம்மாதத்தின் இறுதிவாரம் நினைவு வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. வடபுல முஸ்லிம்களின் பிரச்சினைகளை தேச, சர்வதேச ரீதியில் வெளிக்கொணடு வரவும் இவ்வமைப்பு தீர்மானித்துள்ளது. இதனையொட்டியே மேற்கண்ட வேண்டுகோள் இவ்வமைப்பினால் விடுவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் இடம்பெயர்ந்து அவதியுறும் மக்கள் மீளக் குடியமரவும், நிரந்தர சமாதானம் ஏற்படவும் அல்லாஹ்விடம் அனைவரும் பிரார்த்தனை செய்யுமாறும் இவ்வமைப்பின் செயலாளர் சுபியான் மௌலவி விடுத்திருக்கும் மேற்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-8)

# சுயதொழில் கடன் அதிகரிப்பு

தென்மராட்சி,ஒக்.29

சாவகச்சேரி சமுர்த்தி வங்கியினர் வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் சுயதொழில் முயற்சிக் கடனை 5 ஆயிரம் ரூபாவிலிருந்து 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கவுள்ளனர்.

கடந்த மாதம் வங்கியினால் 17 பயனாளிகளுக்கு தலா 5 ஆயிரம் ரூபாவீதம் கடன் வழங்கப்பட்டது.

இக் கடன் தொகை தமது தொழில் முயற்சிக்கு போதாது என வாடிக்கையாளர்கள் முறையிட்டதையடுத்து அந்தந்த பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் சிபார்சுடன் இக்கடன் தொகையை 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க வங்கி கட்டுப்பாட்டுச் சபைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளதாக அதன் தலைவர் ம.விவேகானந்தன் தெரிவித்தார்.

(3-117)

# பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், ஒக்.29

"யுனிசெப்" நிறுவனத்தின் அனுசரணையுடன் சர்வோதயம் நடத்தும் கிராம மட்டத் தொண்டர்களுக்கான பயிற்சிப் பட்டறை இன்று காலை 9 மணி தொடக்கம் சங்கானை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(ஜ -202)

# மானிப்பாய் பிரதேசசபையினர் திரைப்படம் தயாரிக்கின்றனர்

யாழ்ப்பாணம்,ஒக்.29

'பிரதேச சூழல்' எனும் தலைப்பிலான திரைப்படம் ஒன்றை மானிப்பாய் பிரதேச சபையின் திட்டமிடற் பிரிவு தயாரித்து வருகின்றது.

மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செல்வி தெ.து.விஜயலட்சுமியின் பணிப்பின் பேரில் இப்படம் 2 மணிநேரம் கொண்டதாகத் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

5 கட்டமாக இடம்பெறவுள்ள இப்படத் தயாரிப்பின் முதலாம் கட்டப் படப்பிடிப்பு காக்கைதீவு மாதிரிக் கிராமத்தினை முன்வைத்துத் தயாரிக்கப்பட்டுள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடங்கள், ஆலயங்கள், புராதன இடங்கள், கழிவுகள் கொட்டப்படும் இடங்கள், இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழும் மக்கள் தொடர்பான பிரச்சினைகள் ஆகியவற்றை முன் வைத்து இத்திரைப்படம் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

(10-185)

# மேஜர் தேசியன் ஞாபகார்த்த பஸ்தரிப்பு நிலையத்துக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம்,ஒக்.29

வேலணை துறையூர் ஐயனார் சனசமூக நிலையத்திற்கு அண்மையில் மாவீரர் மேஜர் தேசியன் ஞாபகார்த்தமாக பஸ்தரிப்பு நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

மேஜர் தேசியனின் குடும்பத்தினரால் அமைக்கப்படவுள்ள இந்த பஸ் தரிப்பிடத்திற்கான அடிக்கல் நேற்றுமுன்தினம் நட்டுவைக்கப்பட்டது.

தீவக மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் கோமகள், வேலணைப் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் யாழ்நம்பி, வேலணைத் துறையூர் தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் ஐ.தனஞ்சயன் மற்றும் சமாதான நீதிவான் சி.கார்த்திகேசு ஆகியோர் பஸ்தரிப்பு நிலையத்திற்கான அடிக்கல்லை நட்டுவைத்தனர்.

(10-5)



மக்கள் வங்கியின் 43 ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வுகள் அச்சுவேலி மக்கள் வங்கிக் கிளையில் அண்மையில் நடைபெற்றன. நிகழ்வில் கலந்துகொண்ட மக்கள் வங்கியின் வட வலய உதவிப் பொதுமுகாமையாளர் சி.இளம்பிறைநாதன் உரையாற்றுவதையும் பிரதேச முகாமையாளர் கே.சிவபாதவிருதயர், அச்சுவேலிக்கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம், உதவி முகாமையாளர் திருமதி ஆர். தவநாயகம், பிரதேசசபை உப அலுவலகப் பொறுப்பதிகாரி தி.மாணிக்கவாசகர் ஆகியோரையும் படத்தில் காணலாம். (படம் :- அச்சுவேலிச் செய்தியாளர்)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

ஆரம்ப கணித விளையாட்டுக்கள் ஆசிரியர் வழிகாட்டிநூல் (தரம் 1-5 வரை) வெளிவந்துவிட்டது. யாழ்.முன்னணி புத்தகசாலைகளில் விற்பனைக்குண்டு. ஆக்கம்: திருமதி ஜெயந்தி சாந்தன் (ஆசிரியர்), யா/வண்ணை நாவலர் மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம். (38060)

## வீடு, காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கந்தர்மடம் இந்துமகளிர் கல்லூரி ஒழுங்கையில், பல்கலைக்கழகப் பேபி ஸ்ரூடியோ இந்து மகளிர் கல்லூரிச் சுற்றாடலில் மேல்மாடி வீட்டுடன் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: K.குமாரகுலசிங்கம், ஏழாலை வடக்கு. T.P.: 077 - 6125140. (38030)

## தவறிவிட்டது

இல.64/1, ஸ்ரேஷன் லேன், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அருளப்பு டொனால்ட் என்பவருடைய தேசிய அ.அ. (இல.650092287V), விசேட அ.அட்டை என்பன 21-10-2004 வியாழக்கிழமை காலை புளியங்குளத்தில் பேர்ஸுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொலைபேசி இல. 6086903 இல் தொடர்புகொள்ளவும். அல்லது மேற்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டுகின்றோம். (38039)

C - 50 HONDA NP HT 7935 மோட்டார் சைக்கிளின் புதிய நம்பர் பிளேற்றும் அதன் அடையாள அட்டையும் மானிப்பாய்க்கும் யாழ். ஆயர் இல்லத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். செல்வி ம.டொலறோஸ், மணற்காடு, குடத்தனை அல்லது R.M.G. நேசநாயகம், புனித யுவானியார் ஆலயம், பெரியவிளான். (38063)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், பிரதான வீதியில் இரண்டாம் குறுக்குத்தெரு சந்திக்கு அருகில் ஒரு பரப்பு 2குளி சுற்று மதிலுடனும் நன்னீர் தண்ணீர் மற்றும் ரொயிலற், அட்டாஜ் பாத்ரூம் வசதிகளுடன் கூடிய வீடு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0776 - 111419, 0776 681914. (38049)

றெயில் றோட், கொக்குவில் கிழக்கில் 3 பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தரகர்கள் தேவையில்லை. தொடர்பு: 15, கோவில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (37984)

சுண்டுக்குளி கச்சேரிக்கு அருகில் 3 ¼ பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: 0777 145282. (37807)

## பழைய வீடு விற்பனைக்கு

வளைகள், மரங்கள், கதவுகள், நிலைகள், யன்னல்கள் என்பன நல்லநிலையிலுள்ள ஓட்டு வீடு விற்பனைக்கு உண்டு. அத்திவாரத்தோடு பிரித்து எடுப்போருக்கு முன்னுரிமை தரப்படும். தொடர்பு: ம.கங்காதரம், சரசாலை வடக்கு, சாவகச்சேரி. (37962)

## மணமகள் தேவை

1970ஆம் ஆண்டு பிறந்த மூலநட்சத்திரம், கிரகபாவம் 35 உடைய அரசாங்க உத்தியோகம் பார்க்கும் மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்புகளுக்கு: தொலைபேசி இல. 0776175325. (சி-38514)

## நூல்கள் காட்சிக்கு வைக்கப்படவுள்ளன

யாழ்ப்பாணம்,ஒக்.29

யாழ்.பொதுநூலகத்திற்கு இலங்கை கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட நூல்கள் அனைத்தும் இரு நாள்கள் நூலகத்தில் காட்சிக்கு வைக்கப்படும் என்று யாழ். மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராசா தெரிவித்துள்ளார்.

பௌதிகவியல், வரலாறு, அறிவியல் எனப் பல முக்கியமான நூல்கள் நூலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளமையினால், இந்த நூல்களை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பார்வையிட்டுத் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காகவே இந்தக் நூலகக் கர்ட்சி நடத்தப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட இந்த நூல்கள் காட்சிப்படுத்தப்படுவதை மாணவர்கள தவறாது பார்வையிட்டு பயன்பெறுமாறும் அவர் கேட்டுள்ளார். (10-6)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியையான
திருமதி சற்குணதிலகம் வேணுகோபால் அவர்களின்
அன்புக் கணவரும் தீவக வலயக்
கல்விப் பணிப்பாளருமான

**பொ. வேணுகோபால வாணிதாசன்**

அவர்களின் அகால மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் ஆற்றொணாத்துயரமும் அடைகின்றோம். அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். (சி-38538)

(43-19-46-26)

அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள்,
**யாழ்.வடஇந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை.**

## கண்ணீர் அஞ்சலி



தங்கோடை காரைநகரைப் பிறப்பிடமாகவும் 37/5, முதலாம் ஒழுங்கை பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட

**சுந்தரம்பிள்ளை சபாநாதன்**
**(சோதி)**

(ஜி.எஸ்.லிங்கநாதன் அன்கோ காசாளர்)

அவர்கள் நேற்று (28.10.2004) வியாழக்கிழமை காலமாகிவிட்டார். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஜி.எஸ்.லிங்கநாதன் அன்கோ,
13,14,பெரிய கடை,
யாழ்ப்பாணம்.
(38058) (43-19-46-26)

ஜி.எஸ்.லிங்கநாதன் அன்கோ
உரிமையாளரும்,
ஊழியர்களும்.

## கண்ணீர் அஞ்சலி

தீவக வலயக் கல்விப்பணிப்பாளர்

**பொன்னுத்துரை**
**வேணுகோபால வாணிதாசன்**

அவர்கள் (27.10.2004) அன்று அகால மரணமுற்ற செய்தியினை அறிந்து ஆழ்ந்த துயரமும் கவலையும் அடைகின்றோம். அன்னாரின் திடீர் பிரிவினால் துயருற்றுள்ள குடும்பத்தினருக்கு ஆழ்ந்த கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிக்கின்றோம்.

வலயக் கல்விப்பணிப்பாளர்,
பிரதி/உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்,
அலுவலர்கள், பணியாளர்கள்,
**வலிகாமம் கல்வி வலயம்.**
(38059) (43-19-46-26)

## எம் நெஞ்சம் மறவாத நினைவுகளுடன் ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 25 - 04 - 1925



உதிர்வு 08 - 11 - 1995

**திருமதி கமலாம்பாள் சுந்தரமூர்த்தி**

(தொண்டைமானாறு)

*குடும்பத்தின் தெய்வமாய் இல்லத்தில் ஒளிவிளக்காய்*
*பண்பின் சிகரமாய், பாசமிகு அன்னையாய்*
*அன்பூட்டி, அறிவூட்டி ஆதரவாயிருந்த – அம்மா!*
*பிரிவு என்னும் ஆறாத்துயர் தந்து ஆண்டுகள்*
*பலவானாலும் என்றென்றும் மாறாத உள்ளத்துடன் – எம்*
*அம்மாவின் ஆத்ம சாந்திக்காக ஆண்டவனை வேண்டும்...*

சுந்தரமூர்த்தி அன் சன்ஸ்,
இல. 210, ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.
(38010) (26-19-46)

**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**சகோதர, சகோதரிகள்.**

## சாவகச்சேரியில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் தின விழா

தென்மராட்சி,ஒக்.29

சாவகச்சேரி லயன்ஸ் கழகமும் தென்மராட்சிக் கல்வி வலயமும் இணைந்து நடத்திய ஐக்கிய நாடுகள் தினவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் செ.கா.நவரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

விழாவுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசாவும் சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளையும் கலந்துகொண்டனர்.

ஐக்கிய நாடுகள் தினத்தையொட்டி, மாணவர்களிடையே நடத்தப்பட்ட பொது அறிவுப் போட்டி, பேச்சுப்போட்டி ஆசிரியர்களிடையே நடத்தப்பட்ட விவாத மேடை ஆகியவற்றில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (10-117)

## சர்வோதயம் அமைப்பின் சிறுவர் பாசறை

யாழ்ப்பாணம்,ஒக்.29

சர்வோதயம் அமைப்பினால் யு.எஸ்.எய்ட். திட்டத்தின்கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இழந்த கல்வியை மீளப்பெறும் திட்டத்தின்கீழ் பயனடைந்து வருவோருக்கான பயிற்சிப் பாசறை நாளை சனிக்கிழமை 9.30 மணிக்கு ஏழாலை தெற்கு, மயிலாங்காடு ஸ்ரீமுருகன் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கரம்பைக் குறிசசி, மிருசுவில், காக்கைதீவு, ஊரெழு, மயிலங்காடு ஆகிய இடங்களைச் சேர்ந்த பாடசாலையிலிருந்து இடைவிலகிய மாணவர்கள், மன அழுத்தத்திற்கு உள்ளான பிள்ளைகள் மற்றும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் ஆகியோர் இந்தப் பயிற்சிப் பாசறையில் கலந்துகொள்ளவுள்ளனர். (10-202-203)

## கண்ணிவெடி, இடர் அபாயக்கல்வி கட்டுரை, சித்திரப்போட்டிகளின்

## பரிசளிப்பு விழா

வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம் யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்திய கண்ணி வெடி இடர் அபாயக்கல்வி கட்டுரை, சித்திரப்போட்டிகளின் பரிசளிப்புவிழா

**நாளை (30.10.2004) சனிக்கிழமை காலை 10 மணிக்கு வெண்புறா நிறுவனத்தில் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.**

பரிசில் பெறுவோர் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம்,
63, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல. 222 5932.
(38054)(42-19-46-16)

## மரண அறிவித்தல்

**பஞ்சாட்சரம் சிவஞானம்**

கணுக்கேணி மேற்கு, முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பஞ்சாட்சரம் சிவஞானம் 27.10.2004 புதன்கிழமை காலமானார்.

அன்னார் ரேவதியின் அன்புக் கணவரும் Dr. சியாமளா - ஈஸ்வரன் (யாழ்.போதனா வைத்தியசாலை) அவர்களின் அன்புத் தந்தையும் வே.ஈஸ்வரன் (விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்) அவர்களின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 31.10.2004 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கணுக்கேணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குமாரபுரம்,*
*முள்ளியவளை.*
(38057)(42-19-46-26)

தகவல்:
வே. ஈஸ்வரன் (மருமகன்,
விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்).

## ஊழியர் தேவை

எமது நிறுவனத்தின் களஞ்சிய சாலையில் இருந்து பொருள்கள்ள எடுத்துவந்து சரிபார்த்து, சிட்டைப்படி பொதிசெய்து வழங்குவதற்கு முன் அனுபவத்துடன் திறமையுள்ள ஆண் பணியாளர்கள் தேவை.

மாதாந்தச் சம்பளமாக 7000/= ரூபாவும் மேலதிகமான விசேடபடிகளும் வழங்கப்படும். சுயவிவரக் கோவை மற்றும் உறுதிப்படுத்தும் சான்றிதழுடன் நேரில் வரவும்.

**சிவா நறுமணப் பூங்கா**
**288, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
☎ 222 2567
(சி-38516)

## ஒன்பதாம் ஆண்டு நினைவு நாள்

குவலயத்தில் 10 - 06 - 1929



குகமயத்தில் 29 - 10 - 1995


**ஸ்ரீமான் ஷண்முகரத்நம் குமரேசன்**

(ஓய்வுபெற்ற விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை)

இன்முகம் எளிமை ஏற்றம்
இனிய நற் பேச்சு வாழ்வு
அன்புறும் உள்ளம் ஆற்றல்
ஆசிரியப் பணியின் பயன்கள்
நல்புறும் சமயச்சேவை
நனி பல செய்து சென்று
இன்றொரு ஒன்பதாண்டு!
ஏங்கினோம் வழுத்துகின்றோம்

மணியகாரன் ஒழுங்கை,
கொக்குவில்.
(38051)(34-19-46-26)

மனைவி,
பிள்ளைகள்.




பூநகரி, நல்லூர் மகாவித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட இரண்டு மாடிகள் கொண்ட கட்டடத் திறப்புவிழா அண்மையில் நடைபெற்றது.
புதிய கட்டடத்தின் தோற்றத்தை முதற்படத்திலும் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் உரையாற்றுவதையும் விருந்தினர்கள் உட்பட நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரை அடுத்தபடத்திலும் காணலாம்.
*(படங்கள்: பூநகரிச் செய்தியாளர்)*

### புதுக்குடியிருப்பு - வற்றாப்பளை வீதியில்

# புனரமைக்கப்பட்ட மூன்று பாலங்கள் கடந்த ஞாயிறன்று திறந்துவைப்பு

புதுக்குடியிருப்பு,ஒக்.29

'நிக்கொட்' நிதியுதவியுடன் புதுக்குடியிருப்பு - வற்றாப்பளை வீதியில் கள்ளியடி, சிற்றாறு ஆகிய இடங்களில் புனரமைக்கப்பட்ட மூன்று பாலங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்துவைக்கப்பட்டன.

இந் நிகழ்வில் பொதுச்சுடரினை முல்லை மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரி கே.ஜீவராஜ் ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியை புதுக்குடியிப்பு முள்ளியவளை வர்த்தக சங்கப் பொறுப்பாளர் இ.பிறையாளர் ஏற்றிவைத்தார்.

முதலாவது பாலத்தினை 'நிக்கொட்' நிறுவனத்தின் வடக்கு - கிழக்கு மாகாணப் பணிப்பாளர் த.லங்காநேசனும், இரண்டாவது பாலத்தினை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினமும், மூன்றாவது பாலத்தினை முல்லை மாவட்ட அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சு.சின்னண்ணாவும் நாடாவெட்டித் திறந்துவைத்தனர்.

இந்நிகழ்வில் வீதி அபிவிருத்தி அதிகார சபை நிறைவேற்றுப் பொறியியலாளர் எஸ்.சிவராமலிங்கம், வடக்கு - கிழக்கு மாகாணத் திணைக்களப் பொறியியலாளர் எஸ்.இராசேந்திரா, நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், வடக்கு - கிழக்கு மாகாண 'நிக்கொட்' பணிப்பாளர் த.லங்காநேசன், முல்லை மாவட்ட அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சு.சின்னண்ணா மற்றும் கிராம சேவையாளர் வீ.கனகசுந்தரசுவாமி ஆகியோர் உரைநிகழ்த்தினர்.

நிகழ்வில் பெருமளவிலான பொதுமக்களும் கலந்து கொண்டனர். (10-353-202)

## மல்லாவி மத்திய கல்லூரியின் நூலக தினவிழா

மல்லாவி,ஒக்.29

மல்லாவி மத்திய கல்லூரியின் நூலக தின விழா கடந்த திங்கட்கிழமை கல்லூரியின் நூலகர் பா.றுபினா தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக துணுக்காய் பிரதேச செயலகத் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திருமதி ஸ்ரீஸ்கந்தராசாவும் சிறப்பு விருந்தினர்களாக துணுக்காய் வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர்களான சு.பரந்தாமன், க.சிவப்பிரகாசம், துணுக்காய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆ.சுந்தரமூர்த்தி ஆகியோரும் கலந்துகொண்டனர். (10-322)

# பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தில் வன்னிப் பிரதேசத்துக்கு 2கோடி ரூபா

வவுனியா,ஒக்.29

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின்கீழ் வன்னிப் பிரதேசத்துக்கு 2கோடியே 10லட்சம் ரூபா நிதி இந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின் கீழ் 3கோடி ரூபா ஏற்கனவே ஒதுக்கப்பட்டிருந்தது.

இந்த நிதிக்குரிய வேலைத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பிராந்திய உட்கட்டமைப்பு அபிருத்தி அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்ட போதும் 2கோடியே 10 லட்சம் ரூபாவுக்கான திட்டங்களை மேற்கொள்ளவே அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது என்று வவுனியா மாவட்டச் செயலக பிரதித்திட்டப் பணிப்பாளர் ச.பரமகுலசிங்கம் தெரிவித்துள்ளார். (10)



கண்டாவளை, ஊரியான் கிராமத்தில் 'நியாப்' திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட பொது நோக்கு மண்டபத்தை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் நாடாவெட்டித் திறந்துவைப்பதைப் படத்தில் காணலாம்.
கண்டாவளைப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் உட்பட ஏனைய விருந்தினர்கள் படத்தில் உள்ளனர்.
*(படம்: பரந்தன் செய்தியாளர்)*




# நீர்ப்பாசனக் காணிகளில் அத்துமீறிக் குடியிருப்பு

முல்லைத்தீவு,ஒக்.29

முல்லைத்தீவில் நீர்ப்பாசனத் திட்டங்களுக்காகவும் - வாய்க்கால்களுக்காகவும், கலிங்கு நீர் வழிந்தோடுவதற்காகவும் ஒதுக்கப்பட்டுள்ள காணிகளில் சிலர் அத்துமீறிக் குடியிருப்புக்களை அமைப்பதுடன் விவசாயச் செய்கைகளிலும் ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தகைய நடடிக்கை அண்மைக்காலமாக அதிகரித்து வருவதாகவும் இந்நிலை தொடருமாயின் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள நீரேந்துப்பிரதேசங்களை இழக்க வேண்டிய நிலை ஏற்படும் எனவும், இதனால் காலப்போக்கில் நீர்ப்பாசனத்திட்டங்களே இல்லாமல் போகக் கூடிய நிலை உருவாகும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால், நீரேந்துப் பிரதேசங்களிலும் வாய்க்கால்களிலும், கலிங்கு நீர் வெளியேறும் பகுதிகளிலும் குடியிருப்புக்கள் அமைப்பதையோ, விவசாய நடவடிக்கையில் ஈடுபடுவதையோ நிறுத்துமாறு முல்லைத்தீவு மாவட்ட கமநல சேவைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

மேலும் காணி உறுதிப்பத்திரங்களை வழங்கும் அதிகாரிகள் நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட காணிகளை ஆராய்ந்து உறுதிப்பத்திரம் வழங்க வேண்டும் எனவும் கமநல சேவைகள் திணைக்களம் கேட்டுள்ளது. (8)

## பயிற்சி முகாம்

மல்லாவி,ஒக்.29

முல்லைத்தீவு மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் கடந்த 22ஆம், 23ஆம், 24ஆம் திகதிகளில் விளையாட்டு வீரர்களுக்கான பயிற்சி முகாம் ஒன்று யோகபுரம் மகா வித்தியாலயத்தில் நடத்தப்பட்டுள்ளது.

சுமார் நூறு வீரர்கள் கலந்து கொண்ட இந்தப் பயிற்சி முகாமில் கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் ஆகியவற்றுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டன.

பயிற்சியின் இறுதிநாளன்று அதில் கலந்து கொண்டவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. சான்றிதழ்களை துணுக்காய் பிரதேச செயலர் நா.நந்தகுமார் வழங்கினார். (10-322)

# வாய்க்கால் புனரமைப்பு நிறைவுறாததால் குடியிருப்புப் பகுதிக்குள் வெள்ளம்!

கிளிநொச்சி,ஒக்.29

கிளிநொச்சி, சிவநகர் குளத்திற்கான வாய்க்கால் புனரமைப்பு வேலைகள் முடிவடையாதமையினால் கிளிநொச்சி 8ஆம் வாய்க்கால் உருத்திரபுரத்தில் இருந்து இந்த வாய்க்காலூடாகச் செல்லும் மழைவெள்ளம் அப்பகுதி குடியிருப்புப் பகுதிகளுக்குள் புகுந்துள்ளது.

இந்த வாய்க்கால் வேலைகள் உடன் நிறைவேற்றப்படாவிட்டால் இதனூடாகச் செல்லும் வெள்ளம் தேங்கி நின்று மேலும் பல பிரச்சினைகளை ஏற்படுத்தும் என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது பெய்துவரும் மழைகாரணமாக இரத்தினபுரம், 8ஆம் வாய்க்கால் கிராமங்கள் பாரிய பிரச்சினைக்கு உள்ளாகும் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (10-6)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் பட்டதாரிகள் பயிற்சி ஆரம்பவிழா

புதுக்குடியிருப்பு,ஒக்.29

முல்லைத்தீவு மாவட்டப் பட்டதாரிகளுக்கான பயிற்சி ஆரம்பவிழா முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் கடந்த 21 ஆம் திகதி ஆரம்பமானது.

பொதுச்சுடரை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரும் முல்லைத்தீவு மாவட்ட பதில் அரச அதிபருமான விசுவலிங்கம், முல்லைத் தீவு மகாவித்தியாலய உப அதிபர் ஆ.குணநேசன் ஆகியோர் ஏற்றினர்.

தமிழீழத் தேசியக் கொடியினை முல்லைத் தீவுமாவட்ட அரசியற்துறைத் துணைப் பொறுப்பாளர் சின்னண்ணா ஏற்றினார்.

மங்கள விளக்கினை வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசாவும் முல்லைத்தீவு மாவட்டக் கல்விக்கழகப் பொறுப்பாளர் அறிவன்பன், முல்லைத்தீவு மாவட்ட தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் முரளி ஆகியோர் ஏற்றினர்.

முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசா, முல்லைத்தீவு மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் இ.அறிவன்பன், முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைத் துணைப பொறுப்பாளர் சின்னண்ணா, அரச அதிபர் விஸ்வலிங்கம் ஆகியோர் உரையாற்றினர். (4-353)

### உலக தரிசன நிறுவனம்

# முன்பள்ளிச் சிறார்களுக்கு தானியங்கள் வழங்கியது

பரந்தன்,ஒக்.29

உலகதரிசனம் நிறுவனத்தால் பரந்தன் உமையாள்புரம் கிராமத்தில் உள்ள 30 முன்பள்ளிச் சிறார்களுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை போசாக்கை மேம்படுத்துவதற்கான பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

சிறார்களின் போசாக்கிற்கான பழமரக் கன்றுகளுடன் தென்னம்பிள்ளைகள் மற்றும் சிறுதானிய வகைகள், மரக்கறி விதைகள் ஆகியனவே வழங்கப்பட்டன.

உமையாள்புரம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவி வி.சாந்தி தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் உலக தரிசனத் திட்ட இணைப்பாளர் வீபிறேம்குமார், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பரந்தன் பிரதேச இணைப்பாளர் கருணாகரன், உமையாள்புரம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சிவபாதம் மற்றும் முன்பள்ளி ஆசிரியை விஜயலட்சுமி ஆகியோர் கலந்துகொண்டனர்.

சிறார்களின் பெற்றோர்களிடம் இவை கையளிக்கப்பட்டன. (10-202-352)

# வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனம்

## மணல் விநியோக அறிவித்தல்

தவிர்க்க முடியாத காரணத்தால் மணல் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது. ஒரு சில நாள்களின் பின் மீண்டும் விநியோகம் ஆரம்பிக்கப்படும்.

விநியோக ஆரம்பம் பற்றியும் ஒழுங்குகள் பற்றியும் பத்திரிகையில் அறிவிக்கப்படும்.

உபயகதிர்காமம்,
புலோலி. (சி-38538)(26-43-11-45) - நிர்வாகம்.

---

## யா/மானிப்பாய் மெமோறியல் கல்லூரி

(நவோதயா)

168 ஆவது ஆண்டு நிறைவு பெற்றோர் தினம், பரிசளிப்பு

**மெமோறியல் மலர் - 7 வெளியீட்டு விழா- 2004**

இடம் :-கல்லூரி அரங்கு
காலம் :-30~10~2004 சனிக்கிழமை
நேரம் :- பி.ப.2.30 மணி
தலைவர் :- திரு.அ.மு.அருணாசலம் (அதிபர்)
பிரதம விருந்தினர் :- திரு.ப.விக்னேஸ்வரன்
(வலயக்கல்விப் பணிப்பாளர் யாழ்.கல்விவலயம்)
விசேஷ விருந்தினர் :- திரு.அருண் ஆசிரியர்
(துணைப் பொறுப்பாளர், தமிழீழ கல்விக்கழகம், தமிழீழம்)
சிறப்பு விருந்தினர் :-திரு.க.தனபாலசிங்கம,
(கோட்டக்கல்விப் பணிப்பாளர், சண்டிலிப்பாய்)
மலர் வெளியீட்டுரை :- சைவப்புலவர் திரு.சு.செல்லத்துரை
மலர் ஆய்வுரை :- செஞ்சொற்செல்வர் திரு.ஆறு திருமுருகன்
பரிசில் வழங்கல் :-திருமதி தவமணி விக்னேஸ்வரன்

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

(38071)(43-11-45) அதிபர், ஆசிரியர், மாணவர்கள்,
மெமோறியல் சமூகம்.

---

## துயர் பகிர்கின்றோம்

எமது முன்னாள் யாழ்.பல்கலைக்கழக CEFE அலகின் இணைப்பாளரும் தற்போதைய யாழ்.CEFE மேம்பாட்டு நிறுவன செயலாளருமான
திரு.வேலாயுதம் ஈஸ்வரன் அவர்களின் அன்பு மாமனார்

### பஞ்சாட்சரம் சிவஞானம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

CEFE மேம்பாட்டு நிறுவனம்,
கண்டி வீதி, சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.
CEFE மேம்பாட்டு நிறுவனக் குழு.
(38070)(38-43-11-45)

---

## கண்ணீர் அஞ்சலி

தீவக வலய கல்விப்பணிப்பாளர் அமரர்

### பொ.வேணுகோபால வாணிதாசன்



அவர்களது அகால சாவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்று இருக்கும் அன்புத் துணைவியாருக்கும், பிள்ளைகளுக்கும் மற்றும் குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் ஆறுதல்களையும் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தீவகபட்டதாரி பயிலுநர்கள் (இரண்டாம் பிரிவு),
வேலணை சரஸ்வதி வித்தியாலயம்.

(38074)(38-43-11-45)

---

## கண்ணீர் அஞ்சலி



27.10.2004 இல் அகால மரணமடைந்த சொல்விற்பனமும் அவதானமும் நிறைந்த கல்விப் பெருஞ்செல்வன் தீவக கல்விப்பணிப்பாளர் உயர்திரு.

**பொ.வேணுகோபால வாணிதாசன்**

அவர்களின் ஆன்மா சாந்தி பெறவும், அவர்தம் குடும்பத்தார் ஆறுதல் அடையவும் எல்லாம் வல்ல இறையருளை வேண்டிநிற்கின்றோம்.

நலன்புரிச்சங்கம்,
தீவகம் தெற்கு பிரதேச செயலகம், வேலணை.

(சி-38537)(43-11-45)

---

## பரிசளிப்பும் நிறுவுநர் நினைவு தினமும்

வட்டு.இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் நினைவு தினமும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரியின் திறந்தவெளி அரங்கில் நடைபெறவுள்ளன.

அதிபர் ச.இராசலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவிற்கு முதன்மை விருந்தினராக வலி.மேற்கு பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸும் சிறப்பு விருந்தினராக சங்கானைக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் நா.சண்முகசுந்தரமும் கௌரவ விருந்தினராக பொ.சிவசுப்பிரமணியமும் கலந்துகொள்வர். கல்லூரி நிறுவுநர் நினைவுப் பேருரையை ஸ்கந்தவரோதயக் கல்லூரி உபஅதிபர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் நிகழ்த்துவார். (10-202)

## 'செவ்விளக்கு' நாடகம் இன்று மட்டும் நடக்கும்

யாழ்.பல்கலைக்கழக கலைப்பட்ட வளாகத்தில் இன்று முதல் மூன்று தினங்கள் நடைபெறவிருந்த "செவ்விளக்கு" நாடகம் இன்று வெள்ளிக்கிழமை மட்டும் நடைபெறும்

காலநிலை காரணமாக இன்று மட்டும் நாடகம் அரங்கேற்றப்படும் என்றும் ஜனவரி மாத இறுதியில் மீண்டும் இந்நாடகம் அரங்கேற்றப்படும் என்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஏ-13)

---

## கருத்தரங்கு III
## அரசியலில் பெண்கள்

காலம்: 30-10-2004
நேரம்: 11.00 - 1.00

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நேரம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இடம்: அகதிகள் புனர்வாழ்வு நிறுவன கேட்போர்கூடம்

கருத்துரை வழங்குபவர்:
பேராசிரியா திரு. A.V. மணிவாசகர்
*(அரசறிவியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்)*

**அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்**
106, 4ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். (சி-38539)

---

# மரண அறிவித்தல்கள்

## சின்னையா கதிரவேலு



அரியாலை, நாவலடியைப் பிறப்பிடமாகவும் நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா கதிரவேலு நேற்றுமுன்தினம் (27.10.2004) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா - பொன்னம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னத்துரை - கனகம்மாவின் அன்பு மருமகனும் திலகவதியின் அன்புக் கணவரும் சிறிதரன் (பிரான்ஸ்), கலாவதி (பிரான்ஸ்), மேகலா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் உதயகுமாரி, பாலச்சந்திரன், விஜயநாதனின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற தங்கம்மா, தம்பு, அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் செல்லம் காலஞ்சென்ற குணசேகரம் ஆகியோரின் மைத்துனரும் சோபிகா, ஜெனார்த்தனன், ரஜன், பவித்திரா, தர்சிகன், சுமித்திரா அகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2004) வெள்ளிக்கிழமை நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாவலர் வீதி,*
*அரியாலை.*
தகவல்:
(38073)(43-11-45) K.விஜயன் (மருமகன்).

## முத்தையா குணரட்ணம்

(ஓய்வுபெற்ற மின்சாரசபை ஊழியர்)



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா குணரட்ணம் நேற்று (28.10.2004) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் முத்தையா தம்பதிகளின் அன்பு மகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் சுகன்யா (சுமணா), அகல்யா ஆகியோ[illegible] அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2004) வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

*49. வில்வந்தெரு வீதி,*
*கொழும்புத்துறை மேற்கு,*
*அரியாலை.*
தகவல்:
(38079)(34-43-11-45) - குடும்பத்தினர்.

---

# கண்ணீர்க் காணிக்கையும் அஞ்சலியும்



## சுப்பிரமணியம் செல்வராசா

(வாணி ரெக்ஸ் உரிமையாளர், யாழ்ப்பாணம் ~ சாவகச்சேரி)

அவர்களது மரணச் செய்தி கேட்டு நாம் அதிர்ச்சியும், வேதனையும் ஆறா[illegible] துயரும் அடைகின்றோம். அமரருக்கு எமது விழி நீர்க் காணிக்கையைச் செலுத்துவதோடு, பிரிவால் வருந்தி நிற்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரது ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளரும், ஊழியர்களும்,
மகாநதி புடைவையகம், யாழ்ப்பாண மின்னகம்,
மகேஸ் அன்சன்ஸ்.
(சி-38544)(43-11-45)

# கண்ணீர்க் காணிக்கையும் அஞ்சலியும்



## சுப்பிரமணியம் செல்வராசா

(வாணி ரெக்ஸ் உரிமையாளர், யாழ்ப்பாணம் ~ சாவகச்சேரி)

அவர்களின் மறைவு எமக்கு பெரும்அதிர்ச்சியையும் கவலையையும் தருகிறது. இவரது இழப்பு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அன்னாரின் மறைவுத்துயரில் மூழ்கியிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நாமும் துயரில் பங்குகொள்வதுடன் கண்ணீரைக் காணிக்கையாகச் சொரிகின்றோம்.

கணபாலா ஸ்ரோர்ஸ்,
இல.24, மேல்மாடி, யாழ்ப்பாணம்.
(சி-38542)(43-11-45)

# கண்ணீர்க் காணிக்கையும் அஞ்சலியும்



## சுப்பிரமணியம் செல்வராசா

(வாணி ரெக்ஸ் உரிமையாளர், யாழ்ப்பாணம் ~ சாவகச்சேரி)

அவர்களின் மறைவு எமக்குப் பெரும் அதிர்ச்சியையும், வேதனையையும் அளிக்கின்றது. இவரது இழப்பு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அவரின் மறைவால் துயரிலாழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கண்ணீர் காணிக்கையைச் செலுத்துகின்றோம்.

**S.V.N.TRANSPORT**
135, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு -13
(சி-38524)(43-11-45)

## சங்கானைக் கல்விக்கோட்டம்

### சைவ கலாசார மேம்பாட்டு விழாவும் பரிசளிப்பு வைபவமும்

*இடம்:* யா/வட்டு மத்திய கல்லூரி
(ஆரம்பப் பிரிவுப் பாடசாலை)
*காலம்:* தாரண வருஷ ஐப்பசி 14 ஆம் நாள்
30.10.2004 சனிக்கிழமை காலை 8 மணி
*தலைவர்:* திரு.நா.சண்முகசுந்தரம் அவர்கள்
(கோட்டக் கல்விப் பணிப்பாளர், சங்கானைக் கல்விக்கோட்டம்)

(38089)(32-29-13-15)

## 17 ஆம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு 18 - 03 - 1958



இறப்பு 29 - 10 - 1987

### அமரர் அல்பிறட் ஸ்ரீபன் றொபேட்

அன்புடனும் பண்புடனும் எம்மை வளர்த்த
அன்பு அப்பா! நீர் மறைந்து ஆண்டுகள்
பதினேழு சென்றாலும் ஆறவில்லை எம் துயர்.

இல.70/1 பழைய பூங்கா வீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம். (38091)(29-13-15)

அன்பு நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம்



அமரர்
### பொன்னுத்துரை வேணுகோபால வாணிதாசன்

(தீவக வலயக் கல்விப் பணிப்பாளர்)

தீவக மண்ணிற்கு சேவையாற்றவென வல்லைப் பாலமும் பண்ணைப் பாலமும் நாள்தோறும் கடந்து வந்து பல இடர்பாடுகளுக்குள் அரும்பணியாற்றிய உத்தமரே! உங்களைக் காலன் தேடிவந்து காவுகொண்டதேனோ! உங்கள் பிரிவால் எமது கல்லூரிச் சமூகம் மீளாத்துயரில் ஆழ்ந்துள்ளது.

அன்னாரின் திடீர் மறைவினால் துயரில் ஆழ்ந்து போயுள்ள குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/புனித அந்தோனியார் கல்லூரிக் குடும்பம்.
ஊர்காவற்றுறை.
(38089)(29-13-15)

## கண்ணீர் அஞ்சலி

27.10.2004 அன்று அகாலமரணமான
எமது வலயக் கல்விப் பணிப்பாளர்
### பொ.வேணுகோபால வாணிதாசன்

அவர்களுக்கு எமது இதயபூர்வ அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யா/பாலாவோடை இ.த.க.பாடசாலை,
காரைநகர். (38088)(29-13-15) - பாடசாலைச் சமூகம்.



## கண்ணீர் அஞ்சலி

எமது தீவக வலயக் கல்விப் பணிப்பாளர்
அமரர்
### பொ.வேணுகோபால வாணிதாசன்

அவர்களின் திடீர் மறைவுச் செய்திகேட்டு ஆழ்ந்த அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரத்தையும் அடைவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரின் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

யா/நாரந்தனை றோ.க.
மகா வித்தியாலயம், ஊர்காவற்றுறை.

அதிபர், ஆசிரியர்கள்,
சிற்றூழியர், மாணவர்கள்.

(38085)(32-13-15-29)

## மரண அறிவித்தல்

### அமரர் சிதம்பரநாதன் வைத்தியநாதன்

(யாழ்ரன் மார்க்கட் முகாமையாளர், கனடா)
(முன்னாள் லங்கா சிமென்ற் STORE KEEPER)

நீர்வேலி மத்தியைப் பிறப்பிடமாகவும் கோப்பாய், இருபாலையை வதிவிடமாகவும் கனடாவில் வசித்தவருமாகிய சிதம்பரநாதன் வைத்தியநாதன் அவர்கள் 27.10.2004 அன்று ரொறன்றோவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரநாதன் - தவபாக்கியம் தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற சிவானந்தம், புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும் ஆனந்தேஸ்வரி (ராணி - முன்னாள் சங்கீத ஆசிரியை, வட இந்து மகளிர் கல்லூரி - கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும் துரைசிங்கம் (கனடா), இராஜேஸ்வரி (இலங்கை), காலஞ்சென்ற சுந்தரநடேசன், காலஞ்சென்ற முருகேசபிள்ளை, பரமேஸ்வரி (இலங்கை), கதிர்காமநாதன் (NEW JERNEY, U.S.A.) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தயானந்தன், நித்தியானந்தன், நிர்மலானந்தன், கருணானந்தன் (கண்ணன் - யாழ்ரன் மார்க்கட் உரிமையாளர்), காலஞ்சென்ற P.காராளசிங்கம் (வருமானவரி ஆலோசகர்), செல்வநாயகம், சிவனேஸ்வரி, ஞானேஸ்வரி, குகனேஸ்வரி, புவனேஸ்வரி, பராசக்தி, ரஞ்சி, சறோஜினிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் யோகேஸ்வரி, ஜெயா, சபாநாதன், கலா, விஜி, செல்வேந்திரக்குமார், ரவீந்திரராஜா ஆகியோரின் அன்புச் சகலனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (30.10.2004) சனிக்கிழமை கனடா St.Jhons மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*82, HARNES CIRCLE*
*MARKHAM*
*ONTARIO L3, SIX 7*
*CANADA.*
*T.P. : 905-944-9205* (சி-38548)(29-13-15)

தகவல்:
இந்திரன் காராளசிங்கம் (மருமகன்),
15, ஜானகி லேன், பம்பலப்பிட்டி.
*T.P. : 0112 583499*

## முன்பள்ளி நிறுவ நிதி ஒதுக்கீடு

நெடுந்தீவு,ஒக்.29

நெடுந்தீவுப் பிரதேச சபையில் முன்பள்ளி ஒன்றினை அமைப்பதற்கென பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபா நிதியினை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் ஒதுக்கியுள்ளார்.

(எ-112)

## நவீன தொடர்பு...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளோம். செயல்முறையில் இவைகளைப பார்த்ததன்மூலம் மனத்தில் கூடியளவு பதியக்கூடியதாக இருக்கின்றது.

நாம் 2006ஆம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றுபவர்கள். எமக்கு வேண்டிய பல விடயங்கள் இங்கு இருக்கின்ற போதிலும் 2005ஆம் ஆண்டில் பரீட்சைக்குத் தோற்றுபவர்களுக்கு வேண்டிய அனைத்து விடயங்களும் இங்கு இருக்கின்றன.

நாங்கள் பல கிலோமீற்றர் தூரம் இருந்துவந்த போதிலும், இங்கு வந்த பின்னர் இக்கண்காட்சியின் விடயங்கள் எமது பிரயாணத்தில் இருந்த களைப்பைக்கூட போக்கிவிட்டது.

## SAAMSTECH

SAAMSTECH ஆல் நடத்தப்படும் நாடு தழுவிய தேசிய ஆங்கில டிப்ளோமா பரீட்சை நாளை (30.10.2004) சனிக்கிழமை காலை 10 மணிமுதல் ஒரு மணி வரை நடைபெறும். பரீட்சை மையங்கள் பற்றிய விவரம் இன்றைய உதயனில் 04 ஆம் பக்கத்தில் உள்ளது. (சி-38545)(2913-15)

## கண்ணீர் அஞ்சலி



அமரர்
### பொ.வேணுகோபால வாணிதாசன்

தீவக கல்விப் பணிப்பாளரும் ஹாட்லிக் கல்லூரியின் முன்னாள் அதிபருமாகிய அமரர் பொ.வேணுகோபால வாணிதாசன் அவர்களது அகாலமறைவுச் செய்தியறிந்து ஆற்றொணாத் துயருற்றோம். அவர் தம் மனைவி, பிள்ளைகள், உறவினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சிதம்பரப்பிள்ளை புத்தகநிலையம், நெல்லியடி.

(சி-38547)(32-13-15-29)

## தவறிவிட்டது

28.10.2004 சங்கானையில் இருந்து யாழ்.வந்த மினிபஸ்ஸில் ஆ.சபாநாதன் என்பவருடைய வேலணை கிராம அலுவலர் என்ற அ.அட்டையும் 500-6700 இல. மோட்டார் சைக்கிள் ஆவணங்களும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சங்கானைப் பிரதேச செயலகத்தில் அல்லது கே.கே.எஸ்.வீதி, சத்திரத்துச் சந்தியிலுள்ள வேணி களஞ்சியத்தில் தயவுசெய்து ஒப்படைக்கவும்.

ஆ.சபாநாதன்
நிர்வாக கிராம அலுவலர்
பிரதேச செயலகம், சங்கானை.

(38083)(32-13-15-29)


**ராஜா** யாழ்ப்பாணம்

3 ஆவது ஜனத்திரள் வாரம்
இப்பொழுது இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக
ரவிகிருஸ்ணா, சோனியா அகர்வால் நடிப்பில்
**7/G ரெயின்போ காலனி** (ரீயல்)
காட்சிகள்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ரிக்கெட் முற்பதிவு செய்துகொள்ளலாம். (சி-37987)

**நாகம்ஸ் சினிமா** சுன்னாகம்

இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரே தின வெளியீடாக ஸ்ரீகாந்த்,
ஸ்நேகா மற்றும் பலர் நடிப்பில்
3 ஆம் திகதி வரையும்
**போஸ்** காட்சி நேரம் : 11.00, 3.00, 7.00, (பு.நே)
(C-37410)



**நிரஞ்சனாஸ்** சங்கானை

விக்ரம்,ப்டிதா, விவேக்
நடித்த
**தில்** (ரீல்ஸ்)
காட்சி நேரம்:
11.00, 2.45, 6.00
(புதியநேரம்)
TYCUS வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 பு.நே.

**சிற்றி சினிமா** பண்டத்தரிப்பு

M.G.R., ராதா சலூஜா, வீரப்பா நடித்த
**இதயக் கனி**
காட்சிகள் தினசரி 3.00, 7.00 (புநே)
சனி, ஞாயிறு 11.00, 3.00, 7.00 (புநே)
(ரீல்ஸ்)
1 ஆம் திகதிமுதல் ஒற்றன்
(சி-37902)


## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் செல்வராசா

( செல்வம் பான்சி, வாணி ரெக்ஸ் உரிமையாளர்)



சரசாலையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் செல்வராசா அவர்கள் 27.10.2004 புதன்கிழமை காலமானார்.

அன்னார் தங்கமணியின் அன்புக் கணவரும் மணிவர்ணன் (வாணி ரெக்ஸ்), மணிமாறன் (லண்டன்), ஜெயராஜன் (மொறட்டுவ பல்கலைக்கழகம், பொறியியல்பீடம்), சுதாகரன் (லண்டன்), கலாவாணி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் திருமதி இராசம்மா, திருமதி சரஸ்வதி (மல்லாவி), திருமதி தவமணி (முத்தையன்கட்டு), தர்மலிங்கம் (லிங்கம் ரேடேஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் பொன்னுத்துரை, இராசையா (மல்லாவி), சரவணமுத்து (முத்தையன்கட்டு), திருமதி சோதிப்பிள்ளை (சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் திருமதி சோபினி (ஆசிரியை), திருமதி ஜெயராஜி (யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடம்) ஆகியோரின் அருமை மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2004) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது சாவகச்சேரி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கென்ஸ்மன் லேன்,*
*டச்சு வீதி, சாவகச்சேரி.*
(38087)(29-13-15)

தகவல்:
மணிவர்ணன்
(மகன் - வர்ணன் - வாணி ரெக்ஸ்)

### சுந்தரம்பிள்ளை சபாநாதன்

(சோதி - கணக்காளர் - லிங்கநாதன் புடைவையகம்)



காரைநகர், சக்கலாவோடையைப் பிறப்பிடமாகவும் 37/5 முதலாம் ஒழுங்கை, பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம்பிள்ளை சபாநாதன் நேற்று (28.10.2004) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை-நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் தங்கோடை விநாயகசிவம்பிள்ளை,- தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் சிவகௌரியம்மாவின் அன்புக் கணவரும் உமாதேவியின் (M.C.S. நிறுவனம்) அன்புத் தந்தையாரும் செந்தில்நாதன், நாகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் சிவஞானவதி, பராசக்தி சிவசிதம்பரம், கற்பகவதி ச தாசிவம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (31.10.2004) காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*37/5, முதலாம் ஒழுங்கை,*
*பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.* (38086)(29-13-15)

தகவல்:
மனைவி, மகள்.

### திருமதி இராசம்மா நடராசா



சித்தங்கேணியைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வதிவிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற ஓய்வுபெற்ற கந்தர்மடம் பழைய விதானையார் வைத்திலிங்கம் நடராசா அவர்களின் அன்புப் பாரியார் திருமதி இராசம்மா நடராசா காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஞானாம்பாளின் மைத்துனியும் ஸ்ரீகாந்தா (ஓய்வுபெற்ற உதவி ஆணையாளர், கலால் திணைக்களம்), வசந்தா, சாந்தா, ஸ்ரீமகேஸ்வரி (ஜேர்மனி), ஸ்ரீவிஜயா (இலங்கை வங்கி, காங்கேசன்துறை), சோமாவதி, சத்தியா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மீனாம்பிகை, கணேசராசா (பொறியியலாளர், நீர்ப்பாசன திணைக்களம், யாழ்ப்பாணம்), தவராசா (ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்), சிவராசா (ஜேர்மனி), யோகேஸ்வரி (இலங்கை வங்கி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்), அருள்கந்தராசா (சிற்றம்பலம் அன் சன்ஸ், கொழும்பு), பாஸ்கரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும் முரளி, கிர்ஷா, பிரகாசினி, அமுதன், அமுதா, சுசானி, [illegible], தாரணி, கிருஷ்ணகுமார், பாமினி, மைதிலி, திவ்யன், ரூபிலியா, துளசி, ராஜேஸ், ராகவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2004) வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஊழியர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*146, அரசடி வீதி,*
*கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.* (38080)(29-13-15)

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

### ஆறுமுகம் கந்தசாமி (கடைக்கார சாமியார்)

காரைநகர், பலகாட்டைப் பிறப்பிடமாகவும் தற்போது வேம்படியில் வசித்தவருமான ஆறுமுகம் கந்தசாமி நேற்று (28.10.2004) வியாழக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - பார்வதி தம்பதிகளின் அன்பு மகனும் வேலுப்பிள்ளை - மீனாட்சி தம்பதிகளின் மருமகனும் சிவயோகத்தின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2004) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைநகர் நீலகிரி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வேம்படி, காரைநகர்.* (38090)(29-13-15)

தகவல்:
மனைவி.

### நாகமுத்து திருநாவுக்கரசு

(புன்னாலைக்கட்டுவன் தெற்கு)

புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த ஓய்வுபெற்ற கல்வித் திணைக்களக் கணக்காளர் நாகமுத்து திருநாவுக்கரசு நேற்று (28.10.2004) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புன்னாலைக்கட்டுவன் தெற்கு,*
*சுன்னாகம்.* (38094)(29-13-15)

தகவல்:
மனைவி.

**ஆனைக்கோட்டைப் படுகொலைச் சம்பவம்**

# பெற்ற தாயை வெட்டிப் புதைத்த மகள் மனநோயாளியா எனக் கண்டறிய உத்தரவு

யாழ்ப்பாணம்,ஒக்.29

ஆனைக்கோட்டையில் தாயைக் கொலை செய்து புதைத்த மகள் உண்மையில் மன நோயாளியா எனக் கண்டறிய சட்டவைத்திய அதிகாரி முன்னிறுத்துமாறு மல்லாகம் நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த பாவிலுப் பிள்ளை லோறன்சியா என்ற தனது தாயைக் கொலை செய்தார் என்று அவரது மகளான பத்திரிநாதன் கொலஸ்ரிக்கம்மா கைது செய் யப்பட்டிருந்தார்.

அவர் நேற்று மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் முன் ஆஜர் செய்யப்பட்டார்.

பிரஸ்தாப பெண் மனநோயால் பீடிக்கப்பட் டுள்ளாரா என்பதைப் பரிசோதனை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி யாழ்.சட்டவைத்திய அதிகாரிக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

எதிர்வரும் 9 ஆம் திகதிவரை அவரை விளக்கமறியலில் வைக்கும்படியும் நீதிவான் உத்தரவிட்டார். (எ-3)

## 2006 டிசெம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சத்தியப்பிரமாணமும் செய்தார். அதன்படி, அவ ரது அந்தப் பதவிக் காலம் 2005 டிசெம்பரில் முடிவுறுகிறது. அதையே ஐ.தே.கட்சி திரும்பத் திரும்பக் கூறுகின்றது.

ஆனால் -

1999 டிசெம்பரில் இரண்டாவது பதவிக் காலத்துக்கான தேர்தல் நடந்தாலும், 2000 டிசெம்பர் வரை தமது முதலாவது பதவிக்காலத் தைத் தாம் தொடர்ந்தார் என்றும் -

1999 டிசெம்பரில் கிடைத்த வெற்றியின்படி இரண்டாவது பதவிக் காலத்தை 2000 ஆம் ஆண்டு கடைசியில் பிரதம நீதியரசர் முன்னி லையில் இடம்பெற்ற - பகிரங்கப்படுத்தப்படாத - ஒரு சத்தியப்பிரமாண நிகழ்வு மூலம் தாம் ஆரம்பித்தார் என்றும் -

எனவே, அதன்படி தமது இரண்டாவது பத விக் காலம் 2006 டிசெம்பரிலேயே முடிவடை கின்றது என்றும் -

ஜனாதிபதி குமாரதுங்க தரப்பில் இப்போது கூறப்படுகின்றது.

அதையே தற்போது அமைச்சரவைப் பேச் சாளர் மங்கள சமரவீர அடித்துக்கூறியிருக்கின் றார்.

எனினும் -

பதவியிலிருக்கும் ஜனாதிபதி, தமது ஒரு பதவிக் காலத்தின் நான்கு ஆண்டுகள் முடி வடைந்த பின்னர், ஆறு ஆண்டுகள் முடிவ டைவதற்கு இடையில் தாம் விரும்பும் எந்நேரத் திலும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு அழைப்பு விடுக்கமுடியும்.

அந்தவகையில், ஜனாதிபதி குமாரதுங்க 2006 டிசெம்பருக்கு முன்னர் தமக்கு விரும் பிய எந்தவேளையிலும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு அழைப்பு விடுக்கலாம். அது அவ ரின் தீர்மானத்தைப் பொறுத்தது - என்றார் அமைச்சர் மங்கள சமரவீர.

ஆனால் -

ஒரு ஜனாதிபதியின் ஆறு ஆண்டு காலப் பதவி முடிவடையும்போது, அடுத்த தேர்தலுக்கு அழைப்பு விடுக்கவேண்டிய பொறுப்பும் அதி காரமும் தேர்தல் ஆணையாளரைச் சேர்ந்தது.

அந்தவகையில், ஜனாதிபதி குமாரதுங்கவின் இரண்டாவது பதவிக்காலம் அவர் பகிரங்க மாகச் சத்தியப் பிரமாண நிகழ்வை நடத்திய 2000ஆம் ஆண்டு ஜனவரியிலிருந்து ஆரம்பமா கின்றது என தேர்தல் ஆணையாளர் கருதுவா ரேயானால் அவர், ஜனாதிபதியின் கருத்து எதற்கும் காத்திராமல் 2005 டிசெம்பரில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான அழைப்பை - அறிவிப்பை - உரிய காலத்தில் தம்பாட்டில் விடுப்பார் என்பது குறிப்பிடத்தக் கது.

1999 டிசெம்பர் தேர்தலில் வெற்றியீட்டிய சந்திரிகா குமாரதுங்க, அந்தப் பதவிக்காலத்தை 2000ஆம் ஆண்டு பிற்பகுதியில்தான் ஆரம்பித் திருந்தாரேயானால், அப்படி அவர் காலம் தாழ்த்தி பதவிக்காலத்தை ஆரம்பிக்கவிருப்பது குறித்து தேர்தல் ஆணையாளருக்கு நேரத்து டனேயே தெரிவிக்கப்பட்டிருக்கவேண்டும்.

ஏனெனில் -

ஜனாதிபதித் தேர்தல் ஒன்றில் வெற்றியீட் டிய ஒருவர் அந்தப் பதவியைப் பொறுப்பேற்க முன்னர் இறந்தால் அல்லது பதவியேற்க முடி யாமல் போனால் புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்ய மீண்டும் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்கிறது சட்டம்.

அதேவேளை, அவர் பதவியேற்ற பின்னர் இறந்தால் அவரது எஞ்சிய பதவிக்காலத்துக்கு ஒருவரை ஜனாதிபதியாக நாடாளுமன்றம் தெரிவு செய்யவேண்டும்.

ஜனாதிபதி பிரேமதாஸ உயிரிழந்ததும் அவ ரது எஞ்சிய பதவிக்காலத்துக்கு ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க பதவி வகித்தது இப்படித்தான்.

எனவே, 1999 டிசெம்பர் தேர்தல் தினத்தி லிருந்து, தாம் அந்தத் தேர்தல் வெற்றி மூல மான பதவிக்காலத்தை 2000 இறுதியில் ஏற் றார் எனக் கூறப்படும் காலம் வரையில் இரண் டாவது பதவிக் காலத்தைத் தாம் ஆரம்பிக்க வில்லை என்பதை தேர்தல் ஆணையாளருகக்கு ஜனாதிபதி குமாரதுங்க தெரிவித்திருந்தாரா? என்றும் -

அக்காலப்பகுதியில் அவரது உயிருக்கு ஏதும் நடந்திருந்தால் - அல்லது ஜனாதிபதி யாகப் பதவிவகிக்கமுடியாத நிலை அவ ருக்கு ஏற்பட்டிருந்தால் - அல்லது பதவிப் பொறுப்பிலிருந்து அவர் விலகியிருந்தால் - புதிய ஜனாதிபதியைத் தெரிவுசெய்ய மீண்டும் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று தேர்தல் ஆணையாளர் அப்போது அறிந்திருந்தாரா என் றும் -

தற்போது சட்டத்துறையில் கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

2006 டிசெம்பர் வரை தமது பதவிக்காலம் உள்ளது என்ற ஜனாதிபதியின் கருத்து பெரும் சட்ட நெருக்கடியை ஏற்படுத்தும் என விடயம றிந்த வட்டாரங்கள் கூறுகின்றன. (எ-க-ரி-7)

## பாலாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிருக்கும் கருத்துத் தொடர்பாக அரசின் நிலைப் பாடு என்னவென்று செய்தியாளர்கள், அமைச் சர் மங்கள சமரவீரவிடம் கேட்டனர். அதற்கு அவர் கூறியதாவது:-

இதுகுறித்து பாலசிங்கம் அறிக்கை எத னையும் வெளியிடவில்லை.

அவர் தமது புதிய புத்தகத்தில் இதுபற் றிச் சில கருத்துக்களை வெளியிட்டிருக்கின் றார் என்று சில செய்திகள் வெளியாகியுள்ளன. அவரின் புத்தகம் எனக்குக் கிடைக்கவில்லை. நான் அதை வாசிக்கவில்லை. அப்படியிருக்க இந்தச் செய்திகளின் அடிப்படையில் நான் கருத் துக்கூறமுடியாது.

ஆனால், இவ்விவகாரங்களில் அனுசரணை யாளர்களான நோர்வேத் தரப்பு ஊடான கருத் துக்கள், தகவல்களுக்கே நாம் முக்கியத்தும் கொடுக்கவேண்டும்.

பொதுவாக, ஒஸ்லோ உடன்பாட்டின் பிர காரம் சமஷ்டி அடிப்படையில் தீர்வுகாண்பது குறித்தே பரவலாகப் புலிகள் பேசிவருகின்ற னர். அதுவே அவர்களின் நிலைப்பாடு என நாம் நம்புகின்றோம். இதற்கு மாறான நிலைப் பாடு எதனையும் நோர்வே அனுசரணையாளர் கள் ஊடாகப் புலிகள் வெளிப்படுத்தவில்லை.

உத்தியோகபூர்வமாகப் புலிகள் வெளிப் படுத்தாத விவகாரம் குறித்து நாம் கருத்து வெளியிடுவது பொருத்தமற்றது - என்றார் மங் கள சமரவீர. (எ-க)

## அரசியல்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முயற்சிகள் குறித்தும் அவர் விளக்கினார். இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவரும் இந் தச் சந்திப்பில் கலந்துகொண்டார்.

அதன் பின்னர் ஜப்பானியத் தூதரகத்தில் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் களைச் சந்தித்துப் பேசினார் அகாஷி.


மாலையில், முஸ்லிம் காங்கிரஸ் தலை வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமை அவரது இல்லத்தில் சந்தித்துச் சமாதான முயற்சிகள் தொடர்பாக அவர் கலந் துரையாடினார். இச்சந்திப்பில், முஸ்லிம்களின் சமகால அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயற்சிகளை எடுப்பது தொடர்பாக ஓர் இணக்கப்பாட்டுடன் அழுத்தக் குழுவாகச் செயற் படும் நோக்கிலேயே முஸ்லிம் காங்கிரஸ், நுஆ கட்சியுடன் இணைகின்றது. அதற்காக இரண்டு கட்சிகளும் இரண்டறக்கலந்துவிட்டன என்று அர்த்தமல்ல என ஹக்கீம் அகாஷியிடம் விளக் கினார்.

சமாதானப் பேச்சுக்களில், முஸ்லிம்கள் தனித்தரப்பாக எச்சந்தர்ப்பத்தில் கலந்துகொள் வது என்பது குறித்தும் தான் அகாஷியுடன் ஆராய்ந்தார் என்று ஹக்கீம் கூறினார். தமது தனித்தரப்புக் கோரிக்கை குறித்து மீளாய்வு செய்யவேண்டும் என்றுதான் ஜனாதிபதி தெரி வித்திருப்பதை ஏற்கமுடியாது என்று சுட்டிக் காட்டினார் என்றும் அவர் மேலும் கூறினார்.

அகாஷி இன்று, ஜே.வி.பி. தலைவர் சோம வன்ஸ அமரசிங்கவைச் சந்தித்துப் பேசவுள் ளார். ஜே.வி.பியின் வேண்டுகோளின் பேரிலேயே இந்தச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. கடந்த முறை அகாஷி இலங்கை வந்தபோது அவரைச் சந் திக்க ஜே.வி.பி. தலைவர்கள் மறுத்துவிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கிழக்கின் தற்போதைய நிலை குறித்து ஆராய்வதற்காக நாளை சனிக்கிழமை அகாஷி திருகோணமலைக்கும் மட்டக்களப்புக்கும் செல்ல வுள்ளார். ஞாயிற்றுக்கிழமை அவர் கிளிநொச்சி சென்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வ னைச் சந்தித்துப் பேச்சு நடத்துவார். இதற்கு முன்னதாக, இன்று அல்லது நாளை தமிழ்ச்செல்வன் வன்னி திரும்புவார் என்று தெரி கின்றது. (எ-க-ரி-7)

(38081)
NEW SCIENCE COLLEGE
காரந்தப்புலம்
SAT, SUN
9.00-10.00
ஆரம்பம்:
30-10-2004
By:
M.கருணாநிதி



ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்த போது.....

## பேச்சு முயற்சியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசின் வரைவு ஒன்றும் இன்னும் புலிகளால் நிராகரிக்கப்படாமல் நிலுவையில் இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றார். அப்படி இருந்தால் அதுவும் நல் லது. எல்லாவற்றையும் பேச்சு மேசையில் நாம் பார்ப்போம்.

"பேச்சு தொடங்கும்போது எல்லோரும் தமக்குத் தமக்கென ஒவ்வொரு யோசனைக ளோடு வருவர். நாம் பேச்சு மேசையில் ஆராய்ந்து தீர்வு காணலாம்" - என்றார் அமைச்சர் சமரவீர.

## பேச்சு மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசின் பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. எதிர்க் கிறது. இந்நிலையில், பேச்சுக்களை ஆரம்பிக் கத் தேவையான செயற்பாடுகள் எதையும் ஜனாதிபதி முன்னெடுக்கவில்லை. ஆனால், பேச் சுக்களுக்குப் புலிகள் தயாராக இல்லை என்று குற்றஞ்சாட்டுகின்றார்.

★ டோக்கியோ கூட்டத்தில், வடக்கு - கிழக்கில் மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்ள ஒதுக்கப்பட்ட நிதி இன்னும் கிடைக்கவில்லை. இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை உரு வாக்கப்பட்டால்தான் இந்த நிதி கிடைக்கும். தமிழ் மக்களுக்கு நிதி கிடைக்கக்கூடாது என்ப தற்காகவே அரசு பேச்சை ஆரம்பிக்கப் பின்னடிக் கின்றது. சர்வதேச சமூகம் இதை உணர்ந்து செயற்படவேண்டியது அவசியம்.

★ பேச்சுக்கள் ஆரம்பிக்காவிட்டால், சர்வ தேசம் வழங்க முன்வந்த நிதியைத் தமிழர்கள் தமது புனர்வாழ்வுக்குப் பயன்படுத்த முடியாத நிலையே ஏற்படும்.

★ ஒஸ்லோ பிரகடனம் என்பது இலங்கை யில் சமஷ்டித் தீர்வு அடிப்படையில் இனப்பிரச் சினைக்கு முடிவுகாணலாம் என்பதை உறுதிப் படுத்துகின்றது. பேச்சுக்களை ஆரம்பித்து, இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை உருவாக்கி, அதைச் செயற்படுத்தி பின் நிரந் தரமான சமஷ்டித் தீர்வு பற்றிப் பேசலாம்.

★ கடந்த காலங்களில் இல்லாத ஒரு நிலைமை இப்போது உருவாகியுள்ளது. இடைக் காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைவின் அடிப் படையில் பேச்சை ஆரம்பித்தால் ஆதரவு தரு வோம் எனப் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே. கட்சி கூறியுள்ளது. இச்சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி அரசு பேச்சை ஆரம்பிக்கவேண்டும்.

★ சமாதானத்துக் கும் நல்லெண்ணத் துக்குமான தேசிய ஆலோசனைக் கவுன் ஸிலில் அங்கம் வகிக்க தமிழ்க் கூட் டமைப்பு மறுத்துள் ளது. பேச்சுக்களை ஆரம்பிக்காமல், இத்த கைய கவுன்ஸில்கள் தேவையில்லை பேச்சை ஆரம்பித்தபின் அதற்கு ஆலோசனை வழங்க இத்தகைய சபைகளை அமைக்க லாம்.

- இப்படிக் கூட்ட மைப்பினர் தெரிவித்த விடயங்களுக்குப் பதில் அளித்த அகாஷி, பேச்சுக்கள் மீள ஆரம்பிக்கப்படவேண் டும் என்பதே தமது நாட்டின் நிலைப்பாடு. பேச்சுக்கள் விரைவாக ஆரம்பிக்கப்பட வேண் டியதன் அவசியத் தைச் சகல தரப்பிட மும் பிரஸ்தாபித்துள் ளோம் - என்றார்.

டோக்கியோவில் ஒதுக்கப்பட்ட நிதி இலங்கை அரசுக்கு வழங்கப்பட்டுவருவதாக வெளிவரும் தகவல் களில் எவ்வித உண்மை யும் இல்லை. சமாதா னப் பேச்சுக்கள் ஆரம் பிக்கப்படும்போது, அதன் முன்னேற்றத் தைப் பொறுத்து நிதி வழங்கப்படும் என்றும் அகாஷி கூட்டமைப் பினரிடம் தெரிவித் தார். (எ-க-3)

## மாணவர்களுக்கு!

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெற வுள்ள ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு உதய னில் வெளியாகிவரும் வினாத்தாள்களின் வரிசையில் இன்றைய உதயனில் ஆங்கிலம் பகுதி I வினாத்தாள் வெளியாகியுள்ளது. உங்கள் பிரதியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

## பதவி ஆசையாலும்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதியான அமரர் ஜே.ஆர்.ஜயவர்த்தன காலி முகத்திடலில் பொதுமக்கள் முன் பகிரங்கமா கவே பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

இரண்டாவது தடவையாக ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட அமரர் ஆர்.பிரேமதாஸ கண் டியில் எண்கோண மண்டபத்தில் பகிரங்கமா கவே பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

அதேவழியில் சந்திரிகா குமரதுங்கவும் பகி ரங்கமாகவே பதவிப் பிரமாணம் செய்துகொண் டார். இது சர்வதேச சமூகமும் அறிந்த உண்மை.

ஆனால், இரண்டாவது தடவையாகவும் இர கசியமாகப் பதவிப்பிரமாணம் செய்துகொண்டேன் என்று அவர் கூறிக்கொள்வதுதான் ஒன்பதாவது அதிசயம்.

ஜனாதிபதி தாம் இரகசியமாகப் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார் என்று கூறும் காலகட்டத்தில் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்தான் அரசமைப்பு விவகார அமைச்சராக இருந்தார் என்பதை ஜனாதிபதி மறந்துவிட்டார் போலும்.

ஆனால், அரசமைப்பு விவகாரத்துக்குப் பொறுப்பான அமைச்சர் பேராசிரியர் பீரிஸுக்கோ அல்லது அமைச்சரவைக்கோ தெரியாமல் அவர் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார் என்று கூறு வதை எவரால் நம்ப முடியும்? இல்லை, அரச மைப்புத்தான் அப்படிச் சுழிப்பதற்கு இடம் கொடுக்குமா?

ஜனாதிபதியின் அதிகார ஆசையும் தொடர்ந்து பதவியில் இருக்கவேண்டும் என்ற வெறியுமே இப்படி அவரைப் பித்தலாட்டம் செய்யத் தூண்டு கின்றன. அதற்கு மங்கள சமரவீர மத்தளம் அடிக்கின்றார்.

இதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கமாட் டோம் என்றும் திஸ்ஸ அத்தநாயக்க சூளுரைத் தார். (எ-க)

## மரண அறிவித்தல்கள்



### நடராஜா யோகேஸ்வரன்

(பொன் குஞ்சு)

சன்னதி வீதி, தம்பாலை, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் மாதாங்கோவிலடி, அல்வாய் தெற்கு, அல்வாயை வதிவிடமாகவும் கொண்ட நடராஜா யோகேஸ்வரன் (பொன் குஞ்சு) 26.10.2004 அன்று அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் இரத்தினகுமாரியின் அன்புக் கண வரும், கார்த்திகா, சஜந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற நடராஜா, இரத்தினம் ஆகியோரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற இரத்தினம்-ஆரியமாலா ஆகியோரின் மருமகனும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு (குட்டி), அற்புதராஜா (ராசு - கரன் இன்டஸ்றீஸ், உடுப்பிட்டி), முத்துராஜா (கனடா), விக்னேஸ்வரன் (அப்பன், விக்ன இன்டஸ்றீஸ், உடுப்பிட்டி), மீனலோஜினி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் இரத்தினராஜா (ஜேர்மனி), இரத்தினகுமார் (பிரான்ஸ்), இரத்தினேஸ்வரன் (அல்வாய்), சத்திய தேவி (உடுப்பிட்டி), மாலதி (கனடா), பத்மினி (உடுப்பிட்டி), வைரவ நாதன் (இந்தியன் ஓவசீஸ் வங்கிக் கிளை, பம்பலப்பிட்டி) ஆகி யோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது அல்வாய் இல்லத்தில் நாளை (30.10.2004) சனிக்கிழமை பி.ப. 2மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பங்கு வேம்படி இந்து மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*மாதாங் கோவிலடி,*
*அல்வாய் தெற்கு, அல்வாய்.* (38095)(32-13-15)

தகவல்:
குடும்பத்தினர்.

### பாவிலுப்பிள்ளை லோறன்சியா

இத்தாவில், பளையை நிரந்தர முகவரியாகவும் உயரப்புலம் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட பாவிலுப்பிள்ளை லோறன்சியா (26-10-2004) செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29-10-2004) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணிக்கு உயரப்புலம் அடைக்கல மாதா கோவிலில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் காக்கைதீவு சேமக்காலையில் நல்லடக்கஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அருட் தந்தையர்கள், அருட்சகோதர சகோதரிகள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*உயரப்புலம்,*
*ஆனைக்கோட்டை.* (சி-38550)(32-13-15)

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.10.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.